454

454

வெளியீடு தொகை 18.

# (Scientific Method and Ignorant Beliefs)

# மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

(இரண்டாம் பாகம்)

ஆக்கியோன்:

M. சிங்காரவேலு B. A., B. L.,

வெளியிடுவோர்:

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்,
ஈரோடு.

R34
N34·2
173486

1934. [அணா 5

வெளியீடு 18.

(Scientific Method and Ignorant Beliefs)

# மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

(இரண்டாம் பாகம்)

ஆக்கியோன்:

M. சிங்காரவேலு B. A., B. L.,

வெளியிடுவோர்

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.,

ஈரோடு.

1934

# முகவுரை.

"மெஞ்ஞான முறையும், மூடநம்பிக்கையும்" என்னும் இரண்டாம் பாகமாகிய இப்புத்தகமானது சென்னை தோழர் M. சிங்காரவேலு B.A,B.L., அவர்களால் எழுதப்பட்டதாகும். இது எழுத நேர்ந்ததின் அவசியம் என்னவென்றால் தோழர் சிங்காரவேலு அவர்களால் முன் எழுதப்பட்ட "கடவுளும், பிரபஞ்சமும்" என்னும் புஸ்தகமானது மக்களிடையில் ஒரு பரபரப்பை உண்டாக்கி விட்டதுடன் பொது ஜனங்கள் பல மூலைகளிலிருந்தும் தோழர் சிங்காரவேலு அவர்களைச்சரமாரியாகக்கேள்விகள் கேட்க ஆரம்பித்து சுமார் 6 மாத காலம் அநேக விஷயங்களைப்பற்றிக் கேட்டு வந்தார்கள். அக்கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் தோழர் சிங்காரவேலு அவர்கள் தக்க பதில் அளிக்குமுறையில் எழுதியதாகும். அந்தக் கேள்விகள் இன்னும் நமது பொது மக்கள் பலரிடை இருந்து வருவதாலும், தோழர் சிங்காரவேலு அவர்களின் விடை அநேக விஞ்ஞான (சைன்ஸ்) ஆராய்ச்சியைப் பொறுத்து மக்களுக்குச் சுலுவில் ஞானமூட்டப்படத் தக்கதாயிருப்பதாலும் அவற்றைத்தொகுத்து ஒரு புத்தகருபமாய் வெளியிட்டால் மிகவும்பயன் உண்டாகும்என்று கருதி ஈரோடு பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகத்தாரை நாம் வேண்டிக்கொண்டதற்கிணங்க அவர்கள் இதற்கு முன்முதல்பாகத்தை வெளியிட்டார்கள். மற்ற அத்தியாங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து இப்போது இரண்டாம்பாகமாக வெளியிட்டிருக்கிறார்கள். இதை மூடநம்பிக்கையில் கட்டுப்பட்டு விடுதலை பெற முடியாமல் தவிக்கும் நமது இந்திய மக்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பயன் பெருமாறு வேண்டுவதுடன், ஈரோடு பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தாருக்கும் எமது நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

ஈரோடு,
11-8-34.

ஈ. வெ. இராமசாமி.

உண்மை விளக்கம் பிரஸ்,
ஈரோடு.

# (Scientific Method and Ignorant Beliefs.)

# மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

---

## மாய வித்தையின் ஆபாசம்.

---

## 13-ம் அத்தியாயம்.

---

முந்திய கட்டுரையில் போலிமெஞ்ஞானங்களில் சம்பந்தப்பட்ட வித்தைகளில் (Psuedo Science) ஒன்றாகிய மெஸ்மரிசம் (Mesmerism) என்று வழங்கும் வித்தையின் லட்சணங்களைப்பற்றி சற்று விபரமாக எழுதினோம். அதன் ஆதார நூல்களையும் எடுத்துரைத்தோம். அந்தப் போலி மெஞ்ஞானத்திற்குப் பதிலாக இப்னாடிசம் (Hypnotism) என்ற மெஞ்ஞான வித்தை அதிலிருந்து பிறந்ததையும் குறிப்பிட்டு இப்னாடிசம் இன்ன வித ஞானமென்பதை சுருங்கவுரைத்தோம்.

பலகாலமாக மெஸ்மரிசத்துடன் சம்பந்தமாகக் கருதப்பட்டு வந்த போலி ஞானங்களில் ஒன்றாகிய டெலிபதி (Telepathy) இன்னதென்பதையும், சுருங்க விளக்கினோம். இந்த டெலிபதி விஷயமாக சம்பந்தப்பட்டுள்ள சிலபோலி ஞானங்களைக் குறிப்பிட்டோம். அவைகளில் (1) கிலேர் வாய

ன்ஸ் (Clairvoyance) அதாவது தூரதிருஷ்டி (Distant Vision) என்ற வித்தையும் இதனோடு சம்பந்தப்பட்ட (2) புதையலைக் கண்டுபிடிக்கும் வித்தையும் (Finding the Treasure Trove) 3. தண்ணீரைக் கண்டறிதல் என்ற வித்தையும் (Water Divining) 4. மைபோட்டுப் பார்த்தல் (Crystal gazing) என்ற வித்தையும் முக்கியமானவை. தூரத்தில் நடக்கும் சம்பவங்கள் சாதாரணக் கண்கள் மூலமாக அல்லாமல் ஏதோ ஓர் ஞானக்கண்களால் பார்ப்பது என்ற வித்தையை கிலேர்வாயன்ஸ் (Clairvoyance) என்றும் சொல்லுகிறார்கள். இந்த வித்தைகளில் ஏதோ சிறு உண்மை இருந்தபோதிலும், அந்த சம்பவங்களுக்கு மாய வாதிகள் (Spiritualists) கூறும் காரணங்களால் நிகழ்வதெ ன்பது, நம்பக்கூடியதல்ல என்பதை சற்று விளக்கு வோம்.

அக்கல் டிஸ்ட் (Occultists) என்று வழங்கும் மாய வாதிகள் மேற்கூறிய நிகழ்ச்சிகளுக்கு (Phenamena) மறை வான காரணங்களை (Mystic Causes) குறிக்கின்றார்கள். தூரத்தில் நடக்கும் சம்பவங்களை, மயக்கத்திலுள்ள ஒருவன் தெரிவிப்பானேயாகில், அது அவனுடைய சூட்சமக்கண் ணால் தெரிந்து சொல்லுகின்றானென்று கூறுகின்றார்கள். புதைந்து கிடக்கும் டணத்தைக்காட்டினால் அது விநாயகர் வசியத்தால் சித்திக்கின்றது என்று வாதிக்கின்றார்கள்—அல் லது, கண்ணுக்குத் தெரியாத நீர்ப்பாங்கை கண்டுபிடித்தால், கண்டுபிடிக்கின்றவனுக்கு ஓர் சூட்சமசக்தி உண்டென்கின்றா ர்கள். மை போட்டுப் பார்த்தால் அனுமார் அருளால் அதில் கண்களுக்குத் தெரியாத விஷயங்களும், வஸ்துக்களும் தெரி கின்றது என்று சொல்லுகின்றார்கள். ஆனால் இந்தத் தோற் றங்களை மெய்ஞான முறைப்படி விசாரித்தறிவோமேயாகில்,

மாயவாதிகள் கூறும் காரணங்களால் உண்டாவதில்லையென்றும், சாதாரணமாகவே அத்தோற்றங்களின் உண்மையை எளிதில் அறிந்து கொள்ளக்கூடுமென்பதையும் ஈங்கு எடுத்துக் காட்டுவோம்.

முக்கியமாக இந்த விசாரணையில் நாம் அறியவேண்டிய விஷயங்களென்னவெனில், மெஞ்ஞான முறைப்படி விபரமும், மதக்கோட்பாடுகளாகிய ஆன்மா, மறுஜெனனம், உயிர், கடவுள், முதலிய வெறுஞ்சொற்களில் இருந்து வந்த நம்பிக்கை குறைய நேரிடவும், இச்சொற்களை ஆதரிக்க மாயாவாதிகள் தங்கள் மாயாவாதத்தை (Spiritualism) கிளப்பிவிட்டார்கள். தேய்ந்து வரும் மதங்களை இந்த மாயாவித்தைகளைக் கொண்டாகிலும் ரட்சிக்கலாமா? என்ற நோக்கமே இந்த வித்தைகளை ஆதரித்துப் பேசுவதற்கு முகாந்தரமாகவுள்ளதுவென அறிக. ஆனால் "சுடுகாட்டுக்குப் போன பிணம் திரும்பிவராது" என்ற முதுமொழிபோல் செத்து வரும் சொற்களாகிய கடவுள், ஆன்மா, நரகம், மோட்சம், பேய், பிசாசு, திரும்பவும் மனிதர் உள்ளத்தில் இந்த மாயாவித்தைகளால் உதிக்கும் என்பது பகற்கனவேயாகும்.

தூரதிருஷ்டி (Clairvoyance) கண்களுக்கு மறைவாயுள்ள வஸ்த்துக்களையாகிலும், அல்லது காதுகளுக்குக் கேட்காத சொற்களையாகிலும், கண்களால் பாராமலும், காதுகளால் கேட்காமலும் தெரிந்து கூறுவதை தூரதிருஷ்டி ஞானமென்பார். ஒரு பெட்டியில் தூரதிருஷ்டிக்காரனுக்குத் தெரியாமல் வைத்து அந்தப் பெட்டியை மாத்திரம் காட்டினால் அவன் அதிலுள்ள பொருள்களை பெட்டியைத் திறந்து பார்க்காமலே தெரிவிக்கின்றானாம். அல்லது எதையாகிலும் நினைத்துக்கொண்டு அவனிடம் சென்று அவனைக்கேட்டால் நினை

த்த சொற்களை தெரிவிக்கின்றனும். இந்த சம்பவங்களை சாதாரணமான தூரதிருஷ்டி என்று வழங்குகின்றார்கள். இது அருகாமையில் நடக்கும் தோற்றங்கள். வெகு தூரத்தில் நடக்கும் சம்பவங்களை அறிந்து கொள்வதும் தூரதிருஷ்டி சக்தியால் என்றும் கூறுகின்றார்கள். இத்தியாதி சம்பவங்கள் உண்மையா என்று விசாரிக்கவேண்டும். மாயா வித்தையில் நம்பிக்கையுள்ள Sir William Crookes, Sir Oliwer Lodge, Sir william Barrett முதலியோர் இந்தத் தோற்றங்களில் மோசம் நடந்திருந்தபோதிலும், சில தோற்றங்களுக்குக் காரணம் தெரியாதபடியால் நமக்குத் தெரியாத சக்தியால்தான் அவை நடந்திருக்கவேண்டுமென்று கூறுகின்றார்கள். ஆனால் பெரும்பான்மை மெஞ்ஞானிகள் இந்த சம்பவங்கள் யாவும் தந்திர வித்தை என்றே (Tricks] மதிக்கின்றார்கள். சில சம்பவங்களில் தந்திரம் தெரியாவிடில் தந்திரக்காரனுடைய சாமார்த்தியத்தால் (Conjurcus Tricks] நமக்கு அவன் செய்யும் தந்திரம் தெரியாமல் இருக்கின்றதேயொழிய ஏதோ அபூர்வ சக்தி (Abnormal Sight] யால் தெரிந்து சொல்வதாக எண்ண எந்தவித முகாந்திரமும் இல்லை என்பார்கள். இந்தத் தந்திரத்தை பரீட்சித்தவரை, பலதோற்றங்களின் தந்திரம் வெளிப்பட்டே வருகிறது. இந்த மோசம் கோர்ட்டிலும் திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டப்பட்டது. ஒரு பெரிய மனுஷி முன்பாக பெட்டியில் இறந்து போனவருடைய மோதிரம், கண்ணாடி இன்னும் பல வஸ்துக்களை போட்டு மூடிவைக்கப்பட்டது. அந்த அம்மை பெட்டியினுள் வைத்திருக்கும் வஸ்துக்களின் விபரங்களை தெரிவித்தனளாம். ஆனால் சில நாள் பிறகு இதன் ரகசியம் வெளிப்பட்டது. இந்த அம்மையுடன் கூட வந்த தந்திரக்காரன் யாவருக்கும் முன்பாக செய்த தந்திரத்தால் நிகழ்ந்ததாகத் தெரியவந்தது. அவன் காட்டிய பெட்டியை நழுவச் செய்து இன்

ஞெரு பெட்டியை அந்த இடத்தில் வைத்துவிட்டு உள்ளே கொண்டுபோன பெட்டியைத் திறந்து அதிலிருக்கும் சாமான்கள் விபரங்களை வெளியிலிருக்கும் அம்மைக்கு சைகை மூலமாகத்தெரிவிக்க, அந்த அம்மை சபையில் மெதுவாக அந்தந்த வஸ்துக்களை தானே அறிந்து சொல்வது போல் தெரிவித்தனளாம். இந்த வித்தையின் சூட்சி தெரிந்தும் முன்பும் சில மெஞ்ஞானிகள் இதை விந்தை என்றே கருதி வந்தார்கள். ஆனல் விசாரித்த பிறகு சேர்ந்த மோசத்தை அறிந்தும் இந்த மெஞ்ஞானிகளுக்கு (Scientists) அறிவு உண்டானதோ நமக்குத் தெரியாது. ஏனெனில் சில மெஞ்ஞானிகளுக்கு மதப்பற்ருல் மதமபக்கம் (Mystery) அவர்களை விட்ட பாடில்லை என்று கெரிய வருகிறது. எல்லா வாசனைகளிலும் மதவாசனை புராதீனமானது. இந்த வாசனைப் பற்ருல், மெஞ்ஞானிகளும் சில விஷயங்களில் ஏமாந்து போகின்றனர். மதப்பற்று எந்தக் காலத்தில் மாந்தரை விட்டு ஒழிகின்றதோ அந்தக்காலத்தில் தான் உலகிலுள்ள பித்தலாட்டங்களும் ஒழியுமென அறிக.

கும்பகோணத்தருகிலுள்ள வலங்கைமான் கிராமத்தில் ஒரு தூரதிருஷ்டியோன் (Clairvoyant) இருப்பதாகவும், அவன் நினைத்ததை சொல்வதாகவும், அதற்கு ரூபாய் ஐந்து கொடுக்கவேண்டுமென்றும் கேள்வி. மற்ற தந்திரங்களைப் போல் இதுவும் ஓர் தந்திர மென்றேகூறல் வேண்டும். இவன் நாம் நினைத்ததைச் சொல்வதற்கு பல சூழ்ச்சிகளுண்டு. அவையாவன:—அவன் தன்னை மாயதூக்கத்தில் வைத்துக் கொள்ளுகின்ருன். அதனல் வெளிசத்தமும், சந்தடியும், தனக்குக் கேட்பதில்லை. ஆனல் நமது செய்கைகளையும், உதடு அசைதலையும், மெதுவாக பேசுவதையும் அவன் கவனிக்கின்ருன். நாம் எண்ணிய எண்ணத்தை

நாம் மெதுவாகப்பேசுகிறோம், (Behaviourists) அதாவது நடத்தை மெஞ்ஞானிகள் சொல்வதுபோல் நாம் மெதுவாகப் பேசுவதே நமது எண்ணமான படியால் அந்தப் பேச்சை தூரதிருஷ்டியோன் கேட்கக்கூடும். அல்லது நமது உதட்டின் அசைவாலும் அவன் நமது "எண்ணத்தை" தெரிந்து கொள்ளக்கூடும். இத்தியாதி முகாந்திரங்களால் தெரிந்து சொல்கின்றான் என்ற உண்மையை விட்டுவிட்டு நாம் நினைத்ததை கணேசர் அருளால் தெரிந்து சொல்கின்றான் என்றாகிலும் அல்லது மாயசக்தியால் (Occult Faculty) தெரிந்து சொல்லுகின்றான் என்றும் பிதற்றுகின்றார்கள். உண்மையில் சாதாரண சைகைகளைக் கொண்டே நமது "எண்ணங்களை"த் தெரிந்து சொல்கின்றார்கள்.

இதன் சம்பந்தமாக தெய்வமாடி, நமது உள்ளத்திலுள்ளவைகளை சொல்லும் வித்தையை கவனிக்கலாம். தெய்வமாடுகின்றவராகிலும் அல்லது (Medium) மாய்கை தூக்கத்திலுள்ளவனும் (Hypnotised Man or Woman) தாறுமாறாய்க் கேள்விகளைக் கேட்கின்றார்கள். அந்தக் கேள்விகள் நமக்குத் தாறு மாறாகக் காணப்படினும் மாயவாதிக்கு அக்கேள்விகள் அனுகூலமானவைகளே. இந்தக் கேள்விகளைக் கேட்கும் போதே தலையை அசைக்கின்றோம். அந்தக் கேள்விகளுக்கு விடையை நாம் அறியாமலே உளறுகின்றோம், இதனை நுட்பமாக அறிந்து கொண்டுவரும் மாயவாதி, தெய்வ ஆவேசத்தால் தான் நமது உள்ளத்தில் உள்ள கோரிக்கைகளைத் தெரிந்து சொல்வது போல்நடிக்கின்றான். இதுதான் இத்தியாதி தூரதிருஷ்டி சம்பவங்களில் நடந்து வரும் தந்திரம். இதனை அறியாது அம்மன் சொன்னாள், விநாயகர் அருள், தெய்வ ஆவேசம், செத்தவன் ஆன்மா தெரிவித்தது (Mystic or Occult Powers) மறைவான சக்தி, (Abnormal

Vision] அபூர்வமான பார்வை, என்று மூட மக்கள் பிதற்றுகின்றார்கள். இவர்களைப்போலவே மதப்பற்றால் சில விஞ்ஞானிகளும் உளறுகின்றார்கள்.

இதன் விஷயமாக இன்னொரு பித்தலாட்டமும் செய்கின்றார்கள். இவர்கள் தங்களைக் காணவருகின்றவர்களின் விருத்தாந்தங்களை தங்கள் ஆட்களைக்கொண்டு விசாரிக்கின்றார்கள். இதனைத் தெரிந்து கொண்டு தாங்களே மாயசக்தியால் தெரிந்துகொள்வதுபோல் நடிக்கின்றார்கள். இவர்கள் சொல்வதில் எத்தனையோ பிழைகள் (Mistakes) இருக்கின்றன. ஆனால் நமது அவாவினால், அந்தப்பிழைகளை தள்ளிவிட்டு நமக்கு வேண்டிய அனுகூலமான வார்த்தைகளை மாத்திரம் எடுத்துக் கொள்கின்றோம். இந்த மனவழுக்கைக் (Mental Fallacy) கடந்து உள்ளதை உள்ளபடி அறிய வேண்டுமென்போருக்கு (Occultists, Sorcerers, Spiritualists, Mediums, Telepathists) செய்யும் தந்திரங்கள் எளிதில் விளங்கும். சென்ற சில மாதங்களுக்கு முன்பு இறந்த பிரபல மாந்ரீகனாகிய அவுடினி (Houdini) என்போன் செய்த மாய வித்தைகளில் சிலதை இன்னும் அறியக்கூடவில்லை என்றால் சாமான்ய மக்களும், மதப் பற்றுடையவர்களும் மாய வித்தைகளில் நம்பிக்கை வைப்பது ஆச்சரியமோ? இந்த மாய வித்தைகளில் கூறியுள்ள சம்பவங்கள் சில சென்னை அடையாரிலுள்ள பிரம்மஞானக் கூட்டத்தில் (Theosophical Society) நடந்து வந்ததை நமது தோழர் பலர் அறிவார்கள். இவைகள் எல்லாம் மோசமென்று சில வருஷங்களுக்கு முன் விளம்பரப் படுத்தப்பட்டிருப்பதை (Fraud of Theosophy by Maskelyne, Isis, very much unveiled by Garret) என்ற சிறு புத்தகங்களை வாசித்தறியலாம்.

2. புதயலைக் கண்டு பிடித்தல். புதைந்து கிடக்கும் திரவியங்களை ஞானக்கண்ணால் கண்டு பிடிப்பதென்ற பித்தலாட்டத்தை நம்பி அனேகர் மோசம் போய் இருக்கின்றார்கள். இன்னும் அந்த நம்பிக்கை பல பேருக்குண்டு. இது மனிதனுடைய பேராசையால் இந்த நம்பிக்கையுண்டாகின்றது. நமக்கு எல்லோருக்கும், கஷ்டப்படாமலே செல்வம் தானாகவர வேண்டுமென்ற ஆசையுண்டு. இந்த ஆசைபால் எங்கேயாவது திரவியம் அகப்படுமா என்ற அவா மேன்மேலும் உறுத்த இதனைக்கண்டு பிடிப்போர் (Water Diviner) என்ற பித்தலாட்டக்காரர் வசமாகின்றனர். இந்த அவாவைத் திருப்தி செய்யும் மோசக்காரர்கள் எங்கும் இருக்கின்றார்கள். இரண்டொரு இடங்களில் புதைந்த திரவியத்தைத் தேடப்போய் சில குடும்பங்கள் அழிந்தது தெரியும். இதோடு போவதில்லை, சில மந்திரக்காரர்கள் பேச்சைக்கேட்டு திரவியத்தைக்காக்கும் பூதத்திற்கு நரபலி கொடுத்தோர் தூக்கிடப்பட்டார்கள், புதைந்து கிடக்கும் பணத்தை எடுக்கப்போய் தூக்கிலிடப்பட வேண்டியதாயிற்று. இது என்ன மூடத்தனமென்று எண்ணுகின்றீர்கள்! இந்த மூட நபிக்கையைவிட அதிகமான மூடத்தனம் என்ன இருக்கின்றது? இந்தப் பித்தலாட்டத்தை நம்பும்படி மந்திரக்காரர் செய்யும் மோசம் ஒன்றுண்டு. அதாவது இந்த பித்தலாட்டத்தைச் செய்வதற்கு முன்பே சில பழைய சவரன்களை வேண்டிய இடத்தில் புதைத்து விடுகின்றார்கள். இதனைத் தெரியாத பேதைகள் குறித்த இடத்தில் தோண்டிப்பார்த்து சில பழைய சவரன்கள் அகப்பட்ட நிமித்தம், மந்திரக்காரன் சொல்லை நம்பி இன்னும் அதிக பணம் கிடைக்குமென்ற அவாவால் மேலும் மேலும் பணத்தைச் செலவு செய்து நஸ்டமடைகின்றார்கள். மந்திரக்காரனுடைய தோழர்கள் அக்கம் பக்கத்தில் தாங்களே புதைத்து வைத்த பணத்தைக்கண்டுபிடித்த சம்பவத்தை அக்கம் பக்கங்களில் விளம்ப

ரம் செய்கின்றார்கள். அதனால் இவர்கள் மேல் பல இடங்களில் நம்பிக்கை உண்டாக்கிக் கொள்கின்றார்கள். இத்தியாதி சூட்சிகளால் இந்த மோசம் எங்கும் பரவுகிறது. புதையலைக் கண்டுபிடிக்கும் வித்தை இதுவே. இது வோர் பெருத்த மோசமென்பதற்குத் தடையில்லை. ஞானக் கண்ணால் தெரிந்து சொல்வதென்பதும் சுத்தப் பொய்யென அறிக.

சில இடங்களில் புதைத்து வைத்த திரவியம் அகப்படுவது வாஸ்தவம். யாரோ சிலர் பண்டைக் காலத்தில் புதைத்து வைத்த சவரன் வீடு கட்ட கடக்காலுக்குத் தோண்டும் போதும், கிணறு வெட்டும்போதும், தற்செயலாக(Accidentally) அகப்படுவது ஏகதேசம். இதனைக் கண்ட சிலர், தங்கள் அவாவினால் தங்களுக்கும் அகப்படாதாவென்ற கோரிக்கைமிகுந்து பரவும் அந்த அவாவை திருப்தி செய்ய, மோசவேசக்காரர் எங்கும் கிளம்புகிறார்கள். இந்தப் புதைக்கப்பட்ட திரவியங்களை பூதம் (Demons) காக்கின்றனவாம்! அவைகளுக்கு நரபலி கொடுக்க வேண்டுமாம்!! இத்தியாதி மோசக் கதைகளைக்கட்டி, ஏழைகளை ஏமாத்துகின்றார்கள், இவ்வித அறியாமை நமது நாட்டை விட்டு ஒழியுங்காலம் எக்காலமோ!

3. (Water Divining) தண்ணீர் கண்டுபிடித்தல் என்ற ஓர் வித்தையுண்டு. அதாவது கண்ணுக்குப் புலப்படாத தண்ணீர்ப் பாங்கைக் கண்டு பிடித்தல் எனப்படும். இந்த வித்தையில், இரண்டு விதமுண்டு. அவையாவன விஞ்ஞான முறை யொன்று, போலி ஞானமுறை மற்றொன்று.

விஞ்ஞான முறையில் அநேக இடங்களில் தண்ணீர் வளத்தை கண்டு பிடிக்கலாம். அம்முறையாவன, அக்கம் பக்கத்திலுள்ள நீர் வளப்பத்தைக் கொண்டும், கிணர் நீர்,

ஊத்து நீர், மலை சுனை, அருகாமையிலுள்ள ஆற்று ஜலம் அதன் மணல் முதலிய வசதிகளைக் கொண்டும் அடி ஜலத்தை நிர்ணயம் செய்தலாகும். பள்ளம் வெட்டி, நீரோட்டத்தைப் பார்த்தும், அடி நீரைக் கண்டுபிடிக்கலாம். தோண்டத் தோண்டவரும் மணல், கல், உப்பு, முதலிய படைகளாலும் (Strata or Layer) நீர் வளப்பம் தெரியும். இது பண்டைக்கால மெஞ்ஞான முறை. தற்காலத்தில், மேற்சொன்ன அனுமான ஞானத்தால் (Inference) அல்லாமல், பிரத்தியட்சமாகவே அடியிலிருக்கும் ஜலத்தைக்கண்டு பிடிக்கலாம். அதாவது, (Boring) அதாவது குழாய்களைக்கொண்டு பூமியுட் தொளை செய்து அடி நீரைக் கண்டு பிடித்தல். 500, 1000 அடி ஆழத்தில் கூட துளை செய்து அங்கிருக்கும் நீர்ப்பாங்கை மேலே கொண்டுவந்து நேரே பார்க்கலாம். இவை தான் மெஞ்ஞான முறை எனப்படும்.

ஆனல் போலி ஞான முறை என்னவெனில் (Water Diviner) தண்ணீரைக் கண்டு பிடிப்பவன் என்ற ஒருவனல் கண்டுபிடிக்கும் நீர் வளப்பமாகும். இதன் விபரம் என்னவெனில் ஒருவன் ஒரு கொம்பை அல்லது கழியை கையிலேந்தி செல்லுங்காலை (Divining Rod) எந்த விடத்தில் அவனுக்குத் தண்ணீர் சைகை உண்டாகின்றனவோ அங்கே தோண்டிப் பார்க்கின்றுன். அந்த இடத்தில் நீர் வளப்பம் தோன்றுவதாகச் சொல்லுகின்றுர்கள். ஆனல், இந்த வித்தையை சோதனை செய்தவர்கள் தண்ணீர் கண்டு பிடிப்போன் காட்டு மிடங்களில் எல்லாம் நல்ல வசதி கிடைக்கவில்லையாம். இது அதிலுள்ள ஒருவித பிழையாகும். (Frror) இரண்டாவது பிசகு என்ன வெனில், இந்த வித்தையில் அநேக தோல்விகளும் உளவாம். (Failures) மூன்றுவது என்னவெனில், பத்து

இடத்தில் ஜலம் இருப்பதாகக்காட்டி 8, 9 இடங்களில் தவறிப்போமாகில், சொன்ன இரண்டொரு இடங்களில் தண்ணீர் கண்டது (mere accident) வெறும் தற்செயலாய் இருக்கலாம் என்று சொல்லவேண்டும், நான்காவது, எவ்விதமாக எந்தத் தூண்டுதல் மேல் எக் காரணத்தைக் கொண்டு ஜலத்தைக் கண்டு பிடிப்போன் (Water Diviner) குறித்த இடத்தில் ஜலம் உளதாகச் சொல்லுகின்றான் என்பது அவனுக்கே தெரியவில்லையாம்! இத்தியாதி குறைகள் அடங்கி உள்ளது இந்த போலி ஞானம்.

சில வருஷங்களுக்கு முன் சர்க்கார் சிற்ப சாஸ்திரியாகிய (Government Architect) சிசாசம் என்ற ஒருவர் தண்ணீர் வசதிகளைக் கண்டுபிடிக்கும் வல்லமை பொருந்தியுளதாக வதந்தி. ஆனால் அவருடைய மாய சக்தியை சர்க்கார் பொருள் படுத்தாமல், சாதாரணமாக குழாயைக்கொண்டு பூமிக்குள் நுழைய வைத்து அதனால் நீர் வளப்பத்தைக் கண்டுபிடிக்கும் முறையைத்தான் கையாளுகின்றார்கள்.

"இந்த மாயவித்தைக்காரர் மரத்தின் கிளையை கையிலேந்தி நிலத்தின் மேல் நடக்கும்போது அந்தக் கிளை மூலமாக தண்ணீர் இருப்பதாகத் தெரிகிறது என்றதோர் கதையைக் கட்டிவிடுகின்றார்கள். மரக்கிளைக்கு மாய சக்தி (Occult Power) எப்படி வந்ததோ, அது விளங்க வில்லை. இன்னுஞ் சிலருக்கு நடந்துபோகையில் தண்ணீர் அகப்படும் இடம் ஏதோ ஓர் உணர்ச்சியால் தெரிகிறது என்றும் சொல்லுகின்றார்கள். அது என்ன உணர்ச்சி என்பதும் விளங்கவில்லை. இவ்விதமாக எங்கேயோ ஓர் இடத்தில் ஜல வசதி கண்டு பிடிப்போர் (Water Diviner) ஜலப்பாங்கைக் கண்டுபிடித்து விட்டால் இத்தியாதி பொருத்தமில்லாததும், ஒன்றுக்கொன்

று மாறுனதும், தெரியக்கூடாததுமானதும் பரீட்சைக்கு இடங்கொடுக்காததுமான காரணங்களைக் குறிக்கின்றூர்கள். இந்த வித்தையில் எல்லாம் மாயமாகவே இருக்கின்றது.

4. (Crystal Gazing) அதாவது மை போட்டுப் பார்த்தல் என்பதும், ஓர் மாய வித்தை நமது நாட்டிலும் வழங்கி வருகின்றது. ஸ்படிசக்கல்லையாகிலும், கண்ணுடியாகிலும், வெற்றிலையில் மையைத் தடவியாகிலும், அதனைக் கூர்ந்து பார்த்தால் திருடின திருடனையும், புதைத்த பொருளையும், செத்தவர்களையும் இன்னுங் காணுத பொருள்களையும், காணலாமென்பது ஓர் கதை. இவ்வளவு எளிதில் திருடனைக் கண்டுபிடிப்பதென்றுல் துப்பறியும் சேவகர் (Detectives) வேண்டியதில்லை, என்று தோன்றுகிறது! நான் சிறுவனுக இருக்கும் போது என் பெரிய தகப்பனுர் வீட்டில் மை போட்டுப் பார்த்தார்கள். வெற்றிலையில் மையை இட்டு அதில் உற்று நோக்கச் சொன்னுர்கள். அதில் பார்த்தபோது எனது கண்ணுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனுல் மற்றவர்கள் பார்த்து இதோ ராமர் வந்தார்! அதோ லட்சுமணர் வந்தார்! அதோ அனுமார் வந்தார்! என்று கூச்சலிட்டனர். இது அந்தக் காலத்தில் நமக்கு விளங்கவில்லை. ஆனுல், அதைத் தற்காலம் மெஞ்ஞான வாயிலாக நோக்குமிடத்து இதுவோர் (Self-hypnotism) யென்று தோன்றுகின்றது. நினைத்ததை இரவில் கனுவாக காண்பதுபோல் பகலில் கோரியதை இந்த (Self-hypnotism) என்ற பகற் கனவில் காண்பது சகஜம். வேதாந்திகள், மூக்கின் முனையை உற்றுப் பார்க்கும் பழக்கத்தை கற்றுக்கொடுக்கின்றுர்கள். அதுவும் ஓர் (Self-hypnotism) உண்டாகும் பழக்கமே. பகற்கனவில், நாம் கோரும் பொருள்கள் தோன்றும். இதை [Hallucination) என்பார்

கள். பழுதையில் பாம்பைப் பார்ப்பதும் (Hallucination) அதாவது பகற்கனவே. அதுபோலவே, மையில் ராம, லட்சுமண, சீதா, அனுமானைப் பார்ப்பதும் (Hallucination) இந்தத்தோற்றங்கள் கண்கள் அயர்ந்த காலையில் உண்டாகின்றன. கிறிஸ்துவ பக்தர்கள் (Christian Saints) ஏசுவை பார்க்கின்றேன். தேவதைகளுடன் (Angels) பேசுகின்றேன் என்று சொல்வதெல்லாம் இந்த (Hallucination) அதாவதுபகற்கனவேயாகும். மகமது நபி, ஓசை கேட்டதாக சொல்வதும், இந்தப் பகற்கனவே. நரம்பு வியாதியால் பீடிக்கப்பட்டவர்களுக்கு இவ்விதத் தோற்றங்கள் காண்பது சகஜமே. கண்களை மூக்கின் முனையில் நோக்கும்படி செய்தால் பலவித தோற்றங்கள் தோன்றும். அந்தத் தோற்றங்களை நமது இச்சைக்குத் தக்கவாறு அர்த்தப்படுத்திக்கொண்டு வினாயகர் வந்தார், காளி அம்மன் வந்தாள், அனுமான் தோன்றிற்று, பிரமத்தைக்கண்டேன் என்று பிதற்றுகின்றார்கள். இந்தப் பிதற்றல்களுக்கும் ஜன்னி கண்டு பிதற்றுவதற்கும் வித்தியாசம் அதிகமில்லை. ஆனால் ஒன்று நாமாக வரவழைத்துக்கொண்ட பிதற்றல். மற்றொன்று நம்மை மறந்து பிதற்றும் பிதற்றல். இதுதான் இவ்விரண்டு சம்பவங்களுக்குமுள்ள வித்தியாசம்.

வேதாந்திகள் ஞானயோகத்தில் உந்திக்கமலம் விரிந்து குண்டலனி என்று வழங்கும் அவையவம் மலரும் என்று சொல்லுவதுண்டு. அந்த வேளையில், ஜீவான்மா பரமான்மாவுடன் கலக்கும் என்ற பிதற்றலும் [Nervous tension] அதாவது நரம்புச் சோர்வை உண்டாக்கிக்கொண்ட நிலையை பிரமத்தோடு ஐக்கியமென்று பிதற்றுவதேயாகும்.

சைவ வைணவ பக்தர்கள் உருக்கத்துடன் தங்கள் கடவுளை தியானிக்கும்போது பரமசிவனையோ, பார்வதி சமேதராய், அல்லது மகா விஷ்ணுவையோ லட்சுமி சமேதராய் தரிசிக்கின்றேன் என்று சொல்வதும் இந்தப் பகற்கனவால் சொல்லும் சொற்களேயாம். படங்களில் மாகவிஷ்ணு லட்சுமி சமேதராய் கருட வாகனு ரூடராய் வரைந்துள்ளதை பார்க்கின்றோம். இதனையே நினைக்குங்கால அதேமாதிரி பக்தர்கண்களுக்குத் தோன்றுகின்றது. இதைத்தான் பக்தர்கள் காணும் அருள் தோற்றமென்பார், சைவ புராணங்களில் கூறியுள்ள அருள் தோற்றங்கள் பகற்கனவுகளில் சேர்ந்தவைகளே. பக்தர் கண்களுக்குத் தோன்றும் கடவுள் பிரசன்னங்கள் யாவும் கட்டையைக் கள்ளனென்று பாவிக்கும் மனப்பான்மையால் உண்டான காட்சிகள் என அறிக. இவ்விதக் காட்சிகளை (Illusions) என்றும் (Hallucination] என்றும், (Day dream) பகற்கனவென்றும் மெஞ்ஞானிகள் கூறுவர்.

மையில் தோன்றும் தோற்றங்களும், பகற்கனவென்றே எண்ண வேண்டும். உண்மையாகவே இதில் தோன்றும் தோற்றங்களை மாய்கை அல்லது [Illusion] என்று கூறலாம். கண் மயக்கத்தால் காணும் காட்சிகளைக்கொண்டு உலக வாழ்வை நடத்துவதாகக் கூறுவது உன்மத்தர்களுக்கு அடுக்குமே அல்லாது விவேகிகளுக்குப் பொருந்தா.

இவ்வித மாயவித்தை இன்னும் அனந்த முண்டு. செத்தவர்களைக்கண்டு பேசுதல், பேய் பிசாசுகளைக்காணல், மகாத்மாக்களைத் தரிசித்தல், முதலிய மாய்கைச் சொற்களெல்லாம் [Hallucinatory Expressions] மாயவித்தைக்காரர்கள் [Spiritualists] கூறும் கதைகள். இவைகளை விசாரிக்கப் புகுந்

தால் கடையில் நமது மூதாதைகளாகிய காட்டுமிராண்டிகள் கண்ட பகற்கனவுகளை நாமும் பண்டைகால பழக்க வாசனையால் இன்றைக்கும் காண்கின்றோம். ஆனால் விஞ்ஞான வித்தையால் நாம் இருளைக்கண்டு பயப்படுவதை விட்டு விட்டோம். இடியைக்கேட்டு பயப்படுவதை விட்டு விட்டோம். புயல் காற்று மழைகளைக்கண்டு பயப்படுவதை விட்டு விட்டோம். கிரகணத்தைக் கண்டு பயப்படுவதை விட்டு விட்டோம். இன்னும் நமக்குள் விஞ்ஞானம் [Science] பரவப் பரவ மாயவித்தைகளில் வைத்துள்ள பொய் நம்பிக்கைகளை விட்டு விடுவது திண்ணம். ஆதலின் மூடநம்பிக்கையினின்று நமது இந்திய உலகை மீட்கும் பொருப்பு நமது சுயமரியாதைத்தோழர்கள்மேல் தான் தங்கிவுள்ளதென அறிக.

---

# சில மெஞ்ஞானிகளின் மதத்தடுமாற்றம்.

---

## 14-ம் அத்தியாயம்.

---

நமது "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற சிறு புத்தகத்தில் கூறியுள்ள விஷயங்களைக் குறித்து அதனைப் படித்த சிலர் கண்டித்து வருகின்றார்கள். அத்தகையோர் இரண்டு வகைப் படுவர். தெரிந்துகொள்ள வேண்டுமென்று தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள விரும்புவோர் ஓர் வகுப்பார். மதசார்பாக நின்று கண்டிக்கப் புகுந்தோர் மற்றொரு சாரார். இவ்விரு தரத்தாரில் நமது புத்தகத்தில் எழும் சில பிரச்சினைகளை விளங்கவைக்க வேண்டுமென்றவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பலவித பிரச்சினைகளுக்கு மெஞ்ஞான முறைப்படி இதுவரை விளக்கி வந்தோம். மதப்பற்றுடையோருக்கு நிகழ்ந்த பிரச்சினைகளை இனி இரண்டொரு அத்தியாயத்தில் "குடி அரசு" இடம் தரும்வரை சுருங்க உரைப்பாம்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற புத்தகத்தில் முக்கியமாகக் கண்டுள்ள விஷயங்கள் யாதெனில் "கடவுள்" என்ற ஒருவர் இருப்பாராமாயின் அவருக்கு இடமெங்கே என்பதை முதற் கேள்வியாகக்கொண்டு அதற்கு விடை மெஞ்ஞான ஆராய்ச்சியில் கிடைக்காதென்பதை விளக்கிக் காட்டி வந்தோம். நமக்குத் தோன்றும் பிரபஞ்சத்தில் எங்கும் அத்த

கைய பொருளுக்கு இடம் இல்லை என்றதை விஞ்ஞானிகள் அனுபவப்பட்டவரை எடுத்துரைத்தோம். ஆனால் மதஸ்தர்கள், தாயுமானர், தனது பாடலில் "அங்கிங்கெனதபடி எங்கும் பிரகாசமாய்" என்ற வாக்கியத்தைத் திரும்பத்திரும்ப எடுத்தெடுத்துரைக்கின்றனர். கடவுளை அங்கும் இங்கும் இருப்பதாகக் காட்ட முடியாது, ஆனால் அவர் எங்கும் நிறைந்துளர் என்றூர் ஒரு பத்திரிகாசிரியர். இதுதான் நமக்கு விளங்கவில்லை. எந்தப் பொருளையாகிலும் தெரிந்துகொள்ள வேண்டுமானல் அப்பொருள் அங்கேயாகிலும், இங்கேயாகிலும் இருப்பதாகச் சொன்னல்தான் அதை அறிந்துகொள்ள முடியும். அங்கும் இங்கும் இல்லாத பொருள் எங்கும் இருப்பதென்றூல் மனிதனுக்கு விளங்கக்கூடியதாகத் தோன்றவில்லை. விஞ்ஞானத்திற்குத் தெரிந்தவரை தெரிந்துள்ள பிரபஞ்ச முழுமையும், தூசும் (Cosmic dust) கிரணமும் (Cosmic Rays) நிறைந்துளதாகத் தோன்றுகிறது. இவைகளின் சையோகத்தால் பிரபஞ்சப் பொருள்களாகிய நீங்களும் நானும் மற்ற சில அசீவப்பொருள்களும் உண்டாயிருக்க வேண்டுமென்பதுதான் நமது அனுபவ யுக்தியாக ஏற்பட்டுள்ளது. இவைகளுக்கு மேல் அல்லது இவைகளுக்கு உள்ளும் புறம்புமாக நிறைந்துள்ள "கடவுளென்பது" ஒன்றுண்டென்று சொல்வது ஊமை கண்ட கனவென்றே மதிக்க வேண்டும். "எங்கும்" நிறைந்த பொருள் என்றூல் நமக்கு விளங்கவில்லை. ஆனல் நமது கண்டனக்கர்த்தாக்களுக்கு விளங்கியதோ அது நமக்குத்தெரியாது. யாருக்காவது "எங்கும்" என்றது விளங்குவதாகச் சொன்னல் அது பாசாங்கே அல்லாது அது உண்மையாகாது. "அணுவுக்குள் அணுவாய், மகத்துக்குள் மகத்தாய், சீவனுக்குள் சீவனய், அறிவுக்குள் அறிவாய், நிற்கும் பரம்பொருளென்றூல்" என்ன விளங்கிய மாதிரி என்று

கேட்கின்றோம். அணு, மகத்து, சீவன், அறிவு இவை இன்னவை என்று தெரியும். ஆனால் அவைகளுக்குள்ளும், வெளியுமுள்ள பரம்பொருளோ, ஈசனோ, மாயவனோ, அல்லாவோ, ஜகோவாவோ, கடவுளோ, என்றால் இச்சொற்கள்தான் நமக்கு விளங்கவில்லை. பெய்யும் மழைக்குள்ளும் புறம்பும், பெய்கின்றவன் ஒருவன் வுளனு என்று கேட்கின்றோம்? இச்சொற்களை பண்டைகாலப் பழக்கத்தால் கிளிப்பிள்ளை சொல்வதுபோல் சொல்லுகின்றோமேயொழிய மனிதரில் யாரும் அச்சொற்களுக்குறிய பொருளைக் கண்டதுமில்லை விண்டது மில்லை. "உலகெலாம் வுணர்ந்து ஓதுவதற் கறியவன்" என்றார் ஒரு வேதாந்தி! அதற்கப்பால் என்ன தெரிந்ததாகச் சொல்ல முடியும்? ஒரு சொல்லை பல பெயரிட்டு அழைப்பதால் அச்சொல் விளங்கியதாகச் சொல்ல முடியாது. அச்சொல்லுக்குறிய பொருளை விளங்கச் செய்தால் மாத்திரம் தெரியுமேயொழிய ராமனை, வீரன், முத்தன் என்று பல பெயரிட்டு அழைப்பதால் ராமன் இன்னானென்று சொல்வதற்கில்லை. ஒரு சுன்னத்தை (Cypher or Zero) அதாவதுஒரு (0) பூஜ்யத்தை பல பூஜ்யத்தோடு (000000.........) சேர்த்தால் முதல் பூஜ்யம் பூஜ்யமே. கணிதத்தில் தெரியாத ஒன்றை "எக்ஸ்"(x)என்று சொல்லுவதுண்டு. அந்த எக்சை (x) பல எக்ஸ்களால் (xxxx.........)அறிய முடியா என்பார் கணித நூலோர். அது போல் தெரியாத "கடவுளை" சிவன், மகேஸ்வரன், ருத்திரன், விஷ்ணு, அல்லா(Allah) ஜகோவா (Jahova) பெரிய ஆவி (Great spirit) அகண்ட பொருள் (The Absolute) குட்சல்கோடல்(Kutzelcotal) ஆப்ரகடாப்ரா (Abracadabra) காடலப்ரா (Cadalabra) அல்லது பீ, பா, போ, பம், (Pe, Fa, Fo, Fum) என்று அழைத்தலால் விளங்கியது என்னை?

இருக்கு வேதத்தில் (Rig veda] ஒரு பிரபல வாக்கிய மொன்றுண்டு. அதாவது "ஏகம்" சத், விப்ரா "பகுதாவத ந்தி" என்று வடமொழியில் ஒரு வாக்கியமுண்டு. அதன் பொருள் என்னவெனில், இருப்பது ஒன்று, அதனை அறிஞர் பல பெயரிட்டு அழைப்பார்கள். இந்த வாக்கியம் சொன் னதை திருப்பிச்சொல்லுதல் என்ற வழுக்கு வாதத்தைப் போன்றது. இதனுடைய வாதமென்ன வெனில் இருப்பது ஒன்று எப்படி பல பெயரிட்டு அழைப்பதால் பல பெயரி ட்டு எதை அழைக்கின்றார்கள்? இருக்கும் ஒன்றை இந்த வாத த்தில் எந்த சொல் விளங்கியுமாதிரி? ஒன்றென்பது பல பெயர் இட்டழைப்பதானல் விளங்கியதாகக்காணோம். அல்ல து பல பெயரைக்கொண்டழைப்பதால் ஒன்று என்பது இன் னதென்றுவிளங்கியதாகக் காணோம். ஒன்று என்ன வஸ்து என்றுகேட்டால் அதன் பல பெயரைக்காட்டுகின்றார்கள். பல பெயரைக்கேட்டால் ஒன்றைக்காட்டுகின்றார்கள். இந்த வேத வாக்கியம் நாம் முன் சொன்ன சைபர் [Cypher] ஞாபத்தை ப்பொருந்தியுளது. ஒன்றென்பது பல பெயரால் விளங்கவி ல்லே. பலபெயர் ஒன்றால் விளங்க வில்லே. இந்த வழக்கு வாதத்தால் (Fallacious argument) தெரியாமையை தெரியச்செய்ததாக ஏற்படவில்லே.

இந்தப் பிரபலவாக்கியத்தின் ஆபாசத்தைச்சற்று தெளி வாக எடுத்துக்காட்டுவோம். இருப்பது ஒன்றை "கடவுள்" என்பார்கள். அதனுடைய பல பெயர்கள் சிவன், விஷ்ணு, பிரம்மா, அல்லா, ஜகோவா, முதலிய கடவுளர் என்பார்கள். ஆனல் சிவன், விஷ்ணு, முதலிய கடவுளர்வெவ்வேறு கடவுளா கமதஸ்தர் எண்ணி நடந்துவர அவைகளே ஒன்றென்று வாதிப் பதில் யாது பயன்? இந்தப் பிரபல வாக்கியத்தின் ஆபாசத்தை நமது 'ஆத்திக நாத்திக' வாசகத்தில் விபரமாகக் காட்டியுள்

ளோம். இந்த வாசகத்தைப்படித்தோருக்கு அந்த மாபெரும் வேதவாக்கியம் ஜாலவாக்கியமென்றே (Conjuring words) கருதாமல் இரார்கள்.

இந்த மகாவாக்கியத்தின் மூன்றும் வழக்கு (Fallacy) என்னவெனில் தெரியாமையை, தெரியாமையைக்கொண்டு விளங்க முயலும் வழக்காகும். தெரியாத பொருளை தெரியப் படுத்தவேண்டுமானால் தெரிந்த பொருளைக்கொண்டு தெரிவிப்பதுதான் சரியானஞாயமாகும். ஆனால் இந்த வாக்கியப்படி தெரியாத ஒன்றை தெரியாதபல பெயர்களால் தெரிவிக்கும் ஆபாசத்தைக்கொண்டுளது. "கடவுள்" இன்ன பொருள் என்பது யாருக்கும் தெரியாது. சிவன், விஷ்ணு, பிரம்மா, அல்லா, ஜகோவா, என்பவைகளும் யாருக்கும் தெரியா. யாருக்கும் பிரத்தியட்ச அனுபவமில்லை. ஆனால் இந்த பிரபல வாக்கியப்படி தெரியாத கடவுளை, தெரியாத சிவன், விஷ்ணு முதலிய சொற்களால் விளங்கியதாகக் கருதவேண்டுமாம்! இது என்ன ஞாயம்?

இத்தியாதி காவியச்சொற்களைக்கொண்டு(Poetic Expressions) மதஸ்தர்கள் மாந்தரை ஏமாத்துகின்றார்கள். மதங்களெல்லாம் மனோபாவனைகளே யொழிய (Fancy) உண்மையானவைகளல்ல. வேத, புராண, சமய இதிகாசங்கள் யாவும் (Poetic expressions of a bygone age) சென்றகால காவியச்சொற்களென மதிப்பதுவே விவேகிகளுக்குப் பொருந்துமென அறிக. காவியச்சொற்களை உண்மையென நம்பி பாமர மக்களை மயக்குவது மதி மோச மென்றே கருதல் வேண்டுமெனவும் அறிக. மதங்கள் வேண்டுமானால் அதில் கூறியுள்ள கதைகளை பஞ்ச தந்திர கதைகளைப்போல் படிக்க வையுங்கள். இந்தக் கதைகளை மெஞ்ஞானமென்று கூறுதலா

வது, அனுபவவிஷயங்களென்று மதித்தலாவது (Pure and Simple deception) அதாவது வெறும்மயக்கமென அறிதல் வேண்டும்.

மதப்பற்றுள்ள சில பத்திராதிபர்களும், சில பிரசங்கிகளும் 'கடவுள்' வுண்டென்பதற்கு மெஞ்ஞானத்தில் ஆதாரமுண்டு என்று வாதிக்கிருர்கள். இந்த வாதம் புதியதல்ல. இது ஓர் பழமையானவாதமே. ஆனல் நமது சில கண்டனக் காரர்கள் (Our Critics) சில மெஞ்ஞானிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுடைய நூல்களில் சிலவற்றிலிருந்து கடவுள் இருப்புக்கு ஆதாரமாக சில மேற்கோள்கள் கொடுக்கின்ருர்கள். இந்த வாதமும் புதியதல்லவென அறியவேண்டும். அந்தந்தக் காலத்தில்சிலமெஞ்ஞானிகள் தோன்றி மெஞ்ஞானத்திற்கு அதிதப் பட்ட விஷயங்களைக்குறித்து தங்கள் நம்பிக்கையையும், அபிப்பிராயங்களையும் தெரிவித்தால், அவ்வித அபிப்பிராயங்களைக் காட்டி மெஞ்ஞானிகள் மதத்தை ஆதரிக்கின்ருர்கள், கடவுள் இருப்பதாக ஒத்துக்கொள்கின்ருர்கள் என்று அந்தந்தக் காலத்தில் மதஸ்தர் வாதாடி வந்திருக்கின்றனர். அதுபோலவே இன்றைக்கும் சில மெஞ்ஞானிகள் தங்கள் மெஞ்ஞான விஷயங்களுக்கு அதிதப்பட்ட நம்பிக்கை, கோரிக்கைகளைப்பற்றி ஏதாகிலும் அபிப்பிராயப்பட்டாலும், அல்லது உத்தேசித்தாலும், அவைகளை மெஞ்ஞான முடிவுகள் என்று நமது கண்டனக் கர்த்தாக்கள் வாதிக்கின்ருர்கள்.

நமது "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலில் சில மெஞ்ஞானிகளின் மெஞ்ஞான முடிவுகளை ஆதாரமாகக்கொண்டெழுதினேம். அம் மெஞ்ஞானிகளின் நூல்களில் சிலவற்றையும் குறிப்பிட்டோம். ஆனல் நமது கண்டனக்காரர்

களில் ஒருவர் கேட்கின்றார். Sir James Jeans சர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்ற வான நூலாசிரியருடைய "Mysterious Universe" அதாவது மர்மமான "பிரபஞ்சம்" என்ற நூலை ஏன் நமது புத்தகத்திற்கு ஆதாரமாகக்கொள்ளவில்லை என்று கேட்கின்றார்? சில வான ஆராய்ச்சி செய்வோர் முக்கியமாக ஜீன்சும் (Jeans), எட்டிங்டனும் (Eddington) இவ்விரு பிரபலவான சாஸ்திரிகள் கடவுள் இருப்பதாக ஆதாரங்களைக் காட்டி யுள்ளார் என்றும் வாதிக்கின்றார்கள். இதுவுண்மை யாவென அறிதல் வேண்டும்.

இந்த வருஷ முதலில் "சண்டமாருதம்" பத்திரிகையில் இதே மாதிரி வாதத்தை புதுக்கோட்டையில் ஜட்ஜாக இருந்துவரும் செஞ்சையா அவர்கள் தான் செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டித்து இத்தியாதி வாதம் ஆதாரமற்ற வாதமென்று சற்று விபரமாகக் காட்டியுள்ளோம், இந்த நொண்டிவாத மெனப்படும், அதாவது நொண்டிக்குதிரைக்கு சறுக்கியது லாபம் என்பதுபோல் மதங்களுக்கு மெஞ்ஞானிகளில் சிலர் மத விஷயங்களில் சறுக்கினதே போதும் போ லும்! அப்படி மெஞ்ஞானத்தில் (Science) மெஞ்ஞானிகள் சறுக்கியதாகக் காணப்படவில்லை. மதங்களின் சறுக்கை சகித்துக்கொள்ள முடியுமே யொழியமெஞ்ஞானத்தில் எவ்விதசறுக்குக்கும் இடமிரு. சறுக்கும் மெஞ்ஞானம் எங்குமில்லை. தனக்குத் தெரிந்தவரை மெஞ்ஞானம் தெரியுமென்று உறுதியாகக் கூறும். தெரியாதவரை தீர்க்கமாக தனக்குத் தெரியாதென்றே சாதிக்கும். இதுதான் மெஞ்ஞானத்திற்குள்ள மதிப்பும் யோக்கியமும். இந்த மெஞ்ஞானத்திற்கீடாக எவ்வித ஞான மென்பதெல்லாம் ஒன்றும் இல்லை என அறிக. இவ் விஷயங்களை சற்று விபரமாகக் கண்டறிவாம்.

ஒரு காலத்தில் மதங்கள் உண்மையென வெறும் வாத மூலமாக மதாபிமானிகள் வாதாடி வந்தனர். மெஞ்ஞானம் உலகையும், பிரபஞ்சத்தையும் ஆராய வந்தபோது ஏதோ ஒரு மெஞ்ஞானி (Scientist) மெஞ்ஞானத்திற்கு அதிதமான மதங்களைப்பற்றி தனது சொந்த அபிப்பிராயத்தைச் சொன்னால், மெஞ்ஞானம் மதங்களை ஆதரிப்பதாக வாதாடுகின்றனர். இது தான் தற்கால வாதம். இதையே நமது நிருபர்களில் சிலர் வாதிக்கின்றார்கள். எவ்வளவுமெஞ்ஞானிகள் மதங்களை ஆதரிக்கின்றார்கள்? அவ்வித ஆதரவக்கு என்ன மதிப்பு? அவ்வித ஆதரிப்பு மதக் கோட்பாடுகளை உண்மை என ருசுப்படுத்துகின்றனவா? இவைகளைச்சற்று விபரமாக அறிதல் வேண்டும்.

முதலாவது மெஞ்ஞானம் மதங்களுடைய முக்கிய கோட்பாடாகிய "கடவுள் இருப்பை" (Existence of God) ஆதரிக்கின்றதா என்பதை பார்ப்போம். மெஞ்ஞானம் (Science) சேதனம் (உயிருள்ள பொருள்கள்) அசேதனம் (உபிரில்லாப்பொருள்கள்) இவைகளை விசாரித்தறியும் ஞானமாகும். இவைகளை ஆராயும் நூல்களை எதை எடுத்துக் கொண்டாலும், (Biology) அதன் உட்பிரிவுகளாகிய Sociology, Anthropology, Physiology, Zoology, Geology முதலிய நூல்களில் யாதும் கடவுள் இருப்பைப்பற்றிப் பேசுவதே இல்லை. கடவுள் எண்ணம், பேய் பிசாசுகளின் எண்ணம் முதலிய கற்பிதச் சொற்கள் எப்படி வந்ததென்பதைக் குறித்து (Sociology) பேசும் அசேதனப் பொருள்களைப் பற்றி பேசும் நூல்களாகிய (Astronomy, Physics, Chemistry, Mathematics) கடவுளைப்பற்றிப் பேசவேண்டிய வேலையே இல்லை. கடவுளைப்பற்றிப் பேசும் மதநூல் ஒன்றே, கடவுள், மோட்சம், நரகம், புண்ணியம்,

பாவம், மன்னிப்பு, பிரார்த்தனைகளைப் பற்றிப் பேசும் அதன் பெயர் (Theology) என்று பெயர். (Theology) யில் சொல்லும் விஷயங்கள், பார்த்தலுக்கும், பரீட்சைக்கும் உட்படாதாகையால் அந்நூல் மெஞ்ஞானமாகாது. ஆதலின் கடவுள் இருப்புக்கு மெஞ்ஞானத்தில் எந்தவித ஆதரவு கிடைக்காது. மானவநூல் ஒன்று மனதைப்பற்றிப் பேசும் நூலொன்று (Psychology) உண்டு. அதிலும் கடவுளுக்குஎந்தவித ஆதரவும் கிடையாது. ஆனால் கடவுளை இருப்பதாக எந்த நூல்தான் கூறுகின்றது எனக் கேட்டால் அது (Metaphysics) என்று சொல்லவேண்டும். அதாவது கடவுள் இருப்பைப்பற்றிப்பேசும் நூல்கள் வேதாகம புராண வேதாந்த நூல்களே. புலன்களுக்குப் புலப்படாததும், பரீட்சைக்கு உட்படாததும், வெறும் மனோகற்பிதமானதுமான கடவுள் என்ற சொல்லை (Metaphysics) அதாவது வேதாந்தத்தில் காணலாம். ஆனால் இந்த (Metaphysics) அதாவது வேதாந்தம் (Science) விஞ்ஞானமாகாது. ஆதலின் மெஞ்ஞானத்தில் கடவுளுக்கு எவ்வித ஆதரவும் கிடையாது என்று அறிய வேண்டும்.

இரண்டாவது மெஞ்ஞானிகள் மூலமாகவாயினும், கடவுள் இருப்புக்கு எந்தவித ஆதரவும் உண்டா? என்பதற்கு பதிலளிப்பாம்.

விஞ்ஞானிகளில் பெரும்பான்மையோர் நாஸ்திகரென்றே சொல்லவேண்டும். (See Secptical Chemist by Professor Needham) ஆனால் சில மெஞ்ஞானிகள் பழக்கவாசனையாலோ, அல்லது பொதுஜன வாழ்த்தலுக்கு (Popular Applause) ஆசைப்பட்டோ, மதவிஷயமாக தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றார்கள். ஆனால்

இவர்கள் கடவுளைப்பற்றிக்கொண்டுள்ள அபிப்பிராயங்கள் மதாபிமானிகளுக்கு முற்றிலும் உதவாத அபிப்பிராயங்களாகவே இருக்கக்காணலாம்.

ஒரு நிருபர் இரண்டு மெஞ்ஞானிகளைக் குறிப்பிட்டு அவர்கள் கூறும் கடவுள் கூற்று தனது கடவுளுக்கு ஆதாரவென்று எண்ணுகின்றார். இவர்கள் யாரெனில் நமது கடவுளும் பிரபஞ்சமும், என்ற புத்தகத்தில் கண்டுள்ள விஞ்ஞான அதிகாரிகளே. இவ்விருவர்களில் ஜீன்ஸ் (Jeans) எட்டிங்டன் [Eddington] இவர்களில் [Jeans] எழுதியுள்ள "மறைவான பிரபஞ்சத்தை" (Mysterious Universe) நான் படிக்கவில்லைபோலும் என்று கருதுகிறார். ஆனால் அச்சிறு புத்தகம் சென்னைக்கு வந்தவுடன் முதலில் படித்தவர்களில் நான் ஒருவன். அந்நூல் மெஞ்ஞான நூலாகாதாகையால் அதில் கண்ட அத்தியாயமாகிய "ஆழமான நீரில்" [into Deeper waters] கண்டுள்ள விஷயமுழுமையும் ஜீன்சினுடைய சொந்த அபிப்பிராயங்களாகும். இந்த அபிப்பிராயங்களாகிலும் மதஸ்தருக்கு எதாகிலும் ஆதரவை அளிக்கின்றதா வென்று பார்த்தால் அது ஒன்றுமில்லை. அந்தப் புத்தகத்தில் கண்டுள்ளபடி ஜீன்ஸ்னுடைய "கடவுள்" எப்படிக் கொத்தவரென்றால் "கடவுள்" கண்ணுக்கு ரூபமாக இருப்பாராம்! அவர் "Mathematical God" க்கும் அந்த "கணக்கு கடவுளுக்கோ" நீதியோ, நெறியோ, சுகமோ, துக்கமோ, கோரமோ, அகோரமோ, நன்மையோ, தின்மையோ, புண்ணியமோ, பாவமோ யாவும் அதீதமாம்! (See Mysterious Universe page 3. 149.) இத்தியாதி "கடவுள்" எந்த இந்து, மகமதியன், கிறிஸ்தவனுக்கு வேண்டும்? நமது கண்டனக்காரர்கள் இத்தியாதி "கடவுளை" வேண்டுமானால் நூற்றுக்கணக்காக வைத்துக்கொள்ளட்டும். ஆனால்

எந்த பக்தனும் நமது வங்காளாக் குடாக்கடலில் தான் [The Bay of Bengal] "அந்தக்கடவுளை" வீசி எரிவான்! ஜீன்ஸ் அவர்கள் "கடவுளை"ப்பற்றி எழுதியுள்ள வாதங்கள் யாவும் அவருக்கே நிச்சயமில்லையாம்!! "மறைவான பிரபஞ்சத்தில்" 140-வது ஏட்டில் அவர் எழுதியுள்ளதை நமது நிருபர்களுக்கு ஞாபகப் படுத்துகின்றேன். "தான் (ஜீன்ஸ்) சொல்லிய விஷயங்கள் யாவும் வாஸ்தவத்தில் வெறும் உத்தேசங்களாகவும் நிச்சயமில்லாதவைகளாகவும் (Frankly speculative and uncertain] கொள்ள வேண்டுமாம்"! இந்த மண் குதிரையை நம்பித்தான் மதஸ்தர்கள் தங்கள் "கடவுளை" ருசுப்படுத்தப் போகின்றார்கள் போலும்!! ஜீன்ஸ் கூறும் "கணிதக்கடவுள்" ஜீன்ஸுக்கே நிச்சயமில்லாதிருக்க நமது நிருபர்களுக்கு என்ன நிச்சயமென்று கேட்கின்றோம்?

நமது நிருபர்காட்டிய மற்றொரு விஞ்ஞானியின் அதாவது எட்டிங்டன் (Eddington) மதக்கூற்றை சற்று விசாரிப்போம். இவரது [Science and unseen Universe page 145]"மெஞ்ஞானமும் தெரியாத பிரபஞ்சமும்" என்ற நூலில் 145-வது ஏட்டில் [Iam wholly opposed to any proposal to base religion on Scientific Discovery] அதாவது உங்கள் கடவுளை நிருபிக்க வேண்டுமானால் விஞ்ஞானத்தினருகே வராதே. இங்கே உங்கள் கடவுளுக்கும் எந்தவித ஆதரவும் கிடைக்கமாட்டாது. இவர் இயற்றியுள்ள இன்னொரு நூலில் [Nature of the Physical World] "பௌதிக உலகின் தன்மை" என்ற நூலிலும் மத நம்பிக்கைகளுக்கு மெஞ்ஞானம் எந்தவித ஆதரவும் அளிக்காது என்று மதஸ்தர்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளார். இரண்டு மண் குதிரைகளை நம்பி எந்தமதஸ்தனுகிலும், பக்தனுகிலும்,

தனது கடவுளுக்கு ஆதாரம் விஞ்ஞானிகளிடம் தேட முடியு மாவென்று கேட்கின்றோம்?

உண்மை என்னவெனில் "கடவுள்" என்ற சொல் பழமையான பிரகாசத்தை தற்காலத்தில் இழந்து மழுங்கி வருகின்றது. அந்தச்சொல்லின் பேரில் வைத்துள்ள பக்தி விசுவாசம் உலகில் குறைந்து கொண்டே வருகிறது. நமது சுயமரியாதை யோர் இடித்து வரும் இடியாலும் அந்த சொல்லுக்கிருந்த பயபக்தியும் குறைவுபட்டு வருகின்றது. எங்கு பார்த்தாலும் கடவுளென்றபெயருக்கே அபாயம் வரும்போல் இருகின்றது. இத்தருவாயில் ஆழமான தண்ணீரில் மூழ்கிப் போக்கின்றவன் [Like the drowning Man] மிதக்கும் துரும்பை தாவிப்பிடிப்பதைப்போல் [Catching at a straw] மதஸ்தர்கள் முழுகிப்போகும் தங்கள் கடவுளை சில மெஞ்ஞானிகளைக்கொண்டாகிலும் காப்பாற்றலாமெனக் கருதுகின்றார்கள்- அந்தோ! அந்த மெஞ்ஞானிகளும் அந்தக்கடவுளைக் கரை சேர்ப்பதாகக்காணோம்! பரிதாபம்!!

# "ஆஸ்திக விஞ்ஞான சாகரத்திற்கு" விடை.

## 15-ம் அத்தியாயம்.

முன் 14 அத்தியாயங்களில், நமது சிறு நூலாகிய "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற நூலின் மேல்எழும் சில பிரச்சினைகளைக் குறித்து நமக்குத் தெரிந்தவரை எழுதி வந்தோம். அவைகளுக்கு அனுபந்தமாகவும், "ஆஸ்திக நாஸ்திக வாதத்தைக் குறித்தும்" இரண்டொரு வியாசமும் எழிதியுள்ளோம். பல நிருபர்கள், பல பிரச்சினைகளை, இவ் வியாசங்களின் சம்பந்தமாகக் கிளப்பினார்கள். இவைகளுக் கெல்லாம், நம்மால் கூடியவரை, விடை பகர்ந்துள்ளோம். இவ்விடைகளின் முக்கிய கருத்து என்னவெனில், நமது அபிப்பிராயத்தை, பாமர மக்களும், மற்றும் கற்றறிந்தோரும் ஆலோசனை இன்றி, சம்மதிக்கவேண்டி அல்லவே அல்ல. நாம் விசாரித்த மாதிரியாக நமது தமிழ்நாட்டு மக்கள் மேலெழுதி வந்த மெஞ்ஞான முறையை எற்றுக் கொண்டு அம்முறையைக்கொண்டு நமது நம்பிக்கைகளையும், கோட்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் விசாரித்தறிய வேண்டுமென்பதே நமது பூரண கோரிக்கையாகும். ஆதலின் "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற நூலில் கூறியுள்ள முறைப்படி கடவுள், ஆன்மா, மோட்சம், நரகம், மறு ஜனனம், நிர்வாணம், சமாதி, சீவ முக்தி முதலிய கோட்பாடுகளை

(Doctrines) அறிய முயற்சிப்போருக்கு இக்கோட்பாடுகள் யாவும் வெறுஞ் சொற்களென்றே ஏற்படும். ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக் கொள்ளுவோம். "ஐந்து கண்ணன்" என்ற பதம் ஒன்றுண்டு. அதுவோர் புராதனச் சொல். அதனைக்கேட்ட மாத்திரத்தில் சிறு குழந்தைகள் நடுங்குகின்றன. கண்களை மூடிக்கொள்கின்றன. பயந்து தங்கள் அழுகையை நிறுத்தி விடுகின்றன. இச்சொல்லை, நமது தாய் தந்தையர் நமது குழந்தைகளுக்குச்சொல்லி, பயப்பட வைக்காவிட்டால் "ஐந்து கண்ணன்" குழந்தைகளுக்குத் தோன்றப் போவதில்லை. அக்குழந்தைகளும், பயப்படப் போவதுமில்லை. "ஐந்து கண்ணன்" என்ற சொல் வெறும் வார்த்தை என்று தெரிந்து கொண்ட மாத்திரத்தில், குழந்தை உலகிற்கு யாதொரு கெடுதியும் நேரப்போவதில்லை. ஒரு நன்மையும் பெறப்போவதில்லை. "ஐந்து கண்ணனை" நாம் யாரும் பார்த்ததில்லை. பார்க்கப் போவதுமில்லை. ஆனால் பார்த்தமாதிரி நமது தாய், தகப்பன், நமது சிறுவர்களுக்கு அவ்வார்த்தையைக் காட்டி, பயமுறுத்துகிறார்கள். இச்சொல் வெறுஞ்சொல்லென்று நமக்குத் தெரிந்திருந்தும், சிறுவர் சிறுமிகள் அதனைக்கேட்ட மாத்திரத்தில் ஓடி ஒழிந்து கொள்ளுகின்றார்கள். ஏன்? நமது பழக்க வழக்கமே இப்பொய்க்குக் காரணம். அதுபோலவே, "கடவுள்" "ஆன்மா" முதலிய சொற்களை நாஸ்திகர், வெறுஞ்சொல்லென்று கூறுகின்றனர். ஆனால் ஆஸ்திகர் அந்த சொற்கள் குறிக்கும் பொருள்களைத் தாங்கள் பாராவிடினும், பார்க்கப் போவதில்லை என்றாயினும், அச்சொற்களை பெரிய குழந்தைகளாகிய பாமர ஜனங்களுக்குக் காட்டி அவர்களை நடுங்கச் செய்கின்றனர். வணங்கச்செய்கின்றனர். தொழச்செய்கி

ன்றனர். உயிரை விடவும் செய்கின்றனர். ஆதலின் விஞ் ஞான முறைப்படி "ஐந்து கண்ணனுக்கும்" "கடவுளுக் கும்" வித்தியாசமொன்றுமில்லை என ஏற்பட்டது. இம் மாதிரியாகவே, விஞ்ஞான முறையைக்கொண்டு பிரபஞ்ச த்தை விசாரிக்குமளவில் கடவுளுக்கு பிரபஞ்சத்தில் தங்க இடமில்லை என்றும், அப்பொருளுக்கு வேலை இன்னதென விளங்கவில்லை என்றும் ஏற்பட்டது. இத்தியாதி ஞாயங்க ளைத்தான் நமது நூலில் குறித்துள்ளோம். விஞ்ஞான முறைகளாகிய பார்த்தல், பரீட்சித்தல் (Seeing and Verifying) எனப்படும் முறைகளை மதக்கோட்பாடுகளுக் குப் பிரயோகிப்போமேயாகில், "கடவுளும் பிரபஞ்சமும்" கூறும் தீர்மானத்திற்கு அறிஞர் வராமல் இரார்கள். நமது நியாயம் இவ்வாறிருக்க, இந்நியாயத்தைக் கண்டிக்க எழுந் தவர்களில் 'ஆஸ்திக விஞ்ஞான சாகரம்' அல்லது "கடவு ளும் பிரபஞ்சமும்" என்னும் "துர்வாதத்திற்கு மறுப்பு" என மகுடமிட்டு எழுதிய நூலாசிரியர் ஒருவர். இவ்வறிஞர் நமக்குத் தாம் இயற்றிய நூலொன்றை அனுப்பியுள் ளார். இவா நமது தோழராக ஒரு காலத்தில் தொழிலாளர் பால் உழைத்து வந்தவர் போல் தோன்றுகின்றது. நமது தோழரே நம்மைக் கண்டிக்கப் புகுந்தது விசேடமே. இவர் நமது கடவுளும் பிரபஞ்சமும் என்ற நூலைக்கவனித்துப் படித்து வந்ததாகத் தெரிகிறது. இவர் அத்தியாயம், அத் தியாயமாக, நமது நூலைக் கண்டித்து வருகின் றார். இவர், மேல் நாட்டு மெஞ்ஞானிகளுடைய நூல் களைக் கற்றவராகவும் தெரிகிறது. தமக்கு, மேல் நாட்டுத் தத்துவ ஞானிகளில் சிலரை ஆதாரமாகவும் தமது புத்தகத்தில் குறிப்பிடுகின்றார். இவரைப்போன்ற தர்க்க வாதிகளுக்கு நமது விடையைத் தெரிவிக்கும் கடமை நம்

மைப் பொறுத்தது. ஆதலின், மனமகிழ்ச்சியுடன் இவரது மறுப்பை கவனிப்போம்.

முகவுரையாக, நமது ஆசிரியருக்கு மூன்று தெரிவித்துக் கொள்கின்றோம். அதாவது, தமது மறுப்பை, ஆஸ்திக விஞ்ஞான சாகரம் என்று அழைத்துக் கொள்வதில் யாருக்கும் ஆட்சேபனை ஒன்று மில்லை. ஆஸ்திகத்தை "விஞ்ஞான" மென்றாலும் பாதக மொன்று மில்லை. ஆனால், "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற நூலை, "துர்வாதம்" என்று நமது ஆக்கியோன் [Our Author,) பெயரிட்டதுதான், ஆங்கிலத்தில் (Out of taste) அதாவது ருசி அற்ற விஷயமாகும். இவ்வளவு கற்ற ஆக்கியோன், (Learned author) இவ்விதமாக அற்ப வார்த்தையை உபயோகித்தது தான், கற்றோர் மனதைப் புண்படுத்தாமல் இராது. இது நிற்க, நமது ஆசிரியர் நூலின் முக்கிய கருத்தை சற்று கவனிப்போம்.

இந்நூலின், நூன்முகத்தில், நமது ஆக்கியோன் கருத்து விளங்குகிறது. சுயமரியாதை இயக்கம் நாஸ்திகத்தில் இயங்கியதாகவும், மேல் நாட்டு ஜட தத்துவ கலைகளை அறிந்த சிலர், அவ்வியக்கத்தில் சேர்ந்து நாஸ்திகத்தைப் பாமர மக்களுக்கு பரப்புவதாகவும், ஆத்ம தத்துவத்தை, குறை கூறுவதாகவும், வேதாந்த சிகரங்களைத்தகர்க்க ஆரம்பித்தோமென்றும், மகாத்மாக்கள் தோன்றிய நாட்டில், நாஸ்திகத்தை புகட்ட வந்தோ மென்றும், தற்கால கல்வி முறையுமே தேசம் அடிமைத்தனத்தில் மூழ்கிக்கிடப்பதற்குக் காரணமென்றும், அத்துடன் நாஸ்திகம் நுழைந்தால், இந்த நாடு என்னாசு மென்றும் எடுத்துக்காட்டி; இந்நாஸ்திகம் பரவவிடாது, வேருடன் களைய வேண்டியது அறிஞர் கடமையாகுமென்று வரைந்துள்ளார். மேல் நாட்டு ஜடதத்துவ அபிப்பிராய பிச

கையும், கீழ்நாட்டு அறிஞர்களின் மேன்மையும் விளக்கதனது நூலை ஆஸ்திக விஞ்ஞான சாகர மென்று பெயரிட்டுள்ளா ராம்!

நமது நாட்டை, நமது ஆசிரியர், புகழ்ந்து பேசுவதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஒவ்வொரு நாட்டாரும், அவ ரவர் நாட்டைப் புகழ்வதால் உலகில் குரோத மேற்படுமே யொழிய வேறில்லை. மனித குலம் யாராய் இருப்பினும், எந்த ஜாதியாயினும் வொன்றே யாதலால், அந்தக் குலத்திலு ள்ள வெவ்வேறு நாட்டார் ஒருவருக்கொருவர் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்பது அகம்பாவமாகும்.

சைனகாரர் மற்ற உலகத்தவரைக் காட்டு மிராண்டி என்றும், (Barbarians) தாங்கள் தேவகுல மென்றும், (Celestials) சொல்லிவந்த பயனை இன்றைக்கு தங்கள் அடி மைத்தனத்தில் பார்க்கலாம். நமது ஆரியநாட்டின் பெருமை கடந்த இரண்டாயிரம் வருஷங்களாக, வந்தவனுக் கெல்லாம் தலை வணங்கி காலில் விழுந்து வரும் நடவடிக்கையால் நன் ருய் விளக்க முறுகிறது. எனினும் தற்கால கல்வி முறை யால், நமது நாடு, அடிமைப்பட்டுள்ள தென்றல், அதை யார் பொருட்படுத்துவார்கள்? B. C. 300 அதாவது, கிறி ஸ்துவுக்கு முன், மூன்றும் நூற்றண்டில் இந்து அரசர், இந்து மந்திரி, இந்து சேனைத்தலைவர், இந்து ரத, கஜ, துரக, பதாதிகள், சேவகர், சிப்பந்திகள் கோயில் குளம், பிராமணீ யம், வேத, ஆகம, புராண, இதிகாசம் நிறைந்த நாட்டை யவன அலெக்ஸாண்டர் (Greek Alexander) அடிமைப்படு த்தி இருக்கவும், அதன் பின், மிலேச்சராகிய மகமதியர், இந்து வேதாந்தம் சிறந்த நாட்டை அடிமையாக்கி இருக்க, தற்கால கல்வி முறையால் தனது நாடு அடிமைப்பட்ட

தென்று வாய் கூசாமல், எந்த நாவால் நமது ஆசிரியர் கூறுகின்றார் என்பது தான் நமக்கு விளங்கவில்லை.

இந்திய நாடு, எந்த முற்காலத்தில் தற்காலத்தை விட, சிறப்புற்றிருந்ததாக சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம்? வேத காலத்திலா? பிராமண காலத்திலா? சூத்திர காலத்திலா? ஸ்மிருதி காலத்திலா? வெனக் கேட்கின்றோம்? லங்கேஸ்வரனாகிய ராவணனைக் கொன்றகாலமா? அல்லது குருட்சேத்திரகாலமா? என்று கேட்கின்றோம்? அல்லது சங்கராச்சாரியார் வாழ்ந்த காலபிலாவெனக் கேட்கின்றோம்? அல்லது, சேர, சோழ, பாண்டிய ராஜ்ப காலத்திலாவெனக் கேட்கின்றோம்? எந்தக் காலத்தில் 16000 சமணரைக் கழுவில் ஏற்றிய காலமெனக் கேட்கின்றோம்? எந்தக் காலத்தில் "எங்கள் சிவனார்" உங்கள் பெருமாள் என்று மதச்சண்டைகள் நடந்தனவென்று கேட்கின்றோம்? பண்டைக்கால ஜன சமூக வாழ்க்கையை உணராமல், வேத ராஜ்ய மென்றும் ராமராஜ்ய மென்றும், தர்ம ராஜ்பமென்றும் பிதற்றுவதில் யாது பிரயோஜன மெனவும் கேட்கின்றோம்?

நமது ஆசிரியர், நாஸ்திகத்தால் நமது நாடு அடிமைத்தனத்தினின்று விலக முடியாதென்று உரைக்கின்றார். கடந்த பல ஆயிரம் வருஷங்களாக ஆஸ்திகம் நிறைந்திருந்ததா? அல்லது நாஸ்திகம் நிறைந்திருந்ததா? கோயில் குளங்களும், ஜாதி ஆசாரங்களும் எந்தக் காலத்தில் தழைத்தோங்கியது எனவும் கேட்கின்றோம்? கி. மு. 1000 முதல் 1800 வரை புராண காலமென்று சரித்திரக்காரர்கள் காலம் வரையிட்டிருப்பதை நமது ஆக்கியோன் அறிந்திரார் போலும். இந்தப் புராண காலத்தில் தான் இந்திய நாடு வேற்றரசர்களுக்கு அடிமைப்பட்டு வந்திருக்க நாஸ்திகத்தால் அடிமைத்

தனம் ஒழியாதென்பது என்ன தெரியாமை? நாஸ்திகம், அதாவது நீரிஸ்வாதம் நிறைந்த காலம், கபிலர் காலமென்பார், புத்தர் காலமென்பார், சாங்கியமும் புத்தமும் சுமார் ஆயிரம், ஆயிரத்தை நூறு வருஷம்நமது இந்தியநாட்டில்தழைத்துவந்தது. அந்தக் காலந்தான் சிறந்த காலமென்பார். கல்வியும், அறிவும், சிற்பநூலும், வான நூலும், வைத்திய நூலும், கணித நூலும், தத்துவ ஞானமும், விளங்கி வந்தகாலமென்பார். அதைத்தான் [The Augustan age] என்பர். அதைத்தான் சென்னுடேன்பர். அதில் தான் பாமர மக்கள் உண்மை சுதந்திரம் பெற்றதென்பர். அதற்குப்பிந்திய புராணக்காலத்தை [The Dark age] இருளடைந்த காலமென்பர். சரித்திர ஆராய்ச்சி இவ்வாறு இருக்க, ஆஸ்திகத்தால் நமது அடிமைத்தனமொழியுமென்பது உண்மைக்கு விரோதமாகும்.

தேச சுதந்திரங்கள் நாஸ்திகக் கோள்கையுடையவர்களால் தீவிரமாக பேறப்படுகின்றதே யொழிய ஆஸ்திக வைதீகர்களால் அல்ல வேன அறிக. உலகமெல்லாம் நோக்கும் ரஷியாவை விடுதலை செய்தவர் யார்? நேற்று ஸ்பெயினை [Spain] விடுவித்தவர் யார்? 1796-ல் பிரான்சை (France) கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுவித்து சிறந்த சொற்களாகிய சுதந்திரம் (Liberty), சமத்துவம் (Equality), சகோதரத்துவம் (Fraternity) முதலிய திவ்விய மொழிகளை உலகில் முதலில் விடுத்தவர் யார்? நாஸ்திகர்களா? ஆஸ்திகர்களா? என்று கேட்கின்றோம். மதத்துவேஷத்தால் கடந்த ஆயிர வருஷங்களாக (Crusades) என்றும், (religious persecutions) என்றும், (witchcraft] என்றும், [Heresy] என்றும் கோடான கோடிபேரை கொன்றும், கொளுத்தியும் நாசமுறச்செய்து வந்தது ஆஸ்திகர்களா? நாஸ்திகர்களா? இன்றைய தினம் நமது நாடு முழுமையும் இந்துக்களும், மகமதியர்களும் மண்

டையை உடைத்துக் கொள்வது நாஸ்திகர்களாலா? அல்லது ஆஸ்திகர்களாலா? இன்றைக்கும் பொதுஜன உண்மை விடுத லைக்கு நாஸ்திகசுயமரியாதையோர் பாடுபடுகின்றார்களா? அல்லது ஆஸ்திக காந்தியாரும் அவர் கோஷ்டியாராகிய காங் கிரஸ் காரர்களும் பாடு படுகின்றார்களா? எனக் கேட்கின் றோம்? அத்தாட்சி வேண்டுமானால் "குடி அரசு" 1-1-1933 மலர் 36-ல் 8, 9 பக்கங்களில் வரைந்துள்ள திட்டங்களைத் திருப் பித்திருப்பிப்படிக்கலாம். நாஸ்திகர் வீரத்தையும், வீர கர்ஜனை யையும் நமது ஆக்கியோன் எட்டு வருஷமாகக் கேட்டதில்லை போலும்! தான் கேட்காமல் போனால், தான் கேட்க மனமில்லாமல் போனால், நாஸ்திகர்களை நோவுதலால் என்ன பிரயோஜனம்? என்ன மதி? உலக தீவிர இயக்கங்களில் இன் றும் என்றும் முதன்மையாக நிற்போர் நாஸ்திகர் என்பதை நமது ஆக்கியோன் உணர்ந்திலர் போலும்! நமது மத்திய கால சரித்திர ஆராய்ச்சி செய்துளோர் யாவரும் [Dutt, weber Bandarker, Oldenbery Garbeeith, Paranje-pai ஆகமம், புராணம்ஏற்பட்ட கால முதல் நமது நாட்டுக்கு வந்த கேடென உணர்த்துகிறார்கள். ஆனால் நாஸ்திகம் நிறைந்த காலமாகிய சாங்கித புத்த காலங்களில் தான் நமது நாடு சிறப்புற்றோங்கிய தெனவும் தெரிவிக்கின்றார்கள். சர் வகலாசாலைகளாகிய (Universities) நலந்தா [Nalanda] வை சாலி [vysali] டாக்ஸ்லா [Taxila] தழைத்தோங்கிய கா லம் நாஸ்திக காலங்களே.

எந்தக்காலத்தில் ஈஸ்வரனை நாஸ்தியாகக் கொண்டதோ அக்காலங்களிலெல்லாம் உலகம் [முக்கியமாக நமது இந்திய நாடு] கல்வி கேள்வியிலும், ஈகை, தயாளத்திலும், பரந்த நோ க்கத்திலும், தான சீலத்திலும், பெருமையிலும் [Tolerance) சிறந்தோங்கி வளர்ந்ததென அறிக.

# "விஞ்ஞான சாகரத்தின்" ஆபாஸம்.

---

## 16-ம் அத்தியாயம்.

---

இந் நூலை கவனிக்காமல் விட்டு விட வேண்டியதிருக்க நாம் ஏன் இதனை கவனிக்க நேரிட்டதென்றால், இதன் ஆக்கியோன், நமது ஒரு காலத்துத் தோழராகவும், மெஞ்ஞான நூல்களை வாசித்தவராகவும் காணப்பட்ட படியாலென அறிய வேண்டும். முன் அத்தியாயத்தில், இந் நூலின் முகவுரையில் கண்டுள்ள அபிப்பிராய தோஷங்களை சரித்திரப் பூர்வமாக எடுத்துக் காட்டினோம். பிறகு இந்நூலின் மற்ற கண்டனங்களை கவனிக்கலாமென்றால், இந்தக் கண்டனங்கள் பழமையானவைகளாகவே இருக்கின்றன. ஈச்சூர் சச்சிதானந்த சுவாமிகள், தனது "சர்வ மத சித்தாந்த விளக்க வினாவிடை"யில், ஆத்திக வாதத்தினை கண்டித்துள்ளார். அந்த வாதங்களை, நமது ஆக்கியோன் (Our Author) "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற நூல்மேல் உபயோகித்துள்ளார். ஸ்வாமி சச்சிதானந்தர் ஆஸ்திகனைக் கண்டித்துள்ள நியாயங்களை (Arguments) நாமும் திரும்பவும் எடுத்துரைப்பதில் யாதும் பயனில்லை. மொத்தத்தில் "விஞ்ஞான சாகரத்தில்" கண்டுள்ள ஞாயங்கள் யாவும், அதாவது, வாதங்கள் யாவும்போலே என்றொரு ஆங்கில ஆஸ்திக வாதி (Paley) கெடியார வாதமென்று வழங்கி வரும்

வாதத்தினை யொக்கும். இந்த கெடியார வாதத்தினை, பக்கத்திற்குப் பக்கம் (Page after page) நமது ஆக்கியோனின் "சாகரத்தில்" பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

பேலே (Paley) வாதமென்னவெனில், "ஒரு தீவில் ஒருவன், ஒரு கெடியாரத்தைக் காண்பானுபின், அவனுக்குக் கெடியாரத்தைச் செய்த கர்த்தா வொருவன் உளதாகத் தோன்றுவதைப்போல, இந்த உலகைக் காண்போனுக்கு இவ்வுலகைச் செய்த கர்த்தா வொருவர் தோன்றுவார். இவர் தான் கடவுள்". இது தான் அவரது முக்கிய வாதம். இந்த வாதம், அனுமான வாதமென்று வழங்குவார். முதலில், இந்த வாதம் அனுமான வாதமென்பதே தவறு. இது அனுமானமாகாது. இதனை வாத ஞாயப்படி (According to the rules of Syllogism) வகுத்துப்பார்ப்போமானுல், இதன் குற்றம் (Error) வெள்ளென விளங்கும்.

1. எல்லா கெடியாரமும் மனிதனுல் செய்யப்பட்டுளது.

2. இது ஒரு கெடியாரம்.

3. ஆதலால் இதனை வொரு மனிதனுல் செய்யப்பட்டுளது.

முதல் இரண்டும் பிரதிக்ஞை என்று வழங்கும் (Premise) இவ்விரண்டு பிரதிக்ஞைகளும், நமது அனுபவம் மனிதனுல் எல்லா கெடியாரங்களும் செய்து வருவதை பிரத்தியட்சமாகப் பார்க்கின்றோம்.எந்தப் பொருளாகிலும், கெடியாரமாகக்காணும் பட்சத்தில், அதனை மனிதனொருவன் செய்திருக்க வேண்டுமென்று அனுமானிப்பது ஞாயம். ஆனுல்

கடவுளால் உலகம் சிருஷ்டி செய்திருக்க வேண்டுமென்று அனுமானத்தை பிரதிக்ஞை ரூபமாகப் போட்டுப் பார்ப்போம்.

1. எல்லா உலகங்களும் கடவுளால் செய்யப்பட்டுளது.

2. இது ஒரு உலகம்.

3. ஆதலின் இவ்வுலகம் கடவுளால் செய்யப்பட்டது.

இதில், இரண்டாவது பிரதிக்ஞை நமது அனுபவம். இதுவொரு உலகமென்பது நமக்குப்பிரத்தியட்சமாக விளங்குகின்றது. ஆனல், முதல் பிரதிக்ஞையோ, நமது அனுபவமாகா. எந்த உலகத்தையாகிலும் கடவுளொருவர் சிருஷ்டித்ததை, யாரும் பார்த்திலர். ஆதலின் தர்க்க ஞாயப்படி (Syllogistic Reasoning) இந்த உலகத்தை கடவுளொருவர் சிருஷ்டி செய்தாரென்பதென்று அனுமானிப்பது வழுக்காகும். இது தான் பேலே தர்க்கத்திலுள்ளவழுக்கு. இதனை அறியாமல், கோடான கோடி ஆஸ்திகர், இந்த வழுக்கு அனுமானத்தையே (Erroneous Inference) அடுத்தடுத்து உபயோகித்து வருகின்றனர். இந்த வழுக்கையே, நமது ஆக்கியோனும், தனது "மெஞ்ஞான சாகரத்தில்" உபயோகித்து வருகின்றார்.

இவரது நூலின் கருத்தென்னவெனில், பிரபஞ்சத்தைக் கடவுள் சிருஷ்டி செய்தார். அவர் எங்கும் வியாபி. இதனையே திருப்பித் திருப்பி பற்பலசொற்களைக் கொண்டு எழுதி வருகின்றார். நமதுவொரு உலகத்தையே சிருஷ்டி செய்

தைத நமது அனுபவத்தில் வராமலிருக்க, பிரபஞ்சத்தை கடவுள் சிருஷ்டி செய்தாரென்று எப்படி கூற முடியும்?

நமது ஆசிரியனுடைய வாதத்தின் ஆபாஸம் இன்னொரு பிரதிக்ஞையால் விளக்கிக் காட்டுவோம்.

1. எல்லா மனிதரும் கருப்பு.
2. இவன் ஒரு மனிதன்.
3. ஆதலின் இவன் கருப்பன்.

இந்த அனுமானம் முற்றிலும் தவறு. எப்படி எனில், முதல் பிரதிக்ஞை, நமது அனுபவமாகாது. மனிதருக்குள் கருப்பு, சிகப்பு, வெளுப்பு மனிதர்களுண்டு. எல்லா மனிதரும் கருப்பென்பது அனுபவத்திற்கு முறணாகும். ஆதலின் எல்லா மனிதரும் கருப்பு என்று சொல்வது தவறு. தவருன பிரதிக்ஞையிலிருந்து, அனுமானிக்கும் எந்த அனுமானமும், (Inference) தவருன அனுமானமே. இதுபோலவே எந்த உலகத்தையும் கடவுளால் சிருஷ்டி செய்ததைப் பாராத, அதாவது எவ்வித அனுபவத்திலும் வராத வாக்கியத்திலிருந்து, இந்த உலகம் கடவுளால் சிருஷ்டி செய்யப்பட்டதாக அனுமானிப்பது தவறேயாகும்.

இவ்வித தவருன அனுமானத்தைக்கொண்டு, கடவுள் இருப்பை சாதிக்கும் ஆஸ்திகர்களின் மூட நம்பிக்கையை என்னென்று கூறுவது? நமது ஆக்கியோனும் இந்தத் தவறைக் கொண்டே, தனது புஸ்தக முழுமையும் எழுதியுள்ளார். நமது "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற புத்தகத்தைக்கண்டிக்கப் புகுந்த ஒவ்வொருவரும், இந்த உலகறிந்த வழுக்கையே (Historic Blunder) செய்து வருகின்றனர். கடவுளை, அங்கும், இங்கும் காட்ட முடியாதென்றும், அவர்

எங்கும் நிறைந்தவர் என்று வாய் கூசாமல் வாதிப்பதால், யாருக்கு என்ன விளங்கிய மாதிரி? அங்கேயாகிலும், இங்கேயாகிலும் காணக்கூடாத வொன்றை எங்கும் காண்பதெப்படி? நாம் காணும் உலகில், பார்க்க முடியாத கடவுளை, நமக்கு எட்டாத பிரபஞ்சத்தில் வியாபித்திருக்கின்றார் என்றால் இது என்ன ஆபாசமெனக் கேட்கின்றோம்? இந்த ஜால சொற்களைக்கொண்டே, ஆஸ்திகர் உலகை ஏமாற்றி வருகின்றனர். இந்த சூட்சியை உணரா மாந்தர் மூட பக்தியில் முழுகிகோயில்களும், கோபுரங்களும், கட்டு வித்து, மயங்கித் தியங்கி நிற்கின்றனர். உலகம் இனி எவ்வளவு காலம் இம் மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடக்கப் போகின்றதோ, அதை நாம் அறியோம். ஆனால் நமது கடமை மூட பக்திக்கு ஆதாரமாயுள்ளவருக்கு வாதங்களை எடுத்துக்காட்ட வேண்டியது அவசியமெனத் துணிந்து கூறுவோம்.

இன்னொரு ஆபாசக்கோர்வை அடக்கிய பாடலை [String of absurdities] ஈங்கு எடுத்துக்காட்டுவோம். மே திருநாளில், ஒரு காலத்தில் காங்கிரஸ் தோழராய் இருந்த அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் தான் பேசுவதற்கு முந்தி, வேதாந்திகள் பாடும் பாடலொன்றைப் பாடினார்.

அதாவது,

“உலகெலாம் வுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவிய நிர்மலி வேணியன்
அலகில் சோதி என் அம்பலதாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.”

இதனைப் பாடும்போது எனக்கும், மற்றுமுள்ள சு. ம. தோழர்களுக்கும் சிரிப்பு உண்டாயது. இந்தப்பாடலை 50

வருஷத்திற்கு முந்தி நான் கைவல்ய நவநீத விருத்திவுரையில் படித்தேன். 50 வருஷம் கடந்தும் இந்த ஆபாஸப்பாடலைக் கேட்க நேரிட்ட சமயமும், ஆபாஸமாகவே தோன்றியது. இந்த சொற்களில் அடங்கிய ஆபாஸங்களைச் சற்று நோக்கினால் கல்வி கேள்வி நிறைந்துள்ள மாந்தரும், விசாரணை இன்றி கிளிப்பிள்ளைகளைப்போல், பாடலை வொப்பிப்பதே, பெரும் வியப்பையும் தருவதோடு, அவர்களுடைய மூட நம்பிக்கையின் வன்மையையும் காட்டுகிறது. இது நிற்க, இந்தப்பாடலின் சொற்களை கூறுபடுத்திப்பார்ப்போம்:—

"உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" இதன் பொருள் என்ன வெனில், எந்த மனிதராலும் தெரிந்து கொள்ள முடியாதவன் என்று பொருள். யாராலும் தெரிந்து கொள்ள முடியாதவனை இருப்பதாக எப்படிச் சொல்லக்கூடும்? இன்னவனென்று உணரமுடியாதவனைப் பற்றி ஓதுவதால் யாது பயன்? இந்த சொற்ப அர்த்தத்தை உணராமலே, பல்லாண்டுகளாக ஆஸ்திகரும், வேதாந்திகளும் இச்சொற்களை ஓதி வருகின்றனர்! வெறுஞ்சொற்களுக்கு, நமது அறிஞர்கள் அடிமைகளாகிய விந்தையே, விந்தை!

"நிலவுலாகிய நீர்மலி வேணியனென்றார்கள்" இது எப்படித்தெரிந்தது? யாருக்கும் வொன்றுந் தெரியாதவர் என்று முதலில் பாடிவிட்டு, நிர்மலி வேணியன் என்றால், இது முரண்பட்டதல்லவா? இதனை மூடபக்தி என்றால் என்ன தவறு? முரண்பட, முரண்பட பக்தி மேலிடும் போலும்! ஆபாசம் மேலிட, மேலிட அவ்வளவும் பக்திக்கு விசேடமென்று ஒரு ஆங்கில வாக்கிய முண்டு. இந்த வாக்கியப்படி, நமது ஆக்கியோனும் அவரைப் போன்ற பக்திமான்களும் ஆபாஸத்தில் ஆனந்தம் கொள்ளுகிறார்கள் போலும்!

"என் அம்பலத்தில் ஆடுவான்" இது எப்படித் தெரிந்தது? அங்கும் இங்கும் இல்லாதவன், அம்பலத்தில் எப்படி ஆடவந்தான்? இதனைத்தான்(Tissue of absurdities) ஆபாசக்கோர்வை என்றோம்?

எந்த லட்சணத்தாலும் அறியக் கூடாத ஒன்றை அதன் "மலர் சிலம்படி வாழ்த்தி வணங்க வேண்டியதாம்" இந்தப் பைத்தியக்காரப்பேச்சை, அறிஞர் கூட்டங்களில், வாய் கூசாமல் பாடுவதைக்கேட்டால் நாம் அறிஞர் உலகில் இருக்கின்றோமா? அல்லது உன்மத்த உலகில் இருக்கின்றோமா? என்பதே சந்தேகமாய் விடுகின்றது. இத்திபாதி பொருளை கடவுளென்று அழைப்பானேன்? (Abracradbra) என்றால் ஆகாதா? அல்லது(Cadalabra)என்றால் போதாதா? இன்னொருவர் (Fe, Fa, Fo, Fum) என்று ஏன் அழைக்கலாகாது என்று கேட்கின்றார்? இந்த சொல்லைத்தான் வேதங்கள் கூறுகின்றனவாம்! இந்த சொல்லைத்தான் இருடிகள் பாடுகின்றனவாம்! இந்த சொல்லைத்தான் வேத வேதியரும் ஓதுகின்றார்களாம். இவர்கள் மதி என்னமதியோ!!

இதுகாறும் கடந்த 15 அத்திபாயங்களில் மதங்களால் எழும் மூட நம்பிக்கைகளைக் குறித்து மெஞ்ஞான வாயிலாகக் கண்டித்து வந்தோம். இனி இரண்டொரு அத்திபாயங்களில் தத்துவ ஞானங்களில் எழுந்த மூடநம்பிக்கைகளைக்குறித்து மெஞ்ஞானம் என்ன கூறுகின்றதென்று சற்று கவனிப்போம்.

மதங்களின் ஆபாஸங்களில் நம்பிக்கை வைக்காதார் தத்துவஞானமென்ற வெறும் உத்தேசங்களில்நம்பிக்கையைச் செலுத்துவராயினர். மதங்கள் பல வேறு பட்டு இருப்பதைப் போல் தத்துவ ஞானங்களும் வேறு பட்டு இருக்கின்றன.

இத்தியாதி தத்துவ ஞானங்களில் (Philosophies) ஆதிகால தத்துவ ஞானமெனவும், மத்தியகால தத்துவஞானமென வும், தற்காலத்தத்துவ ஞானமெனவும் பிரிவு பட்டுள்ளன. நமது நாட்டில் சாங்கியம், வேதாந்தம், இரண்டு மாம்ச ங்கள், யோகம், கூடியஷட்தர்மீனங்களென அதாவது ஆறு தத்துவஞானமென வழங்கும். இத்தர்சனங்கள், பூர்வ காலந்தொடங்கியே உத்தேசிக்கப்பட்டு வந்திருக்கின்றன. மேல் நாட்டில் அநேக தர்சனங்கள் உள ஆதிமேல்நா ட்டு தர்சனங்களில் கிரீஸ் (Greece) தேச தர்சனங் கள், மிக பிரக்யாதிவுடைத்தது. அதன் பிறகு மத்திய கா லத் தத்துவங்களெனப்படும் கிறிஸ்துவ தர்சனம் Christian Philosophy otherwise known as church Philosophy மேம்படைத்து தற்கால தத்துவ ஞானங்களில் (Modern Philosophy) பிரஞ்சு தர்சனங்களெனவும், ஆங்கில தர்சனங் களெனவும் ஜர்மன் தர்சனங்களெனவும் வேறு பட்டுள. இத் தியாதி வுத்தேசங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியவர்கள் பேன்ஸ் பூர்வகால தர்சனமேனவும், தற்கால தர்சனமேனவும் வரைந்துள்ள இரண்டு சிறு புத்தகங்களை வாசித்தறியலாம் (Philosophy Benn Ancient and Modern. 2 Vols. By Benn price 12 as. each)

# விஞ்ஞான முறையும், தத்துவஞான மூட நம்பிக்கைகளும்.

## 17-ம் அத்தியாயம்.

சில நாளைக்கு முன்பு மைசூரில் நடந்த எட்டாவது தத்துவஞான மகாநாட்டில் நடந்த பிரசங்கங்களை நோக்க, (What a waste of human energy,) மனித சக்தி என்ன வியர்த்தமாகச் செலவழிகிறது என்று வியக்கவேண்டி வருகிறது. மைசூர் மகாராஜா அவர்கள் இந்த மகாநாட்டைத் திறந்து வைத்தார். தத்துவ ஆசிரியராகிய (Philosopher) சர். ராதாகிருஷ்ணன் அவர்கள், தலைவராக வீற்றிருந்து, தலைமைப் பிரசங்கம் செய்தார். மகாராஜாக்கள், தத்துவ ஞானத்தைப்பற்றிப் பேசுவதில், யாதொரு வியப்புமில்லை. தாங்கள் இருக்கும் நிலையிலிருந்துகொண்டு கல்லைப் பொன்னென்றாலும் அவர்களுக்குப் பொருந்தும்! ஆனால் பொதுஜனத் தலைவர்களென்ற பதவி பெற்றுள்ள பெரியோர்கள், தறகால உலகம் அடைந்துள்ள கேட்டிற்குப் பரிகாரம் ஒன்றும் காட்டாமலும், அதன் வழிபடு மார்க்கத்தையேனும் குறிப்பிக்காமலும் வேதாந்தம் பேசித் திரிவதென்றால், அதனினும் கொடுமை வேறெங்குளது?

சர். ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்திய தத்துவ ஞானத்தைப்பற்றி நீண்டயிரண்டு புத்தகங்கள் வெளியிட்டுள்ளார். தத்துவ ஞான உலகில் (Philosophical world) இவர் கீர்

த்தி வாய்ந்தவர். இவருடைய தத்துவ ஞான சாராம்சத்தை மைசூரில் செய்த தனது தலைமைப் பிரசங்கத்தில் காட்டியுள்ளார். அதனை ஈங்கு எடுத்துரைப்போம்.

உலகம் பெருத்த குறை இரண்டால் தற்போது பீடிக்கப்பட்டுளதாம். அது யாதெனில், முதலாவது, உலகம் அதிகமாகப் பகுத்தறிவை உபயோகித்து வருகின்றதாம்! இரண்டாவது, விசேஷமாக அரும்பயிற்சி செய்யப்பட்டு வருகின்றதாம்!! அதிகமாகப் பகுத்தறிவை உபயோகப்படுத்தியும், (Excessive use of Intellectuality) அரும்பயிற்சி செய்தும் (Excessive Specialisation) வருகின்றபடியால் உலகம் சீர்கேடாக நிற்கின்றதாம்!!! இது என்ன தத்துவஞான விபரீதம்!!!! மனிதர் பகுத்தறிவை அதிகமாக, அதிகமாக கடந்த 5000, 10,000 வருஷங்களாக உபயோகித்து வந்த பலனால் அன்றோ, நமது முன்னோர்கள் இருந்து வந்த காட்டுமிராண்டித் தன்மையிலிருந்து தற்கால நாகரீகத் தன்மைக்கு சிறுவராயினும் வந்துள்ளோம்? மனிதர் ஒவ்வொரு விஷயத்தையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு அதனதன் குணாகுணங்களை விசாரித்து வந்த படியாலன்றோ (Excessive Specialisation) மூடப் பழக்கங்களிலிருந்து விடுபட்டு வந்துகொண்டிருக்கின்றோம்! இதனை மறந்து, உலகை அதிகமாக பரிசீலனை செய்வதால் உலகிற்குக் கேடு விளைகின்றதாம்! மக்கள் தங்கள் பகுத்தறிவை அதிகமாக உபயோகிப்பதால், மக்கள் அவதிப்பட்டுழல்கின்றார்களாம்! இதைத்தான் நமது சர். ராதாகிருஷ்ணன் தனது தத்துவ மனோ ராஜ்யத்தில் (Philosophical Reverie) கண்டு பிடித்தது.

இவர் சொல்லும் கூற்று உண்மை எனவே வைத்துக் கொள்ளுவோம். ஆனால் உலகம் பகுத்தறிவை உபயோகப்படுத்துவதால் கெட்டலைந்துழல்கின்றதென்றால், இதனை நமது ராதாகிருஷ்ணன்எவ்வாறு அறிந்தார்? இதனைத் தனது பகுத்தறிவால் அறிந்துகூறுகின்றாரா? அல்லது ஞானதிருஷ்டியால் அறிந்து கூறுகின்றாரா என்று வினவுகின்றோம். அல்லது தெய்வ அருளால் (Divine Revelation) அறிந்து கூறுகின்றாரா? அல்லது தனது இயற்கை உணர்ச்சியால் கண்டுணர்ந்தாரா? அல்லது தூரதிருஷ்டி ஞானத்தால் (Clairvoyance) தெரிந்து கொண்டாரா? இத்யாதி மார்க்கங்களால், உலகக்கேட்டின் காரணங்களைத் தெரிந்து கொண்டதாக நமது ராதாகிருஷ்ணன் சாதிக்க மாட்டார் என்றே எண்ணுகின்றோம். இந்த விபரீத (Absurd) மூலமாகக்கண்டு தெரியவில்லை என்றால், மற்ற பகுத்தறிவாலன்றி, வேறெந்த வழி? ஆதி மனிதன், நெருப்பைக்கண்டு பிடித்தது முதல்நேற்றுத் தீக்குச்சி நாம் செய்து வரும்வரை, மனிதன் பகுத்தறிவைஉபயோகித்து வந்திருக்க, அதிகமாகபகுத்தறிவை உபயோகித்தபடியால்,நமக்கு வந்தது கேடென்றால், இதனினும்உன்மத்த பேச்சை (Words of Bedlam) நாம் கேட்டறியோம்! பகுத்தறிவின் உதவியின்றி எந்த மனித விவகாரம் நடக்கும்? சமுசார வாழ்க்கை நடக்குமா? அல்லது ராஜாங்க வாழ்க்கை நடக்குமா? அல்லது ராதாகிருஷ்ணன் சொல்வதாகிலும் உண்மை என்றுவிளக்க முறுமா?பகுத்தறிவின்றி கெட்டது நல்லதென்றாகிலும் பகுத்தறிய முடியுமா? நமது சர். ராதாகிருஷ்ணன் சொல்வது வெறும் பேச்சு. கொடிய நம்பிக்கைகளால் (Cruel beliefs) விளையும் கேடு இன்னமும் உலகை வாட்டி வந்து கொண்டிருக்க அத்தியாதி நம்பிக்கைகளைப் பலப்படுத்த

வேண்டுமென்போரின் மனப்பான்மை வெறுக்கத்தக்கதென உணரல் வேண்டும்.

இவரது பிரசங்கத்திலிருந்து இன்னும் சில விபரீத வாதங்களைக் குறிப்பிடுவோம். சர். ராதாகிருஷ்ணன் கூறுகின்றார், தத்துவ கல்வி (Philosophical Study) வெறும் வார்த்தை ஜாலமல்ல, வாழ்வின் அனுபவமே, தத்துவ ஞானமாகும் என்று துணிந்து கூறுகின்றார். இந்த தத்துவ அனுபவம், ஒவ்வொன்றாக விசாரிப்பதால் உண்டாகா. எல்லாவற்றையும், ஒரு மிக்கச் சேர்த்துப்பார்த்து, உண்மை இதுவென அறியவேண்டியதாம். இதுதான் அத்வைத சங்கராச்சாரியாரின் அத்வைத தத்துவமாம்! இந்தத்தத்துவம் நமது வாசகர்களுக்கு விளங்கியதோ, அல்லவோ நாம் கூற முடியாது. ஆனால் நமக்கு விளங்கவில்லை என்போம். இன்னும் அவர் கூறுவதாவது, வஸ்துவை (Sat) அறிவதே தத்துவ ஞான முடிவாம். மனித வாழ்க்கையை, விஞ்ஞானம் (Science) சமூகம் (Society) நீதிநியாயம் (Morality) ஆகமம் (Tradition) மூலங்களாக அறிதலே சங்கராச்சாரியாருடைய பூரண உண்மையாகும். வாழ்வின் வேற்றுமையை சங்கரர் வற்புறுத்தினாராம். உயிர்களினுடைய வேற்றுமையை கவனியாதபடியால் தான், உலகில் எல்லாவித கஷ்டங்களும் நேரிடுகின்றன. உலகின் மேல் ஓர் வித நிழல் (Shadow) பரவியுள்ளது. அந்நிழலைப்போக்கத்தான் தத்துவஞானத்தை சிந்திக்க வேண்டும். தத்துவ ஞானந்தான் தற்கால உலகமடைந்திருக்கும் கேட்டைப்போக்க வல்லதாம்!!

இத்தியாதி சொற்களை வேதகாலமுதல் நாளது வரை, அதாது, 4000 B. C. to 1933 A. D. உபநிஷத்துகளும், பூர்வகால தத்துவ ஞானங்களும் மத்திய கால தத்துவ ஞான

ங்களும், தற்கால தத்துவ ஞானங்களும் Socrates, Plato, Aristotle, முதல், நமது ராதாகிருஷ்ணன் வரை கூறுவ தைப் படித்துவருகின்றோம். இச்சொற்களால் உலகிற்கு எந்த சிறு பயனும் விளைந்ததாக நாம் அறியோம். இந்தப் போலி ஞானங்களால் ஒரு கைப்புல் அதிகமாக விளைந்ததாக இல்லை. ஒருவருடைய அகால மரணத்தைப் போக்கியதாக இல்லை. போரையும், சண்டையும் நின்றதாக இல்லை. தீமை குறைந்து நன்மை அதிகப்பட்டதாக இல்லை. கடந்த ( 000 வருஷங்களாகப்பரவிவந்ததத்துவ ஞானங்களால் உண்டாகாத நன்மை, நமது ராதாகிருஷ்ணனின் தத்துவ வியாக்யானங்க ளால் உண்டாகுமென்பது நம்பத்தகுந்ததல்ல.

அவரது தத்துவஞான வியாக்கியான முழுமையும் நமக்கு விளங்கவில்லை. அவரை ஒன்று கேட்கின்றோம். அவரது பிரச ங்க ஆரம்பத்தில் தத்துவ ஞானம் வெறும் வார்த்தை ஜால மல்ல. அது அறிவால் அறியக்கூடியதென்று கூறிவிட்டு அடு த்தாற்போல் அதனைப் பகுத்தறிவால்அறியமுடியா தென்றால் இந்த வாதம் முரணாகாதா? முரணே தத்துவ ஞானத்தின் வாதம் போலும்! எகல் என்ற (Hegel) பிரபலத்தத்துவ ஞானி தனது தத்துவ ஞானத்தை [Hegelian Philosophy) முரண் வாதங்களைக் கொண்டே காட்டி யுள்ளார். இதனை (Hegelian Dilectis) என்பார்கள். நமது ராதாகிருஷ்ண னும், இந்த எத்லியன் கோஷ்டி யாரும் ஒரு குளத்து நண்டு களே யாவர்.

சங்கர அத்வைதத்தை எடுத்துக் கொண்டாலும் அல் லது மற்ற எந்த தத்துவ ஞானத்தை எடுத்துக்கொண்டாலும் இந்த முரண்பட்ட வாதங்களே நிறைந்திருக்கும். தத்துவ ஞானத்தை பகுத்தறிவைக்கொண்டு இனன தென்று விளக்

கிக்காட்டிவிட்டு இந்த விளக்கம் அடுத்ததும் பகுத்தறிவால் பெறவில்லை என்றால் இந்த வாதத்தை யார் மதிப்பார்கள்? பேயைக்கொண்டு பேயை ஓட்டுவதென்ற ஓர் பழங்கதையுண்டு. (Driving out the Devil by the Devil) அது போல சர். ராதாகிருஷ்ணனும், பகுத்தறிவைக்கொண்டுபகுத்தறிவையே ஓட்டும் ஜால வித்தையைக்காட்டுகின்றார் போலும்.

தத்துவஞானம் உலகை தற்கால கஷ்டங்களிலிருந்து விடுவிக்கும் என்று நமது இந்தியத் தத்துவ ஞான ஆசிரியர் கூறுகின்றார். எது யாருடைய தத்துவ ஞானமெனில் அது தான் சங்கராச்சாரியாருடைய தத்துவ ஞானமாம்!

அது "வஸ்துவை" உணரும் ஞானமாம்!! இந்த ஞானம் சுமார் 1000 வருஷங்களாகச்சங்கராச்சாரியாருடைய கூட்டத்தார் நமது நாட்டில் உபதேசித்து வந்தும் இந்திய உலகம் ஜாதி, ஜரா, ரோக, மரண பிரப்பு, தள்ளாமை, நோய், சாவு முதலிய "நிழல்களால்" (Shadow) பீடித்துள்ளதை நீக்கமுடியவில்லையே! சத்தை (Sat) அறிந்தால் எல்லாம் அறிந்தமாதிரியாம்!! ஆனால் "சத்" என்பதைமூன்றுவிதமாக துவைதிகளும், விஷிஷ்டாத்வைதிகளும், அத்வைதிகளும் வியாக்கியானம் செய்துள்ளார். ஒன்றுக்கொன்று முரண்பட்டே இம் மூன்று வேதாந்த கட்சிக்காரர்களும் கூறுகின்றனர். இவர்களுடைய வேத வாக்கியமாகிய "தத்துவ மசி" என்ற பதத்தை மூன்று விதமாகப் பிளந்து, மூன்று விதமாக வியாக்கியானம் செய்கின்றார்கள். இந்த மூன்று வியாக்கியானங்களும் எதுதான் உண்மையெனக்கேட்கின்றோம்? இந்த வியாக்கியானங்கள் கடந்த 1000 வருஷங்களாக இந்திய தத்துவ ஞான உலகை மூன்று பிளவாகச் செய்து வந்திருக்க சங்கரர் "சத்தை" தெரிந்துகொண்டார் என்பதில் என்னநியாயமிருக்

கின்றது? இந்த தத்துவமசி என்ற வாக்கியத்தை மூன்ருகப் பிறந்த இம் மூன்று தத்துவக் கட்சிகளும், அர்த்தம் செய்வது வெகு விேேதமாயிருக்கும். தத்+துவம்+அசி என்று பிறித்து அது, நீ, ஆனுய் என்ருன் அத்வைதி. அதுபோல் நீ ஆனுய் என்ருன் விசிஷ்டாத்துவைதி. அதுவும், நீயும் ஆனீர்களென்ருன் துவைதி. இவ்விதமாக, ஒரு வாக்கியத்தையே மூன்றுவிதமாக அர்த்தப்படுத்திக்கொண்டு இதைப்பற்றியே வாதமிட்டுக்கொண்டு கோடான கோடி இந்த வியாக்கியானங்களடங்கிய புத்தகங்களை எழுதி வருகின்ருர்கள். இந்த வாதங்களை சிந்திக்க, சிந்திக்க மனிதருடைய அருமையுள்ள சக்தியை (Human Energy) எவ்வளவுவியர்த்தமாகச் செலவு செய்கின்ருர்கள் என்பதைப்பாருங்கள்! இதை வார்த்தை ஜாலமென்றே word juggling விஞ்ஞானிகள் கூறுவர். இந்த வார்த்தை ஜாலத்தால் உலகு படும் துயரத்தை நீக்கப்போகின்ருராம் நமது ராதா கிருஷ்ணன்.

உலகில் தோன்றியுள்ள தத்துவ ஞானிகளுக்குக் கணக்கே இல்லை. புராதன தத்துவ ஞானிகளில் பிலேடோ Plato பிதகோராஸ் Pythagoras சாகிரேட்டிஸ் Socratis, அரிஸ்டாடில் Aristotle, சீனே Ceno, ஸெனிகா Seneca மார்க்ஸ் அரிலியஸ் Marcus Aurcalius, எபி குரஸ் Epecurus சங்கரர்,ராமானுஜர், மாதவர்முதலியோர் முக்கியமானவர்கள். இவர்களில் ஒருவர் சொன்னதை மற்ருெருவர் கண்டிக்கின்ருர்கள். எவர்களுடைய தத்துவ ஞானத்தைக் கொண்டு உலகம் சீரடையுமென்பது தெரியவில்லை. நான் பிடித்தமுயலுக்கு மூன்றேகாலென்பது போல் இவர்களில் ஒவ்வொருவரும் தான் காட்டும் வழிதான் உலகுய்யச் செய்யும் வழி என்பார். ஆனுல் இவர்கள் சொல்லும் தத்துவ

ஞானத்தை எந்த வித பரீட்சையாலும் அறிந்து கொள்ள முடியவில்லை. இவர்களுடைய வெவ்வேறு தத்துவங்களும் உலகில் நிறைந்துகிடக்க இந்தத் தத்துவங்களை இன்னமும் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிறார் நமது சர். ராதாகிருஷ்ண தத்துவஞானி. நமது கால தத்துவஞானிகளைச் சற்று தெரிந்து கொள்ளுவோம். லாக் (Lock) யூம் (Hume) டெகார்ட் (Deccarte) ஸ்பைனோசா (Spinoza) காண்ட (Kant) கெல் (Hegel) ஷோபன்யேர் (Sehopenheur) ஸ்பென்சர் (Spencer) பெர்க்லே (Berkley) பிராட்லே (Bradlay) கிரீன் (Green) முதலியோர் நமது காலதத்துவ ஞானிகளில் முக்கியமானவர்கள். இவர்களும் ஒருவருக்கொருவர் ஒவ்வாத தத்துவங்களைப் பேசிக்கொண்டு உலகில் தத்தம் அபிப்பிராயங்களை வாதிக்க விட்டிருக்கின்றனர். உலகில் பண்டைக்கால முதல் நாளிதுவரை தத்துவஞானிகளுக்குக் குறைவேஇல்லை. ஆனால்உலகம் எந்த நன்மையும் இந்தத்தத்துவஞானங்களால் அடைந்ததாகச் சொல்லமுடியாது. மதங்களாலும், ஆதாரங்களாலும் உலகம் வியர்த்தமடைந்து வருவதைபோல் தத்துவஞானங்களாலும் வியர்த்தமடைந்து வருகின்றது.

தத்துவஞானிகளின் நோக்கமெல்லாம் பலவகைப்பட்ட பிரபந்தத்திற்கு ஒருகர்த்தா வேண்டுமென்ற நோக்கமே எவ்விதமாக மதஸ்தர்கள் "கடவுள்" ஒருவரை மனத்தினால் சிருஷ்டி செய்துகொண்டு பல வேறுபட்ட உலகை சிருஷ்டி செய்தாரென்று கதையைக் கட்டிக்கொண்டது போல் தத்துவஞானிகளும் பிரபஞ்சத்திற்கு ஆதாரம் ஒருவஸ்து இருக்கவேண்டுமென மனோகற்பனை செய்து வருகின்றனர். மதத்திலிருந்ததத்துவஞானம் பிறப்பட்டது. மதங்கள் கூறும் "கட

வுள்'' இருப்பதாக நம்பக்கூடவில்லையாதலால் எல்லா வற்றி ற்கும் அஸ்திவாரமாயுள்ள "வஸ்து" வொன்று இருக்கவேண் டுமென்று தத்துவஞானிகள் கற்பனை செய்தார்கள். ஆனால் ஞாயப்படி எதார்த்தத்தில் மதஸ்தரின் "கடவுளும்" தத்துவ ஞானிகளுடைய வஸ்துவும் ஒன்றே. இவ்விரண்டு சொற்களும் மனோபாவனைகளேயொழிய பார்க்கக்கூடிய அல்லது, பரீட்சிக் கக்கூடியதல்ல. "கடவுளும்" "வஸ்துவும்" வாதத்தில் ஏற் படும் சொற்களே வொழிய அனுபவத்தில் வரும் பொருள் களல்ல. இதனால் தான் மதஸ்தனும் தத்துவ ஞானியும் மனம்போன போக்கெல்லாம் சாதிக்கவுடன் படுகின்றார்கள்.

சாமான்ய மக்கள் மதங்கள் கூறும் மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்துகிடக்கின்றனர். கல்வி கற்றோர் தத்துவ ஞானபித்துக ளில் உழல்கின்றனர். இவ்விரு கூட்டத்தாரும் தங்கள் பழ க்கத்தால் மதநம்பிக்கையிலும் தத்துவப்பிதற்றலிலும் உழல் கின்றார்கள். இதைத்தவிர வேறு எந்த சிந்தனையும் இவர்களு க்குக் கிடையா. சொல்லின்மேல் சொல்லை ஏத்தி சொற்க ளையே பொருளாகக்கொள்கின்றவர்கள் இவர்களே.

தத்துவஞானத்தால் உலகிற்கு யாதொரு பிரயோஜன மும் இல்லை என்போம். மதங்களைப்போல் மூட வைராக்கி யத்தை வளர்க்காவிடினும் அறிவைச் சொல்லாமல் மயக்கும் சக்தி தத்துவஞானங்களுக்குண்டு. மதங்கள் சாமான்யமக்க ளுக்கு மயக்கமளிக்கும் கற்பனைகளென எண்ணலாம். தத் துவஞானங்களோ படித்தவர்களை மயக்கும் கற்பனைகளென்று எண்ணவேண்டும். உலகம் இந்தக் கற்பனைகளால் என்ன வியர்த்தமடைந்து வருகிறதென்பதை சிந்திக்க எந்தக்காலத் தில் தான் நமது உலகம் இவ்விரு கற்பனைகளிலிருந்து விடுபடு

மென்பதே கவலையாய் இருக்கின்றது. (Religion is the Opium of the People) என்றார் ரஷ்யர்கள் (Philosophy is the opium of the learned) என்போம் யாம். இதனை உணர்ந்து நமது சமதர்ம வாதிகள் இவ்விரண்டையும்-மதத்தையும் தத்துவஞானமென்பதையும் (Both religion and Philosophy) உலகினின்று வொழித்து சமதர்மிகளாலே நாம் சமதர்மத்தை நிலைக்கச் செய்வோமாக.

---

# உலகபாஷைகளின் உற்பவம்.

## 18-ம் அத்தியாயம்.

உலகில் வழங்கும் பல்வேறு பாஷைகள் ஒன்றிலிருந்து அதாவது ஒரு பாஷையிலிருந்து பெறப்பட்டனவா? அல்லது பல்வேறு பாஷைகளிலிருந்து பெறப்பட்டனவா? என்ற தனது சங்கையைக் "குடி அரசு" வாயிலாக நிவர்த்திக்கும்படி ஒரு நிருபர் மலாக்காவிலிருந்து நம்மைக் கேட்டுக்கொள்ளுகின்றார். இதன் விஷயமாக விஞ்ஞான முறைப்படி, பாஷைகள் தோன்றிய விதத்தையும் குறிக்கும்படி வினயத்துடன் எழுதுகின்றார். இதற்கு விடை பகர வேண்டுமென்றே நமக்குத் தோன்றுகின்றது. இந்த அவசியம் ஒரு பக்கமிருக்க, நமது "குடி அரசு" தமிழ் நாட்டு மக்களுக்கு விஞ்ஞான ஆராய்ச்சியில் ஊக்கத்தைக் கிளப்பி வருகிறது அதன் நன் நோக்கத்தை நன்றாக உலக மக்களுக்கு விளக்கிக் காட்டுகிறது. தமிழ் நாட்டு மக்கள் எங்கிருந்து வந்தபோதிலும், அது மலாக்கா, சையாம், பர்மா, தென் ஆப்ரிக்கா, பாலஸ்தீன், சுமட்ரா, ஜாவா தீவுகளாயினும், அந்தந்த இடங்களில் வாழும் நமது தென்னாட்டுத் தோழர்கள் மெஞ்ஞான விஷயமாக நம்மைக் கேட்டு வரும் காட்சி வியக்கத்தக்கதே. இந்தக் காட்சிக்கு ஆதரவு அளிக்கும் "குடி அரசை"ப் போற்றத் தக்கதே யாகும். இந்த அருமையான ஞானத்தை இவ்வளவு தூர தேசங்களில் பரவுவதற்கு மூல காரணமாக இருந்து

வரும் நமது "குடி அரசு"க்கு நமது நாட்டு மக்கள் நன்றி கூறுவது மிகையாகா.

மூட நம்பிக்கைகளும், மூடப் பழக்க வொழுக்கங்களும் நமது நாட்டை விட்டு ஒழிய வேண்டுமாயின் மெஞ்ஞானம் நமது பாமர மக்களுக்கு பரவ வேண்டும். மெஞ்ஞான மின்றி உலகம் சீர்பட வழியில்லை என்போம். உலக அரசியல்கள் சீர்கெட்டு உழல்வதற்கு முக்கிய காரணம் என்னவெனில், அரசியல் நடத்துவோருக்கு போதுமான மெஞ்ஞானப் பழக்கம் இல்லாமையேயாகும். அரசியல் நடத்துவதற்கும், குடும்பத்தை நடத்துவதற்கும் மெஞ்ஞானம் அவசியமாகும். ஆதலின் மெஞ்ஞானக் கிளர்ச்சி நமது நாட்டில் மூலைக்கு மூலை கிளம்பவேண்டும். இந்த விஞ்ஞானத்தை (Science) அதிகமாக நமது நாட்டு மக்களுக்குப் பரவமாறு நமது "குடி அரசு" விஞ்ஞான கட்டுரைகளுக்கு இடங்கொடுக்க வேண்டுமென்று கோறுகின்றோம்.

"தேசங்கள் தோரும் பாஷைகள் வேறு" என்று நமது முன்னோர்கள் கூறி வந்தது, அவர்களின் ஆதிகால அனுபவத்தைக் காட்டுகின்றது. இதுவும் மெஞ்ஞான அனுபவமாகும். தேசங்கள் மக்களுக்கு வேறுபடவும், அவர்கள் பாஷையும் வேறுபடவும் நேர்ந்தது. திருஷ்டாந்தமாக, திராவிட பாஷை ஒன்றை எடுத்துக் கொள்ளுவோம். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் இந் நான்கும் அக்கம் பக்க பாஷைகளாகும். இந் நான்கும் இலக்கண இலக்கியத்தில் ஒத்திருக்கின்றன. இவைகளின் மூலப் பதங்களும் ஒத்திருக்கின்றன. இந் நான்கை வெவ்வேறு பாஷை என்று கருத இடமில்லை. பல விஷயங்களில் ஒத்திருத்தலால், இந் நான்கையும், வெறும் பாஷை வேறு பாட்டால் நேர்ந்த டை

யலெக்டஸ் (Dialects) என்று பாஷை நூலோர் கூறுவர். இதைப் போன்றே மிருகாதிகளிலும் சிறு வேறுபாட்டை அடைந்தவைகளை, வெரைட்டீஸ் (Varieties) என்றும் பெ றும் வித்தியாசமடைந்தவைகளை ஸ்பிஷிஸ் (Species) என் றும் வழங்குவார்கள்.

உலகில் வழங்கும் பாஷைகளை நன்றாக விசாரித்தரிந்தவர் கள் (Philosophists) பல்லாயிரம் பாஷைகளை 7, 8 (ஏழு, எட்டு) முக்கிய பாஷைகளாக பிரிக்கின்றனர். அவை யா வன, ஆரியன் (Aryan) ஸெமடிக் (Semitic), அமிடிக் (Hamitic) நீக்ரோ (Negro), யூரால் (Ural) திராவிட (Dravida) சீன-ஜப்பான் (China-Japan) முதலிய முக்கிய பாஷைகளாம். இந்த பாஷைகளைப் பேசுகின்றவர்கள் வெவ் வேறு தேசங்களில் இருந்தே பேசுகின்றார்கள். இதனால் ஒரு முக்கிய விஷயம் ஏற்படுகின்றது. அதாவது, தேசம், பல்லாயிரம் வருஷங்களாக வேறுபட்டமையால் அதில் பே சும்பாஷையும் வேறுபட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த முக்கிய உலக பாஷைகள் அதிக காலமாக வேற்றுமைபடை ந்து வந்தபடியால் இவைகளின் தாய் பாஷை இன்னது தான் என்று சொல்ல முடியவில்லை. இந்த ஏழு, எட்டு முக்கிய பாஷைகளினுடைய சம்பந்தம் தெரியவில்லை. இவைகளு டைய மூலப்பதங்கள் வேறுபட்டு இருக்கின்றன. இவைக ளின் இலக்கணங்களும், வேறாக இருக்கின்றன. இந்த வித் தியாசத்தால் இந்த ஏழு எட்டு முக்கிய பாஷைகள் ஒரே பாஷையிலிருந்தே பெறப்பட்டிருக்க வேண்டுமென்ற சித்தா ந்தத்திற்கு இதுவரை போதுமான ஆதாரம் கிடைக்க வில்லை.

இது இவ்வாறிருக்க, இந்த பாஷைகளில் ஒவ்வொன்றை எடுத்துக் கொண்டால் அதன் உட்பிரிவுகளின் சம்பந்தத்தை

எளிதில் தெரிந்து கொள்ளலாம். திருஷ்டாந்தமாக, ஆரிய பாஷையைஎடுத்துக்கொள்ளுவோம். இங்கிலீஷ் (English) பிரஞ்சு (France) ஜர்மன் (German) இடாலியன் [Italian] ரஷ்யன் [Russian] சமஸ்கிருதம் [Sanscrit] பாரஸீகம் [Persian] இவை பார்வைக்கு வேறாகத் தோன்றினும், உற்று நோக்குமிடத்து ஒன்றாக இருப்பதைக் காணலாம். இவைகளின் மூலப்பதங்கள் (Root words) ஒன்றே. இலக்கணமும் ஒன்றே. [Grammar is one]

சமஸ்கிருத ஆங்கில மூல வார்த்தைகளில் பிதா, மாதா, Brother, Sister, முதலிய குடும்ப சொற்கள் ஒன்றாக, இந்த பலவேறு ஆரிய பாஷைகளில் இருக்கப் பார்க்கலாம். இது போலவே அமிடிக் பாஷைகளாகிய பெர்பர் (Berber) காப்டிக் (Coptic) முதலிய ஆப்ரிக்கா பாஷைகளுள் ஒற்றுமை காட்டுகின்றன- இதுபோல் ஸெமடிக் (Semitic) பாஷைகளாகிய ஈப்ரு (Hebrew) அராபிக் (Arabic) முதலியவையும் சீன ஜப்பான் பாஷைகளும் (China Japan) அதனதன் மூலபாஷைகளின் ஒற்றுமையைக் காட்டுகின்றன.

அந்தந்த மூலபாஷைகளாகிய ஆரியன், ஸெமடிக், அமிடிக் பாஷைகளுக்குள்ள உட்பிரிவுகள், அதனதன் தாய் பாஷைகளுடன் ஒற்றுமைப் பட்டிருப்பினும் அந்தந்த தாய் பாஷைகளின் சம்பந்தம் இன்னதென்று விளங்கவில்லை. இந்தத்தாய் பாஷைகளின் சம்பந்தம் தெரியும்வரை ஆதி மனிதன் ஒரு பாஷை பேசினனோ? அல்லது ஆதியிலிருந்தே பல பாஷைகளைப் பேசத்தலைப்பட்டானே? என்று சொல்ல முடியாது.

தற்போது உலக பாஷைகளின் நிலமை பின்வருமாறு. முதலாவது உலகம் தற்போது 7, 8 மூலபாஷைகளைப் பேசி வருகின்றது. அந்தந்த மூலபாஷை பலவேறு உட்பிரிவு களை அடைந்துள்ளன. அதனதன் உட்பிரிவுகள் அதனதன் தாய் பாஷைகளிலிருந்து பெறப்பட்டு இருக்க வேண்டுமென் பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் மூலபாஷைகளின் ஒற் றுமைதான் விளங்கவில்லை. தற்கால மூலபாஷைகளாகிய ஆரியன், ஸெமடிக், திராவிடம், சீனம் முதலிய பாஷைகள் உற்பத்தியான ஆதிபாஷை அழிந்துபோய் பல்லாயிரம் வரு ஷமாய் இருக்கலாம். அது முதல் அந்தந்த காலதேச வர் த்தமானங்களால் நிகழும் 7, 8 மூலபாஷைகள் அதிகமாக வித்தியாசமடைந்து, அவைகளுக்குள்ள சம்பந்தம் மறைவு பட்டிருக்கலாம். இவ்விதமாகத்தான் தற்காலம் வழங்கும் எல்லா பாஷைகளும் வேறுபட்டிருக்க வேண்டுமென்பதற்கு அத்தாட்சி வேண்டுமாயின் பாஷையின் ஆதாரத்தை நோக் கினால் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

பாஷை என்றால் என்ன? பாஷை என்றால் ஒலி, சத்தம் என்று அர்த்தம். சொல் (Word) என்பது சத்தமே. தொண்டையில் எழும் காற்றை, நாக்கு, பல், உதடு முதலிய அவையவங்களைக்கொண்டு ஒழுங்கு படுத்தினால் [Regulate] அது சொல்லாகின்றது. இதனை ஆங்கிலத்தில் (Articulate words] அதாவது உச்சரிக்கும் சொல் என்பார்கள். ஒழு ங்கு படுத்தாத காற்று, வெறும் கூச்சலாகின்றது. பேச்சுக் குரிய அவையவங்களைக்கொண்டு ஒழுங்கு படுத்தினால் [Regulate] கூச்சல், சொல்லாகின்றது. இதுதான் நமது சொல்லின் விசேடம். மிருகாதிகள் வெறும் கூச்சலிடுகின் றன. ஆ. ஊ. ஒ. என்ற கூச்சல் மிருகாதிகளுக்குமுண்டு. இன்னும் பல்வேறு கூச்சல், மிருகாதிகள் இருக்கின்றன.

நாய் 10, 12 விதக்கூச்சலிடுகின்றன. காக்கை 5, 6 விதமாகக் கூச்சலிடுகின்றன. கோழி 10, 15 விதமாக கூச்சலிடுகின்றன. நாமும் பயந்தால், கோபித்தால், சந்தோஷங்கொண்டால் பல்வேறு கூச்சலிடுகின்றோம். இந்தக் கூச்சல்களை பேசும் அவையவங்களைக்கொண்டு ஒழுங்கு படுத்துவதால் பேசும் சொற்களாகின்றன. நமது குழந்தைகள் பிறந்து சிலமாதம்வரை பேசுவதில்லை. வெறும் கூச்சலிட்டு தனது வேண்டுதலைத் தெரிவிக்கின்றது. இந்தக் கூச்சல்களைத் தாய் தந்தையர் "அ" என்ற கூச்சலை "அம்மா" "அக்கா" என்று ஒழுங்காகும்படி கற்றுக்கொடுக்கின்றார்கள். இது தான் சொல்லின் ஆரம்பம். இந்த சொற்ப ஆரம்பத்திலிருந்து பாஷை பிறக்கின்றது. பாஷை என்றால் என்ன? பெயரும் (Name) வினையும் (Verb) சேர்ந்தால் வாக்கியமாகின்றது. இரண்டொரு வாக்கியங்கள் அடங்கியது பாஷையாகின்றது. ஆதலின் நமது தினசரி அனுபவப்படி, முதலில் "ஆ" "ஊ" என்ற கூச்சலும், அவைகளைக்கொண்டு ஒழுங்குபடுத்திய சொற்களும் இரண்டு சொற்களடங்கிய வாக்கியமும், இரண்டு வாக்கியங்களாகிய பாஷையும், பரிணமிப்பதை நமது கண்ணுக்கு முன்பே பார்க்கின்றோம். இம்மாதிரியாகவே ஆதிமனிதன் மிருகங்களைப்போல் கூச்சலிட்டுக்கொண்டிருந்தவன், ஏதோ ஓர் சந்தர்ப்பத்தால் அந்தக்கூச்சலை ஒழுங்குபடுத்தி இருக்க வேண்டும். அது முதல் சொல்லை உச்சரிக்க ஆரம்பித்திருக்கவேண்டும். அந்தச் சொற்களை தன் கண்களுக்குத்தோன்றும் பொருள்களுக்குக் குறிப்பிட கொடுத்திருக்க வேண்டும். அது முதல் மனிதனுக்கு இரண்டு உலகங்கள் உண்டாயின. தான் பார்த்த உலகம் ஒன்று. தான் பெயரிட்ட உலகம் மற்றொன்று. பாஷை என்பது, தான் பெயரிட்ட உலகத்திற்கு வழங்கி வருகின்றது. பறவை, மிருகாதிகள், தத்

தம் கூச்சலால், தங்கள் கருத்தைத்தெரிவிக்கின்றன. நாமோ கூச்சலாலும் ஒழுங்கடைந்த கூச்சலாகிய சொற்களாலும் நமது கருத்தைத்தெரிவிக்கின்றோம். இது தான் நமக்கும், நமது தூரபங்காளிகளாகியகாட்டுமனிதக்குரங்குகளுக்குமுள்ள வித்தியாசம். நாம் பேசும் அவயவங்களும், அவைகளின் கூச்ச லிடும் அவையவங்களுக்கும் ஒரு சிறு பான்மை வித்தியாசம் இருந்து வருகின்றன. ஆனால் முன் கூறியபடி ஏதோ ஓர் சந்தர்ப்பத்தால் நமது முன்னோர்கள் தங்கள் கூச்சலை ஒழுங்கு படுத்தாமல் இருந்து விட்டார்கள். எனினும் நமது குழந் தைகள் பேசுவதற்கு முந்தி நமது பூர்வ மிருக மூதாதைகளைப் போல் கூச்சல் தான் இடுகின்றன. நமது குழந்தைகளுக் குத் திரேக வளர்ச்சியோடு பேசும் அவையவங்களும் வளர்கி ன்றன.

பூர்வ காலத்திலிருந்து நாகரீகமில்லாத மக்கள் காட்டுமி ராண்டி களென்று வழங்குவார்கள். பண்டைக்கால காட்டு மிராண்டிகளில் சிலர், நமது சரித்திர காலத்தில், நசித்துப் போயினர். அவர்கள் உயிர் வாழ்ந்திருந்த காலத்தில், அவர் களுடைய பாஷையைக்கவனித்தவர்கள், அந்த காட்டுமிரா ண்டிகளுக்கு (Savages) ஒன்று இரண்டென்று கணக்கிடத் தெரியாமல் தங்கள் கைவிரல்களால் காட்டினார்களாம். அவர் கள் பேசும் பாஷையில் 200, 300 சொற்களுக்குமேல் கிடையா.

செடி, மரம், மலை, கடல், மான், பிராணி என்ற பதங்கள் கிடையா. அவைகளைக் குறிக்கவேண்டுமானால் கைகளால் செய்கை காட்டுவார்களாம். அல்லது இந்த செடி, அந்த மான் என்பார்களாம். வெள்ளைப்பொருள் ஒன்றைக்குறிப்பார் களே அல்லாமல் "வெள்ளை" என்று சொல்லத் தெரியா

தாம். நேற்று ரஷ்யரால் கண்டுபிடிக்கப்பட்ட உஸ்பெக் (Usbeck) ஜாதியாருக்கு மனிதன் உலகில் தோன்றியமுதல் அவர்களைக் கண்டுபிடிக்கும் வரை அவர்களுக்கு (Alphabet) எழுத்துக்களே கிடையாதாம். அவர்களுக்குப்புகிய எழுத்துக்களை உண்டாக்கி அவர்களை எழுதப்படிக்கச் செய்து வருகின்றனராம். தண்ணீரை திரேகத்தின்மேல் ஊற்றத்தெரியாத மக்களும் உலகில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இத்தியாதி காட்டுமிராண்டிகளின் பாஷையை விசாரித்தால் நமது குழந்தைகள் பேசும் பாஷையைப்போன்றே இருந்து வருகின்றதாம். ஆதலின் ஆதிகாலந்தொடங்கி நமது அபிவிருத்தி (Development) பாஷை பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் சிற்சில மிருக சத்தங்களிலிருந்து ஒழுங்கடைந்து, விஷயஞானம் வளர வளர அந்த ஞானத்தைக் குறிக்க வேண்டி, சொற்களும் வளர்ந்து வந்து பரிணமித்து வந்திருக்கின்றன.

பரிணாம (Evolution) சித்தாந்தத்தின்படி, மனிதன் பூர்வகால மிருகமொன்றிலிருந்து பெறப்பட்டவாறே அவன் பேசும் பாஷையும், அம்மிருகாதி முன்னோர்கள் செய்து வந்த சிற்சில கூச்சல்களைக் கொண்டும் சைகைகளைக்கொண்டும், அவைகளை தங்கள் அவையவங்களைக் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்டு (Articulate) அபிவிருத்தி அடைந்து வந்து இருக்கவேண்டும். ஆனால் ஒரு கேள்வியுண்டு. ஆதிகால மிருகாதிகளின் கூச்சல் களிலிருந்து மனிதன் தனது பாஷையை உண்டாக்கிக்கொண்டான் என்றால் அந்த மிருகாதிகளின் வம்சத்தார்களாகிய வாலில்லாக் குரங்குகளேன், தங்கள் கூச்சல்களைக் கொண்டு பாஷையை உண்டாக்கிக்கொள்ள வில்லை? என்று கேட்கலாம்? இதற்கு நேரிடையாக பதில் சொல்ல

முடியாதாயினும், ஒருவாராக விளங்கச் சொல்லலாம். மனிதர் ஒரு குலத்தில் சேர்ந்தவர்களாயினும், ஏன் சில கூட்டத்தார் பாஷையை விருத்தி செய்தனர். ஏன் சிலர் இரண்டென்று எண்ணத்தெரியாதவர்களாய் இருந்து வருகின்றனர்? ஏன் குழந்தைகள் பிறந்தபோதே பேச முடியவில்லை? நமது மிருக முன்னோர்களுக்கு ஓர்வித சந்தர்ப்பங்கள் நேரிட்டிருக்க வேண்டும். காட்டுக் குரங்குகளுக்கு அந்த சந்தர்ப்பங்கள் நேரிடாமையாய் இருந்திருக்கவேண்டும். ஏன் ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும், ரெயில்வண்டி, புகைபடகு, பைஸிகில், மோட்டார்கார், ஆகாயரதம் முதலியவைகளை சிருஷ்டி செய்திருக்க வேண்டும்? இந்தியர்களாகிய நாம் கட்டை வண்டி, கட்டு மரங்களுக்கு மேல் ஏன் செய்ய முடியவில்லை? பிரம்மனால் சிருஷ்டிக்கப்பட்டதாகக் கூறும் வெள்ளை மனிதர்களுக்குப், கருப்பு மனிதர்களுக்கும் இவ்வித வித்தியாசம் நேரிட்டால் அந்த பிரம்மனாலே உண்டாக்கிய மனிதக்குரங்குக்கும், அவை பங்காளிகளாகிய நமக்கும் ஏன் வித்தியாசம் ஏற்படக்கூடாது?

குறிப்பு:—அமெரிக்க தேசத்தில் குரங்குக்குட்டிகளை, மனிதக்குழந்தைகளுடம் சேர்த்து வளர்த்து, ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள். நடை யுடை பாவனைகள் இரண்டு குட்டிகளுக்கும் ஒன்றாகவைத்து வளர்க்கின்றார்கள். நேற்று வெளியானபுத்தகத்திலிருந்து என்ன தெரியவருகின்றதென்றால் (Ape and the Child by W. N. Kellog 3 dol. 20 c, 1933) குரங்கும், குழந்தை இரண்டும் நடத்தைகளில் வித்தியாசமின்றி வளர்ந்து வருகின்றனவாம். சில சொற்களை உச்சரிக்கின்றனவாம். இன்னோர் இடத்தில் ஒரு மனிதக் குரங்கு (Ape) 200 சொற்களை பேசக்கற்றுக்கொடுக்கின்றார்

கள். "செந்தமிழும் நாப்பழக்கம், சித்திரமும் கைப்பழக்கம்" என்றார் நமது பெரியோர். எல்லாம் பழக்கத்தாலென அறிக. பாஷைகளின் பரிணாமத்தைத் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட இரண்டு புத்தகங்களிலிருந்து விபரமாகத் தெரிந்து கொள்ளலாம்.

1. Descent of Man by Charles Darwin 1872.
2. Outline of History by H. G. Wells 1933.

# சாமிகளின் மரித்த சரீரம். பதப்படுத்தும் விதம்.

## 19-ம் அத்தியாயம்.

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த நந்தம் பாக்கம் கிராமத்திலிருந்து ஒரு நிருபர், கோவாபட்டணத்தில், அர்ச். சொவேரியார் எனும் சாமியாரின் பிரேதம் 400-வருஷமாயும் நாற்றம், இளைப்பு யாதொன்று மின்றித் தூங்கும் பாவனையாகவே வைக்கப்பட்டிருக்கிறதாகவும்; அதனைப் போய்ப் பார்த்து வந்தவர்கள், அது கடவுளின் மகத்துவ மென்று சொல்லுவதாகவும்; ஆனால் நமது நிருபர் ரசாயன முறைகளால், அத்தேகம் காப்பாற்றப் பட்டிருக்கலாமென்று தான் சொன்னதாகவும்; அதற்கு அவர்கள், ரசாயன முறைகள் அந்தக்காலத்தில் யாருக்கும் தெரியாதாகையால் அது கடவுள் சக்தியால் இருக்குமென்று சொல்லுகிறபடியால், அவ்விதம் காப்பாற்றப் பட்ட (Preserved) தேகம் கெடாமல் இருப்பதற்குத் தகுந்த சமாதானம் கொடுக்கும்படி நம்மைக்கேட்டுக்கொண்டு அந்த விடையை "குடி அரசில்" பிரசுரிக்கும்படியும் கோருகின்றார்.

மரித்துப் போன தேகம், பதப்படுத்தப்பட்டால், அதனை மம்மி (Mummy) என்று வழங்குவார்கள். "மம்மி" என்றால், வாசனை கட்டி வைத்த சவம் (a dead human body embalmed) என்றும் சிதையாமல் பாகம் பண்ணப்

பட்ட சவம், அல்லது தைலமாட்டிய பிரேதம். (a dead human body, embalmed after the manner of ancient Egyptians with wax, balsams etc) என்று தமிழ் அகராதிகளில் அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தப்படி, நமது நிருபர், கிறிஸ்துவ பக்தர்களுக்கு கொடுத்த விடை சரியாகவே யிருக்கிறது. மெழுக்கு வாசனை முதலிய ரசாயனப் பொருள்களால், இறந்த தேகம் இன்றைக்கும் அழிவுறாமல் காக்கப் படலாம். இவ்வித ரசாயனப் பொருள்களைக் கொண்டே, 5000 வருஷங்களுக்கு முந்தியே ஈஜிப்ட் வாசிகள், தங்களில் மரித்தோர் உடல்களை, பதம் செய்து வைத்து வந்தனர். சிற்சிலவீட்டுப் பிராணிகளையும் [domestic animals] பதம் செய்து வைத்தும் வந்தனர். பிரமிட்ஸ் [Pyramids] என்று வழங்கும் மாபெருங்கோபுரங்களும், இவ்விதமாகப் பதம் செய்த சவங்களின் மேல் கட்டிய கட்டடங்களாகும். இறந்த அரசர், அரசிகளின் உடலைப் பதம்செய்து, அதனை அடக்கம் பண்ணி அதன் மேல் பெரும் சமாதி கட்டடங்களைக் கட்டுவித்தனர். அவர்களுடன், அவர்கள் அன்புடன் வளர்த்த பூனையையும், பதம் செய்து அடக்கம் செய்துள்ளார். 5000 வருஷத்திற்கு முந்தி, ஈஜிப்ட்டை அரசாண்டராணி உடலுடன், பச்சைக்கிளியையும் பதம் செய்து வைத்துள்ளார். இவை மாதிரியான ஈஜிப்ட் தேசத்திப சமாதிகளைத் தோண்டி எடுத்து, சீமையில் காட்சிசாலையில் (British Museums] வைத்து மிருக்கின்றனர். சென்ற 20வருஷமாகத் தோண்டி எடுக்கப்பட்ட "தூடன்காமன்" என்ற பேர் போன ஈஜிப்ட் அரசனுடைய திரேகத்தை இன்றைக்கும் பார்க்கலாம். இந்த உடலின் காலம், 5000 வருஷத்திற்குக் குறையாமல் இருக்கும். ஆதலால், 400 வருஷங்களுக்குமுந்தி இறந்த அர்ச். பெரியாரின் பிரேதம், பதம்செய்யப்பட்டு, கெடாமல் இருந்துவருவது ஆச்சரியமல்ல! உலகப் பிரசித்தம்பெ

ற்ற நாஸ்திக வாதியான (கடவுள் இல்லையென்பார்] லெனின் (Lenin) தேகத்தைப் பதப்படுத்தி, கண்காட்சிக்காக, கெரம்லின்(Kremlin) கட்டிடத்தில் மாஸ்கோவில்(Moscow] வைக்கப்பட்டுள்ளதென்றால், செத்துப்போன தேகத்தை கெடாமல் வைப்பதற்கு, கடவுள் அருள் ஏன் வேண்டும்? 5000 வருஷங்களுக்கு முந்தி, பூனை, நாய், கிளிப்பிள்ளை முதலிய அற்ப பிராணிகளைப் பதப்படுத்தி வைத்த பயனாக, இன்றைக்கும் அவைகளின் உடல்களை யாதொரு கெடுதியுமின்றி, கண்காட்சிசாலைகளில் எடுத்து வைத்திருப்பதென்றால், அர்ச்.சாவேரியாருடைய மரித்துப்போன உடல் கெடுதியில்லாமல் இருப்பதற்கு கடவுள் அருளோ, அல்லது மகத்துவமோ அல்லது அபூர்வமோ, ஏன் வேண்டும்? 400 வருஷங்களுக்கு முந்தி இறந்த தேகம் அழியாமல் இருப்பதற்கு கடவுளின் மகத்துவம் வேண்டுமென்றால், 5000 வருஷங்களுக்கு முன் இறந்தநாய், பூனை, கிளிகளின் தேகம் அழிவுறாமல் இருப்பதற்கு கடவுளின் அற்புதம் வேண்டாமா? நாய் தேகத்தையும், பூனை உடலையும், இறந்த பிறகு அழியாமல் வைப்பதற்குக் கடவுள்மகத்துவம் வேண்டுமென்று யாராகிலும் சொன்னால், நகைப்புக் கிடமாகும்! அர்ச். சாவேரியார் திரேகத்தை கெடாமல் வைத்திருக்கும் மகிமை, கடவுளால் என்றால், ஏன் நகைப்புக்கிடமிராது? இவ்வித சமாதானம் கொடுத்தால், சிறுபிள்ளைகளும் நகைப்பர்! இவ்வித சமாதானங்கள் [Explanations) மூட பக்தியால் கொடுக்கும் சமாதானங்களே யொழிய, விசாரணையால் அல்ல. இன்றைய தினமே கோவாவில் அடக்கம் செய்துள்ள அர்ச். சாவேரியார் உடலையாகிலும், அல்லது ரோமில் அடக்கம் செய்துள்ள செயிண்ட் பீட்டர் (St. Peter) உடலையாகிலும், ரசாயன சாஸ்திரிகளைக்கொண்டு, பரீட்சைசெய்தால், பிரக்கியாதி பெற்றுள்ள இந்த இர

ண்டு தேகங்களும், பதப்படுத்தப்பட்டிருப்பது நிரூபிக்கப்படும். மூட நம்பிக்கைகளால் விளையும் கேடுகளுக்கு அளவேயில்லை என்று பல தடவையும் எடுத்துக் காட்டியுள்ளோம். மூட பக்தியை நீக்குவது அரசாங்கத்தின் முதற்கடமையாகும். போர்த்துகல் [Portugal) அரசும், இத்தாலி (Italy) அரசும், தங்கள் குடிகளின் மூட பக்தியைப் போக்க கடமைப்பட்டுள்ளார். மூட பக்தியால் விளையும் கேடுகளுக்கும், துர்மார்க்கத்தனத்தால் விளையும் கேடுகளுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை என அறிதல் வேண்டும். ஒன்றை மாத்திரம் சட்டதிட்டங்களால் நிறுத்தி, மற்றொன்றை விட்டுவிடுவதென்றால், அதைப் போன்ற மதி ஈனம் ஒன்றுமில்லை. மேலிரண்டு பெரியார்களின் மரித்த உடல்களைப் பொதுவாகப்பரிசோதனை செய்யவிட்டு, அந்த தேகங்கள் பதப்படுத்தப்பட்டிருப்பதை யாவரும் அறியக் காட்டி மூட மக்களின் அறியாமையை ஏன் போக்கலாகாதென்று கேட்கின்றோம்?

மக்கள் அறியாமையால் விளையும் வினைகளை நன்குணர்ந்த ரஷ்ய தேசத்து சோவியட் [Soviet) அரசு, இந்த மாதிரியான காட்சி விஷயங்களில் என்ன செய்கின்றதென்று விசாரிப்போம்.

ரஷ்ய தேசத்தில் சக்ரவர்த்தி ஆளுகையில், ரஷ்ய மக்களின் அறியாமை மிகுந்திருந்தது. எவ்வளவோ மூடநம்பிக்கையில் மூழ்கிக்கிடந்தனர்! ஆனால், நமது நாட்டின் அறியாமையும், மூடபக்தியும் எவ்வுலகிலும் காண்பதரிது. இந்த விஷயத்தில் நமது நாட்டைத்தோக்கடிக்கும் நாடு உலகில்எங்குமில்லை என்று சொல்லலாம். இது நிற்க, ரஷ்ய தேசத்தில், சந்நியாசிகளுக்கு ஒரு மாதா கோவில் இருக்கும். அந்த மாதா கோயில்களில் இறந்த சாமிகளின் (Saints) பிரேதங்களை

பக்குவப் படுத்தப்பட்டு வைத்திருக்கும். அந்தப் பிரேதங்கள், கடவுள் மகிமையால் கெடாமலிருப்பதாக, பல கோடி ரஷ்ய மக்கள், நம்பி வந்தனர். நாஸ்திக ரஷ்யா வந்த பிறகு, இந்த பிரசண்ட மூட பக்தியை (Collossal Ignorance) நீக்க வேண்டி, சில பரீட்சைகள் செய்து காட்டுகின்றனர். அந்த சாமிகள் பிரேத உடல்களுக்குப் பக்கத்தில், கொலைபாளியின் பிரேத உடலையும், திருடனுடைய பிரேத உடலையும் கொள்ளைக்காரன் பிரேதவுடலையும் அடுத்தாற்போல் வைத்து, இவைகளும் கெடாமல் நாற்றமின்றி இருப்பதைக் காட்டுகின்றார்கள். சாமி உடலும், திருடன் உடலும் கெடாமலிருப்பதைக்கண்ட மூடபக்தர்கள், தெளிவு பெற்று, புனிதர்களாய் தத்தம் நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள மூட பக்தர்களுக்கும் தெளிவை உண்டாக்குகின்றார்கள். இது வன்றோ அரசியல் நீதி!

நாயுடலையும், நரியுடலையும், திருடர் உடலையும், மகாத்மா (Saints) உடலையும் கெடாமல் இருக்கப்பதப்படுத்தலாம். பட்சி, பறவை, செடி, புல், மரம், எல்லா வஸ்துக்களின் உடல்களைபும் பதப்படுத்தி, பல காலம் கெடாமல் வைத்திருக்கலாம். கோடி வருஷத்திற்கு முன் வாழ்ந்து இருந்த வண்டுகள், குங்கிலிய மரத்தில் பதப்பட்டு, யாதொரு உறுப்புகளும் கெடாமல் இன்றைக்கும் பார்க்கலாம். ஆனால் அந்தக்காலத்தில் "கடவுள்" என்ற பெயரையே உலகம் கேட்டறியா! யார் மகத்துவத்தால், அந்த வண்டுகள் 100 லட்சம் வருஷத்திற்கு முந்தி செத்தும், கெடாமலிருந்திருக்கின்றன?

சகலமும் அழிந்து போம். புழு, பூச்சி உடலானாலும் சரி, மகாத்மா உடலானாலும் சரியே. ஆனால் அந்த

அழிவை சிற்சில சிகிச்சையால், சில காலம் தடை செய்ய லாம். மரணம் என்பது (Death) இரண்டு வகைத்து. தேக உறுப்புகள் சாவு ஒன்று, தேகமுழுமையும் சாவு மற்ருென்று. முதல் சாவை அநுதினமும், நிமிஷத்திற்கு நிமிஷம் பார்க்கலாம். நம்முடைய தோல் உடனுக்குடனே சாகின்றது. ஆனல் தேக முழுமையும் ஒரே காலத்தில் சாகின்றது. இதற்குக் காரண மென்ன வென்று தெரிதல் வேண்டும். ஒருவன் இறந்தான் என்ருல், அவன் உயிர் போயி ற்றென்றும், அவன் ஆன்மா நீங்கிற்றென்றும் சாமான்ய மனிதர் சொல்லுவார்கள். ஆனல் ஆன்மாவும் போனது மில்லை உயிரும் போனதுமில்லை. எரிந்த நெருப்பு அவிந் தால், அதிலிருந்து நெருப்பின் ஆன்மாவாவது, உயிராவது போனதாகச் சொல்வதில்லை. ஆனல் மனிதன் இறந்தால் மாத்திரம் ஆன்மாவோ உயிரோ போயிற்று என்று பிதற்று கிருர்கள். இது ஆதாரமற்ற பிதற்றலேயொழிய வேறில்லை. உயிர் போனதுமில்லை, உயிர் வந்ததுமில்லை. பிராணன் போயிற்றென்பதும், பிராணன் வந்ததென்பதும் உலக வழ க்கு, வெறுஞ்சொல்லேயொழிய வேறில்லை. சூரியன் உதய மானன், சூரியன் அஸ்தமித்தான் என்ற உலக வழக்கச் சொ ற்போன்றதே, உண்மையல்ல. உயிர் என்ருல் பிராணவாயு வின் சம்பந்தத்தால் சூடு எழுவதே உயிராகும். அதாவது, (Oxidation) உடலில் சூடு உண்டாகும்வரை உயிர் என்று சொல்லவேண்டும். அது நின்றகாலை மரணமென்று கூறவே ண்டும். இந்த உஷ்ணம் உண்டாகும்வரை உடல் சீவித்தி ருக்கும். அது நின்ற வேளை மறித்துப்போம். ஆனல் இந்த உஷ்ணம் உண்டாவதை சில காலம் நிகழவைக்கலாம். இந்த சுடுகை (Oxidation) நிகழும் வரை எந்தக் கிருமியும் நமது தேகத்தைக்கெடுக்க முடியாது. உஷ்ணம் நின்ற

மாத்திரத்தில் விஷக்கிருமிகள், நமது உடலின் பாகங்களை எதிர்க்க ஆரம்பிக்கும். இந்த எதிர்ப்பால்தான் நமது தேகத்தில் நாற்றமும், அழிவும் நேரிடுகிறது. அக்காலே துர்நாற்றம் வீசும். சதை, துண்டு துண்டாக அற்றுப்போகும். அழுவும் பழம்போல் ஆகும். இது அதிகமாக நிகழாவண்ணம்தான் மரித்தவுடலை புதைத்து விடுகின்றோம். அல்லது எரித்து விடுகின்றோம். ஆனால் இந்தக்கேட்டை எப்படித் தடுக்கலாமென்றால் இறந்த பிறகு நமது உடலை எதிர்க்கும் கிருமிகளை, நெருங்கவொட்டாமல் செய்வதன் மூலமே தடுக்கலாம். மறித்துப்போன திரேகத்தில் விஷக்கிருமிகள் (Microbes) அணுகாதபடி தகுந்த சிகிச்சையால் செய்தால், மறித்த தேகம் நாற்றமில்லாமலும், அழிவில்லாமலும் சில காலம் இருக்கலாம். இறந்த பிறகு பிரேதத்தை ரசாயனப் பொருள்களைக்கொண்டு, விஷக்கிருமிகள், தேகத்தைத் துளைக்காமல் இருக்கச்செய்வோமாகில், தேகம் வாடாமலும், வதங்காமலும், இருக்கக்கூடும். இதுதான் பதப்படுத்துவதென்பது. எந்த உடலையும், எந்தப் பொருளையும் பதப்படுத்தலாம். பதப்படுத்திய கருவாடானாலும், துவையலானாலும், மீனானாலும் (Tinned Fish] மாம்சமானாலும் [Tinned Meat], திருடன், கொலையாளி தேகமானாலும், அல்லது மகாத்மா உடலானாலும், எதையும் இறந்த பிறகு அழிவுறாமல் வைக்கலாம். இந்தக் காரியங்கள் யாவும் தெய்வத்தன்மையுமல்ல; தெய்வ காரியமுமல்ல; சாதாரண மனித காரியங்களே. பல மக்களிடத்தும் பரவியுள்ள இவ்வித மூட பக்தியைப்போக்கி தெளிவு பெறுவதற்கு சமயம் அளித்த நமது நந்தம்பாக்கம் நிருபருக்கு ஆசி கூறுகிறோம்.

# உடலை வருத்திக்கொள்ளல்.

## 20-ம் அத்தியாயம்.

கோலாலம்பூரிலிருந்து (Malay States) ஒரு நண்பர் நமக்கு எழுதிய கடிதத்தில், தான் "குடி அரசில்" "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற கட்டுரைகளைப் படித்து வந்ததாகவும், அதனுடன் நமது தோழர் குருசாமியின் கட்டுரையாகிய "கத்தோலிக்க குரு" என்னும் மகுடமிட்டு எழுதியுள்ளதைப் படித்து வந்ததில், தனக்கு கடவுள், மதம், புராண இதிகாசங்களின் நம்பிக்கை இழந்ததாகவும், ஆனால், தைப்பூசத் திருவிழாவன்று சில சம்பவங்களைப்பார்த்து, திடுக்கிட்டதாகவும், எழுதி அந்த சம்பவங்களின் காரண காரியத்தைத்தான் தெரிந்துகொள்ள வேண்டி அந்த சம்பவங்கள் எவ்விதம் நிகழ்கின்றன? ஏதோ சக்தி என்று ஒன்று இருந்து கொண்டு அவைகளை நடத்துகின்றனவா? என்று கேட்டு, இவ்வித சம்பவங்களின் கருத்தை விளக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றார்.

நமது நிருபர் கூறும் இந்த அற்பச் செயல்கள், இன்றல்ல, அன்றல்ல, என்றும், அறியாமை மேலிட்டிருக்கும் நாடுகளில், சாதாரணமாகக் காணலாம். மிகுதியாக நமது இந்திய நாட்டில் இச்செயல்களைக் காட்டிக்கொண்டு சீவித்து வரும் மனிதர் அநந்தமுளர். செடில் குத்தியாடல், நெருப்பு மிதித்தல், அடிதண்டம் போடல், தாடைகளில் ஊசி

பொத்திக் கொள்ளல், ஒண்டி சிகரங்களின் மேல் ஏறி அதிலி ருந்து பல்டி அடித்தல், நெருப்பு, திகி திகி என்று எரியும் மத்தியில் குதித்தல், தண்ணீரில் மூழ்குதல், தண்ணீரில் மிதந்து கிடத்தல், 1½படி அரிசி சாதத்தை ஒருவனே விழுங் குதல், பாஷாணத்தை அருந்துதல், கற்களையோ, கண்ணாடித் துண்டுகளையோ, ஊசி, ஆணிகளையோ, நரநரவென்று கடித் தல், தேக முழுமையும் சாம்பலைப் பூசிக்கொள்ளல், ஒரு தினவு அரிசி ஒன்றைத்தின்று உயிருடன் வாழ்தல், பல நாள் உண்ணுமலே விரதம் இருத்தல், நாய் போல் குலைத்தல், கழுதை போல் கத்தல், சிங்கம்போல் உறுமுதல் இவைபோ ன்ற செயல்கள் நமது நாட்டில் பல இடங்களில் நிகழ்வதைப் பார்க்கலாம். கிராமங்களில் மிகுதியாகவும் காணலாம். இவைகள் யாவும், சீவன உபாயத்திற்காகிலும் பாமர மக்களை ஆச்சரியமுறச் செய்து, கீர்த்தி பெறுவதற்காகிலும், நடந்து வரும் செயல்கள் என அறிக.

இத்தியாதி செயல்கள் பாமர மக்கள் கூடும் இடங்களில் மிகுதியும் காணலாம். நமது நண்பரைக் கேட்கின்றேன், இச் செயல்கள், தெய்வச் செயல்களா யின், ஏன் விசாரணை மிகுந்த Paris, London, Chicago, New York, Tokio நகரங்களில் நடைபெறுவதில்லை? ஏனெனில் அவ்விடங்களில், தெளிவு மிகுந்து இருத்தலால், இந்தப் பித்தலாட்டங்களைக் கண்டு நகைப்பார்கள்; அல்லது அருவருப்பார்கள். இன்னும் இந்த அகோரச் செயல்களை யும், மெய் வருந்தும் காரியங்களையும், சமூக வாழ்க்கைக்கு விரோதமென அச் செயல்களின் கர்த்தாக்களைத் தண்டித்தும் விடுவார்கள். நமது கீழ் நாடுகளில் (Eastern Countries) அறியாமை மிகுந்து இருப்பதால், அவ்வூர் அரசுகளும் பாரா முகமாகவே இருந்து வருகின்றனர். ஒருதிருஷ்ட்டாந்தம் எடு

த்துக்கொள்ளுவோம். "லடபட பண்டே" என்று இரும்புத்துண்டுகளைத் தட்டிக்கொண்டு, தேக முழுமையும், ரத்தக்களமாக்கிக்கொண்டு வாயின் மூலம் மலத்தையும், எச்சலையும் கக்கிக்கொண்டு, பிச்சை எடுத்துண்பவர்களை, கோயில் குளங்கள் பக்கங்களில் காணலாம். நிர்வாணமாகச் சிலர் சூரியனைப்பார்த்தபடியே நிற்கின்றார்கள். கொடிய வைணவர்கள் பந்தங்களைக் கொளுத்திக்கொண்டு, தேக முழுமையும் அடித்துக்கொள்கின்றார்கள். ஐந்து முடி சாட்டையால், ரோமன் கத்தோலிய குருக்கள் தங்கள் தேகத்தை, ரத்தம் வீரிட, அடித்துக்கொள்கின்றார்கள். சில பாதிரிகள், இருட்டறையில் இருந்துகொண்டு, கந்தையை உடுத்திக்கொண்டு, சாம்பலை தேக முழுமையும் பூசிக்கொண்டு (in sackcloth and ashes) தவம்புரிகின்றனர். முள் பாத ரட்சையின் பேரில், சிலர் நடக்கின்றார்கள். இரும்புக்கம்பிகளால் தங்கள் தேகங்களை சூடிட்டுக்கொள்கின்றார்கள். இதைப்போன்ற கொடூர பழக்கங்களை, புத்தர் காலத்தில், அநேக இருடிகள் (ரிஷிகள்) செய்து வந்ததாக தெரிகின்றது.

ஒரு தினை அரிசியைத்தின்பதை முன்னரே குறித்துள்ளோம். நாயைப்போல் நீரை அருந்தும் ரிஷிகள் இருந்தார்களாம்! குழந்தைகளைப்போல், தவழும் ரிஷிகளும் தவம் புரிந்தார்களாம்! ஒத்தைக் காலைத்தூக்கி நின்றார்களாம்! மற்றொரு காலை ஆகாயமார்க்கமாகத் தூக்கிக்கொண்டு தவம் புரிந்தார்களாம். கைகளைத்தூக்கிக்கொண்டு, கைகளின்சதை அற்று விழும்படி தவஞ்செய்தார்களாம்! இன்றைக்கும், சிற் சில கோயில் பக்கங்களில், இத்தியாதி முனிவர்களை (Ascetics] காணலாம். "பொந்தியோடு கைலாய" மென்ற உயிருடன் சமாதி அடைகின்றவர்கள் ஆங்கிலேய அரசாட்

சிக்கு முந்தி இருந்து வந்தார்கள். புருஷன் இறந்ததற்காகத் தன்னுயிரையும் இழப்பதற்குத்தயாராய் இந்த நாட்டில் அனேக பெண்கள் இருந்து வந்தனர். இவ்வித அருவருப்புக்கொண்ட துர்ப்பழக்கங்கள் நமது நாட்டில் அதிகம். இச்செயல்களுக்கு முன்னால், தேங்காயுடன் உருளுவதும், ஊசிகளைப் பொத்திக் கொள்வதிலும், நெருப்பை மிதிப்பதிலும் என்ன விசேஷமிருக்கின்றது?

சமணர்கள் என்ற ஒரு மதக் கூட்டத்தார் இருக்கின்றார்கள். அவர்களில், ஸ்வதேம்பராஸ், திகம்பராஸ் என்ற இரண்டு வகையுண்டு. இவ்விரு கூட்டத்தாரில், ஒருவர் தேகத்தை ஆடையைக் கொண்டு மூடாமலே இருந்துவருகின்றனர். வெய்பலிலும், குளிரிலும், நிர்வாணமாகவே இருக்கின்றார்கள். உடலை வருத்தும் பழக்கம், புராதன பழக்கம். வேதகாலம் முதல் தொன்று தொட்டே, இந்த மூட மதபழக்கங்கள் நமது தேசத்தில் இருந்து வருகின்றன. கிருத்திகை, அமாவாசைகளில், நமதுநாட்டார், உபவாசம் இருப்பதும், இந்த துர்ப்பழக்கங்களாலென அறிக.

சிலர் உயிரை வேண்டுமென்றே துறக்கின்றார்கள். இதுவும் ஓர் வித பழக்கந்தான். "சதி" என்று வழங்கும் உடன் கட்டை ஏறுதலும் (Suttee) பழக்கந்தான். இக்கொடிய செய்கைகள் யாவும் தன்னைத்தான் இம்சித்துக்கொள்ளும் பழக்கத்தால், உலகில் உண்டாயின. காட்டு மிராண்டிகள் வாயிலாக வந்த பழக்கங்களில், இவை சில தான் தற்காலங்களில் பழக்கத்தில் வந்திருக்கின்றன. அறிவு துலங்கத்துலங்க இக்கொடிய செயல்கள் கைவிடப்படும்.

தென்னிந்தியாவில், திருப்பதிஎன்று ஓர் பிரபல க்ஷேத்திர மொன்றுண்டு. வருஷா வருஷம் அக்கோவிலுக்கு லட்

சக்கணக்கான பக்தர்கள், மஞ்சள் வேஷ்டி தரித்து, கோயிலைத் தரிசிக்கப்போகின்றனர். அவர்களில் சிலர் சென்னையிலிருந்து "அடிதண்டம்" என்று வழங்கும் தரைமேல் உருண்டுபோகும் பழக்கத்தைப்பார்க்கலாம். சென்னைக்கும், திருப்பதிக்கும் சுமார் 50, 60 மைல் தூரமிருக்கும். நமது நிருபர் கண்ட சிறிது தூரம் அடிதண்டம் போட்டுக்கொண்டு போன, விஷயம், ஆச்சரியமில்லை. சென்னை தெருக்களில் ஒருவன் தனது குழந்தை சமுசாரத்துடன் பட்டப் பகலில் கொதிக்கும் ரோட்டின் பேரில், ஒரு செம்புப் பாத்திரத்தைக் கையிலேந்தி, அது விழாமல்படிக்கு அடிதண்டம் போட்டுக் கொண்டு உருண்டு, உருண்டு பிச்சை எடுத்துச் செல்கின்றான். நமது நிருபர் அந்த அகோர வேஷத்தைப் பார்த்தாராமாகில், கையிலேந்திய பாத்திரம் ஏன் விழவில்லை என்று திடுக்கிடுவார் போலும்!

வேதாந்திகள், இத்தியாதி மயக்கத்தைக் குறிக்க "கட்டையில் கள்ளன், பழுதையில் பாம்பு, கிளிஞ்சலில் வெள்ளி" என்ற திருஷ்டாந்தங்களை, காட்டுவதுண்டு. விசாரணையில், கட்டை, கட்டையாகவே தோன்றும். அது போலவே நமது நிருபர்கண்ட சம்பவங்களை பொறுமையுடன் விசாரித்துப் பார்ப்பாரேயாமாகில், தான் கண்ட சம்பவங்களில் யாதொரு விசேடமுமில்லை என்று தெளிவு பெறக்கூடும். ஏமாற வேண்டுமானாலும், திடுக்கிடவேண்டுமானாலும், எதையுங்கண்டு திடுக்கிடலாம். "மிரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்று ஓர் பழமொழியுண்டு. இதனைத்தான் கண்டு மிரண்ட சம்பவங்கள் சம்பந்தமாக நமது நிருபரைக் கவனிக்கும்படி கோறுகிறோம்.

நெருப்பு மிதிக்கும் திருவிழாவென பல இடங்களில் தென்னாட்டில் காணலாம். பாமர ஜனங்கள் இதனைக் கண்டு

அம்மனுடைய மகத்துவமெனச் சொல்லிக்கொள்கின்றார்கள். 40, 50 வருடங்களுக்கு முந்தி, இரண்டொரு இந்த சம்பவங்களை நாமும் பார்த்து மிருக்கின்றோம். இதைச் சாதாரணமாக நாட்டுக் குடி மக்கள் இவ்வாறுகச் செய்வதுண்டு. நெருப்பை உண்டாக்கி, அது சாம்பல் படர்ந்த சமையத்தில் அதன் மேல் ஓடுகின்றார்கள். கொதிக்கும் தரை மேல் நாமும் ஓடலாம். நடந்து சென்றால் தான், சுடுகை தெரியும். இன்னொரு சமாதானமும் (Explanation) உண்டு. அது யாதெனில் நெருப்பை மிதிக்கப் போகின்றவர்கள், அந் நாள் முழுதும்! கால்களைத் தண்ணீரில் நனைத்துக் கொண்டிருப்பார்களாம்! மூன்றாவதாக நெருப்பை மிதிக்கின்றவர்களின் கால்களின் அடிப் பாகத்தைப் பார்த்தால் கொப்பளங்கள் தோன்றியிருக்கும். இதனைப் பரிசோதிக்காத பாமர மக்கள், "கடவுளரும்", "அம்மனது மகத்துவ"மென்று பிதற்றுகின்றார்கள். எந்த விவேகியும் இதைக் கண்டு திடுக்கிட அவசியமில்லை. ஏமாறுமல் விசாரித்து அறிவதே நமது கடமை. நெருப்பின் மேல் நடப்பது கடவுளருளானல் நெருப்புப் பட்டுச் சாகும் குழந்தைகளுக்கு ஏன் அந்த "சிவனருள்" இல்லாமல் போகின்றதென்று கேட்கின்றோம்? குளிர்ச்சி செய்யும் பல பச்சை இலைச்சாற்றைப் பிழிந்து காலில் தடவிக்கொள்வதாகவும் கேள்வி. ஜால வித்தைக்காரர்கள் பெரியதோர் நெருப்புக் கட்டியைக் கையிலேந்தி, சில நிமிஷம் வைத்துக் கொண்டிருப்பதை நாம் பார்த்து இருக்கின்றோம். அதனை "ஈசனருள்" என்று அவர்கள் சொல்வதில்லை. மந்திரத்தால் மாங்காய் விழா விடினும் தந்திரத்தால் விழச் செய்யலாமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நமது நண்பரையும் அவரைப்போன்று மயங்குகின்றவர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

கழுத்தில் வைத்த தேங்காய் விழாமல், அடி தண்டனி டுவதைக்கண்டு எந்த சக்தியால் அது நிகழ்கின்றதென்று நமது நிருபர் கேட்கின்ருர்? பல்லி முதலிய பூச்சி சுவரின் மேல் தனது கால்கள் எதையும் பிடித்துக்கொள்ளாமற் படி க்கே எப்படி உயர நடந்து போகின்றதென்று கேட்கின் ருேம்? காற்று வெளிப்படுத்தப்பட்ட பாத்திரம் சுவரில் ஒட் டிக்கொள்வது எந்த சக்தியால் என்று கேட்கின்ருேம். அதே பிரகாரம் கழுத்தில் வைப்பதற்கு முன், அந்தத் தேங்காயிலு ள்ள காற்றை வெளியிடச்செய்து (create a vacuum) கழு த்தின் மேலே ஏன் வைத்திருக்கக் கூடாதெனக் கேட்கின் ருேம்? தேங்காயைக் கழுத்தில் வைப்பதற்கு முந்தி, அதனை நமது நிருபர் பரிட்சித்துப் பார்த்தாராவெனக் கேட்கின் ருேம்?

இவ்விதமாக காற்றில்லாமற் செய்து தேங்காயை ஒட்ட வைத்தலும் இருக்கலாம். அல்லது கழுத்திலுள்ள சதை யைக்கொண்டு பிடித்து வைத்திருந்தாலும் இருக்கலாம். நெற்றிச் சதையைக்கொண்டு, பெரும் புத்தக மொன்றைத் தூக்குவதுபோல், கழுத்தின் சதையைக்கொண்டு தேங்காயை கழுத்திலிருந்துவிழாமல்செய்வதுலேசே! நமதுநிருபரை ஒன்று கேட்கின்ருேம். அடிதண்டம்தேங்காயுடன்போடுவோனை நிமிர ச்சொல்லி அவன் கழுத்தைப் பரிசோதித்தாராவெனக் கேட்கி ன்ருேம்? தோற்றங்களின் (appearances or phenamena) காரணம் தெரியும்வரை, "கடவுளர்களும்" "தேவதைகளும்" "சக்திகளும்" கற்பிப்பது ஸகஜம். காரணம் தெரிந்துகொ ண்ட மாத்திரத்தில் அந்த "தேவதைகள்" பறந்தோடிப் போகின்றதும் ஸகஜம். ஊசி குத்திக்கொள்ளும் "மகிமை" யின் வரலாற்றை முன் "குடி அரசில்" செய்கோன் நிருபருக்

குக் கொடுத்த சமாதானத்தை நமது கோலாலம்பூர் நிருபர் கவனித்திருப்பாரென எண்ணுகின்றோம். அந்த சம்பவத்திலொன்றில், அந்த "சாமியார்" விஷமுண்டு இறந்ததாகக் கேள்விப்பட்டோம். அவர் யோகாப்பியாசம், தன்னைக்காப்பாற்றாமல் போனதைக் குறித்து விசனிக்கின்றோம். ஊசியை விழுங்குவதும், ஊசியை பொத்திக்கோள்வதும் வியர்த்த தோந்திரவேயொழிய, வேறொன்றில்லை. இதனால் வரும் பயன் கிஞ்சித்தே. இதற்காக உடலை வருத்துவதென்றால் பைத்தியகாரத்தனமென்றே கூறவேண்டும்.

மற்றும் பல பைத்தியக்காரர்கள் செய்யும் செயல்களைக் கண்டு மயங்கும் பாமர மக்களுக்கு கணக்கே யில்லை. சென்னையில் சில வருடங்களுக்கு முந்தி, முதுகில் சங்கிலிகளைக்குத்திக்கொண்டு மூன்று தேர்களை இழுத்துச் சென்றார் ஒருவர். தெருக்களில் வேடிக்கை பார்த்த பயனைத்தவிர மற்ற எந்த விதப்பயனும், அவருக்காகிலும், விளையவில்லை. இதைவிட கொடூரமான காரியமாகிய செடில் குத்தி ஆடல், அதாவது, முதுகில் சங்கிலியால் குத்திக்கொண்டு அதன் மூலமாக கம்பத்தில் கட்டுண்டு, அதனைச்சுற்றிவரும் காட்சி மிகவும் கொடுமையானதாகும். நமது அதிர்ஷ்ட வசமாக ஆங்கிலேயர் இத்தக்கொடூர பழக்கத்தினை தடுத்து விட்டார்கள். இதில் யாதொரு மகிமையுமில்லை. நாயையும், நரியையும் கூட அவ்விதமாகத் தொங்கவிடலாம்! முதுகின் தோலை இழுத்து ஊசியைக் குத்தினால், அவ்வளவு வருத்த மிராது. இதுவும் பைத்தியகார காரியங்களில் முதல் நம்பர். இந்த வேஷங்கள் யாவும் உடலை வருத்தி, தெய்வ அருள் பெறலாமென்ற மூட பக்தியால் விளையும் அனர்த்தங்களென அறிக. இத்தியாதி காரியங்களில் எந்த பக்தியுமில்லை, சக்தியுமில்லை. அனேக மூடப்பழக்கங்களில் இதுவும் ஒன்று. இதனைக்

கண்டு மயங்குவதும், தயங்குவதும், திடுக்கிடுவதும், மனத்தின் மருளே யொழிய, தெளிவு ஆகா. கட்டையைக் கண்டு கள்ளெனத் தயங்குவதும் இந்த மன மருட்சியேயாகும். இவ்விரண்டும் நமது மன மயக்கே. உள்ளதை உள்ளபடி உணர்ந்தால், எவ்வித கடவுளருக்கும் தெய்வங்களுக்கும், சக்திகளுக்கும், மகத்துவங்களுக்கும், இடமிரா. மடமை நிறைந்துள்ள இவ்வுலகில் மன சங்கற்பங்களிலிருந்து மீளுவது தான் கஷ்டம். இவ்வித மன மயக்கை ஒழிக்க ஒரே வழி யுண்டு. அதாவது மெஞ்ஞான வழியாகிய விசாரணையை எந்தக்காலத்திலும் கையாளவேண்டும்.

குறிப்பு:—சென்ற வாரம் கூடலூர் தாலூகாவைச் சேர்ந்த கொத்தட்டையில், நெருப்பு மிதிக்கும் திருவிழா நடந்த தாகவும், அதில் கலந்து கொண்ட சிறுவர்கள், நெருப்பின் மேல் நடந்தோடும் காலே, ஒருவர் மேல் ஒருவர் விழுந்து, நெருப்பால் தேகம், முகம் தகிக்கப்பட்டதாகவும் "இந்து" பத்திரிகா நிருபர் எழுதுகின்றார். இந்த அபாய சம்பவத்தில், நமது வாசகர்கள் கவனிக்க வேண்டிய தென்னவெனில், நெருப்பின் பேரில் ஓடும்போது கால்களைத் தகிக்காத "தெய்வீகம்" முகங்களையும், உடல்களையும் ஏன் கொளுத்திய தென்பதே? முகங்களையும், உடல்களையும்நெருப்பை சகிக்க, ஏதோர் பக்குவம் செய்யாத தோஷத்தால், நெருப்பினால் அவ்வுருப்புகளை பற்றவைக்க நேரிட்ட தென்பது உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. ஆதலின் எந்த "தெய்வீகமும்" நாம் செய்யும் பக்குவத்தில் இருக்கிறது.

இன்னொரு விஷயம் நமது சுயமரியாதைத் தோழர்கள் கவனிக்க வேண்டிய தென்னவெனில், அந்தக்கொத்தட்டை

யில் ஒரு விபரீத திருவிழா நடந்தேறி வருகிறது. அதன் பெயர் தாலி அறுக்கும் திருவிழாவாம். அதில் ஆயிரக்கணக்கான ஆண் மக்கள், பெண்மக்களைப்போல் உடுத்திக்கொண்டு வக்கணையோடு அழுகின்றார்களாம்! அழுது விட்டுத் தாலியை அறுத்துப் போடுகின்றார்களாம்!! இது மகா பாரதத்தில் வழங்கும் அரவான் கதை விஷயமாகாவாம்!!! இதென்ன விபரீதம்!!!! இந்த அகோர நடத்தையை நிறுத்துமாறு நமது சுயமரியாதைத் தோழர்கள் நமது பாமர மக்களின் அறியாமையை நீக்க முயல்வார்களாக! ரஷ்ய நாட்டில், ஒவ்வொரு சிறுவனும் தனது நாட்டின் ஒருவருடைய அக்கியானத்தை வருஷமொன்றில் போக்கக் கடமைப்பட்டுள்ளானும்! இதனை நமது நாட்டு வாலிபத்தொண்டர்கள் கவனிப்பார்களாக!

---

# நாஸ்திகம்.

## 21-ம் அத்தியாயம்.

மூட உலகம், நன்மை அளிக்கும் இயக்கங்களை முதலில் பழித்தே வந்திருக்கின்றது. பழிப்பதோடு நிற்காமல் இம்சித்தும் வந்திருக்கிறது. விஷய ஞானத்தையே (Knowledge of things) தடுத்து வந்திருக்கிறது. நாஸ்திகபோதகரான இங்கர்சாலை (Ingersoll) அமெரிக்க நாடு முழுமையும் பழித்தது. இன்று அவர் நூறும் ஆண்டு பெரு நாளைக் கொண்டாடுகின்றது! ஐம்பது வருஷத்திற்கு முந்தி ஆங்கில நாஸ்திகரான பிராட்லாவை (Braudlaugh) ஆங்கில நாடு சிறையிலிட்டது. இன்று அவருடைய ஜுபிலியை (Jubilee) கொண்டாடுகின்றது! இன்று நாஸ்திகர்களாகியவர்கள் பழிக்கப்படுவார்; இம்சிக்கப்படுவார், ஆனால் இந்த மகாநாட்டைப் போன்ற அரிய பெரிய நாஸ்திக மகாநாடுகள் தேசமுழுமையுமே நாஸ்திகத்தைப் பரவச் செய்யும். காலப்போக்கில், இந்த மகாநாட்டை உண்டாக்கியவர்களை உலகம் மறந்துவிடும். ஆனால் அவர்கள் நாஸ்திக விஷயமாகக்கொண்ட (Ideas), எண்ணங்கள் மக்களை மூட நம்பிக்கைகளிலிருந்து விடுவித்து சுகப்படுத்துமென்பதற்குத் தடை இல்லை.

### நாஸ்திக வரலாறு.

உலகில் நாஸ்திகம் ஓர் பழமையான சித்தாந்தம். (Doctrine) ஆஸ்திகம் உண்டான போதே நாஸ்திகமும் உண்டாயது. "கடவுள்" உண்டென்ற சொல் கிளம்பியதும்

கடவுள் இல்லையென்ற சொல்லும் கிளம்பியது. ஆதி மனிதன் பேசுவதற்கு முந்தி ஆஸ்திகமென்பதே அறியான். பேசத் தெரிந்த பிறகே, "கடவுள்", "தெய்வம்", "பேய்", "பிசாசு", "உயிர்", "சீவன்", "ஆத்மா" என்ற சொற்களை, உச்சரிக்க ஆரம்பித்தான். ஆதியிலிருந்தே இந்த சொற்களை மறுத்தவர்கள் உலகில் இருந்திருக்கிறார்கள். காட்டுமிராண்டிகளில் சிலர் "கடவுள்" என்ற சொல்லே தங்களுக்குத் தெரியாதென்று தெரிவித்திருக்கிறார்கள்! சில பாதிரிமார்கள் அன்னோரைக் கடவுளைப்பற்றிக் கேட்டபோது அந்தச் சொல்லே தங்கள் பாஷையில் இல்லை என்றார்களாம்! இவர்களை ஆதி நாஸ்திகர்கள் (Primitive Atheists] என்று எண்ணலாம்.

மதஸ்தர்களே எதிர் மதஸ்தர்களை நாஸ்திகர் என்று கூறுகின்றார்கள். சரித்திர காலத்தில் தோன்றிய சில மதங்கள், மற்றுஞ் சில ஏனைய மதங்களுக்கு நாஸ்திகமாகவே கருதப்படுகின்றது. சாங்கியர்களை (இதுவோர் தர்சனம் [Philosophy) நிரீஸ்வர வாதிகளென்று, அதாவது நாஸ்திகர்களென்றே வழங்குகின்றார்கள். புத்தர்களையும் நாஸ்திகர் என்று சமையவாதிகள் கூறுகின்றார்கள். ஓர் மதஸ்தன் ஏனைய மதஸ்தனை நம்பாதவன் (Heretic or Unbeliever) அதாவது நாஸ்திகனென்றே கருதுகின்றான். ஆதலின் நாஸ்திகன் என்ற பெயர் கண்ணியமான (Respectably) பெயர் என்பதற்கு என்ன ஆட்சேபனை? ஒரு மதஸ்தனே இன்னொரு மதஸ்தனை நாஸ்திகன் என்ற போது "கடவுள்" இருப்பதை நம்பாதவனை நாஸ்திகன் என்றால் என்ன குறைவு?

## நாஸ்திகமென்றால் என்ன?

சாதாரணமாக "நாஸ்தி" என்றால் இல்லை என்று பொருள். "நாஸ்தி" என்பது வடமொழி. நாஸ்திகன்

என்றால் இல்லை என்பவனைக் குறிக்கும். ஆனால் பழக்கத்தில் கடவுளை இல்லை என்பானை நாஸ்திகன் என்று அழைக்கின்றார்கள். இவனை (Atheist) என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். கடவுள் உண்டென்பானை ஆஸ்திகன் (Theist) என்று வழங்கப் படுகின்றன. ஆனால் வைதீகர்கள் (The Orthodox) தங்கள் மதத்தை நம்பாத மதஸ்தர்களை நாஸ்திகர் என்று சொல்லுகின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நாஸ்திகன் என்றால் (Heretic) அதாவது நம்பாதவனென்று பொருள். ஆதலின் ஒரு மதக்கடவுளை நம்பாத மதஸ்தனாயினும், எந்த மதத்தையும் நம்பாத நாஸ்திகனாயினும் ஒருவருக்கொருவர் நாஸ்திகனே. சைவன், விஷ்ணுவை நம்புவதில்லை. வைணவன் சிவனை நம்புவதில்லை. இவர்களில் ஒருவருக்கொருவர் நாஸ்திகனே. இவ்விருவர் கூறும் சிவனையும், விஷ்ணுவையும் சேர்த்து இரண்டையும் நம்பாதவனும் நாஸ்திகனே. எனவே ஞாயமுறையில் நாஸ்திகன் என்ற பதத்தில் யாதொரு இழிவுமில்லை. ஆனால் மதஸ்தர்கள் தங்கள் மூட வைராக்கியத்தாலும் (Bigotry) மூட துவேஷத்தாலும் (Hatred) நாஸ்திகர்களை இகழ்ந்தும், இம்சித்தும் வந்திருக்கின்றனர்.

## ஆஸ்திக வரலாறு.

"கடவுள்" என்ற சொல் ஓர் புராதனச்சொல். இந்தச் சொல்லுக்குரிய பொருளை யாரும் கண்டிலர். இந்தச்சொல்லால் குறிக்கப்படும் பொருளை மெய், வாய், கண், மூக்கு, செவிகள் மூலமாகவாவது அல்லது எந்தவிதக் கருவிகளாலாவது பரீட்சித்து அறிந்தார் உலகில் யாருமில்லை. மதப்புத்தகங்களில் கடவுள் நெருப்பு வடிவமாகப் புதரில் தோன்றினார். மான் மழுவேந்தி ஜடை முடியுடன் தோன்றினார். ரிஷப

வாகன ரூடராய் தோன்றினர். காற்று வடிவமாகத்தோன்றினர். ஜல மயமாகத் தோன்றினர் என்று எழுதப்பட்ட கதைகளுண்டு. இதனைச் சிறுவர்களும் நம்பார். ஆனல் இந்தக் "கடவுள்" என்ற சொல்லுக்குண்டாகிய மதிப்பும், மரியாதையும், பெருமையும், பயமும் இவ்வுலகில் எந்த மனிதனும் அடைந்ததில்லை, எண்ணத் தொலையாத வேதபுராணங்களும், வியாக்கியானங்களும், கோவில்களும், சொத்து சம்பத்துகளும் இந்தவொரு சொல்லுக்கு ஏற்பட்டுள, கோடானகோடி மக்கள் பிரதிதினம் இச்சொல்லை உச்சரிக்கின்றார்கள். இச்சொல்லுக்குத் தாழ்பணிந்து, தண்டனிட்டு, வாழ்த்தி வணங்குகின்றார்கள். இச்சொல்லால் தாங்கள் செய்யும் பாவங்கள் மன்னிக்கப்படுமென்றும், புண்ணியங்கள் நற்பலனைத் தருமென்றும் கருதுகின்றார்கள். இச்சொல்லுக்குப் போடாத சண்டையில்லை. இம்சிக்கப்படாத மனிதனில்லை. கொல்லப்படாத உயிரில்லை. ஆனல் இந்த சொல்லுக்குரிய பொருள் இன்னதென்று ஒருவருக்கும் தெரியாது. இது எவ்விதமான பொருளென்றும் தெரிந்து சொல்வார் உலகில் யாருமில்லை. அப்படி இருப்பார், இப்படி இருக்கமாட்டார் என்று பிதற்றுகின்றார்களே யொழிய அதனை உண்மையாகத் தெரிந்துரைப்பார் இவ்வுலகில் யாருமில்லை. மதஸ்தர்களும், தத்துவ ஞானிகளும் இருட்டறையில் இல்லாத கருப்புப் பூனையை இரண்டு குருடர்கள் தேடுவதைப்போல் இச் சொல்லைக் குறித்து வேதாந்தம் பேசுகின்றார்களே யொழிய இந்தச் சொல்லை மனிதன் சொல்ல ஆரம்பித்த முதல் யாரும் தெரிந்துகொண்ட பாடில்லை. இந்த அறியாமையால்தான் "கடவுள்" என்றால் மறைபொருள் என்று அர்த்தமிட்டார் போலும்! ஆனல் உலகில் பெரும்பான்மை மக்கள் இச்சொல்லுக்குரிய பொருள் வேறு உண்

டென்று நம்பி வருகின்றார்கள். இந்த நம்பிக்கைக்குத்தான் ஆஸ்திகம் என்று பெயர். இந்த நம்பிக்கைக்கு ஆதாரமில்லை என்பதற்கு நாஸ்திகமென்று பெயர். இந்தச் சொல்லின் உற்பவத்தை அறிந்தால் இந்தச் சொல்லுக்கு வெறும் சொல் கற்பனையேயொழிய மற்ற எந்தவித பொருள் ஆதாரமும் கிடையாதென விளங்கும்.

## "கடவுள்" உற்பவம்.

ஒரு காலத்தில் மனிதன் பல்லாயிர வருஷங்களாகப் பேசத்தெரியாதவனாக இருந்தான். அந்தக் காலத்தில் "கடவுள்" என்ற சொல் உலகில் வழங்காதிருந்தது. அதனை யாரும் பேசுவாரில்லை. யாரும் சொல்வாரில்லை. இது பத்து லட்சம் வருஷங்களுக்கு முந்தியிருக்கலாம். ஆனால் உலகில் உயிர் முளைத்து நூறுகோடி வருஷமிருக்கும். இந்தக் காலங்களில் வாழ்ந்து மடிந்த உயிர்கள் கோடிகோடி, கோடான கோடி, இவ்வுயிர்கள் இந்தச் சொல்லைச் சொல்லத் தெரியா. இந்தக் கற்ப காலங்களாக எந்த உயிரும் இச்சொல்லை சொல்லவுமில்லை. எந்த உயிரும், கேட்டதுமில்லை, மனிதன் மிருகத்திலிருந்து மாறி வந்த பிறகே, பேச ஆரம்பித்தான். இவன் பேசின பிறகும் வெகு காலம் இச்சொல்லை உச்சரியா திருந்தான். மனித பாஷை அபிவிருத்தி அடைந்த பிறகே "கடவுள்" என்ற சொல்லை, கற்பிக்கத் தொடங்கினான். இதன் விபரத்தை பூர்வமனித நூலாசிரியர் பிரேசர் (Frazer) இயற்றிய (The Golden Bough) என்ற நூலில் காணலாம். எனவே கடவுள் என்ற சொல் மனிதன் உலகில் தோன்றிய பிறகே உற்பத்தி யாயிற்று. எது போலெனில் "ஐந்து கண்ணன்" "பத்துத்தலை ராவணன்" "ஆயிரந்தலைப்பாம்பு" "ஆப்ரகடா

ப்ரா" (Abrakadabra) "காடலெப்ரா" (Kadalabra) என்ற சொற்கள் போலென அறிக. ஆனால், இன்றைக்கும் இந்தக் கொள்கைகளுக் குறிய பொருள்களை யாரும் காணாவிடினும், இந்தச் சொற்களைக்கேட்டு நடுங்கும் குழந்தைகள் பல கோடி! அழும் குழந்தைகள் பல கோடி! கும்பிடும் குழந்தைகள் பல கோடி! இந்தச்சொற்களைப் போலவே "கடவுள்" என்ற சொல்லும் பலகோடி மக்களை அழச்செய்கின்றது! தொழச் செய்கிறது! நடுங்கச் செய்கின்றது! இந்தக்கற்பனைச் சொல்லின் மகத்துவமே, மகத்துவம்!! இந்த மகத்துவத்தின் ஆதரவென்ன? இதனைக் கண்டறிவாம்.

## கற்பனைச் சொல்லுக்கு வந்த மகத்துவம்.

ஆதியில் மிருகத்தினின்று பெறப்பட்ட மனிதன், மிருகங்களைப்போலவே இயற்கை சம்பவங்களைக்கண்டு பயந்து வந்தான். இருளைக் கண்டு பயந்தான், இடிகளைக்கண்டு பயந்தான், பெரும் மழையைக்கண்டு பயந்தான், பெரும் புயலைக் கண்டு பயந்தான். பேசத்தலைப்படவும் இந்த பயங்களை சைகையாலும் சொற்களாலும் ஒருவனுக்கொருவன் தெரிவித்துக் கொண்டான். இத்தியாதி பயந்தரும் இயற்கை சம்பவங்களுக்கு தன்னைப்போல் பதின் மடங்கு பெரிதான கர்த்தா இருக்க வேண்டுமென்று கற்பித்துக் கொண்டான். அந்த கற்பனைக் கர்த்தாக்களுக்கு பெயரிட்டு தெய்வங்களென்றும் கடவுளர் என்றும், பேய் பூதங்களென்றும், ஐந்து கண்ணனென்றும், சிவன், விஷ்ணு, பிரமனென்றும் அதற்கு மேல் சர்வ சக்தனென்றும், சர்வவியாபி என்றும், சத்து சித்து ஆனந்த மென்றும் பாஷை பெருகப் பெருக பல வேறு கற்பனை சொற்களை அதிகப் படுத்திக்கொண்டு

சென்றான். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையைப் போல் இன்னும் இந்த சொற்களை அனந்த கோடிமக்கள், கற்றோரும் கல்லாதோரும் பாம்பரை பழக்கத்தால் சொல்லிக்கொண்டு வருகின்றார்கள்.

இவ்விதமாக தன்னால்கற்பிக்கப்பட்ட சொற்களுக்குத் தான் வாழும் வீடுகளைப்போல், கோயில்களையும், மண்டபங்களையும் அமைத்தான். தனக்கும் பெரியவனுடைய கோபத்தைத் தணிக்கவாவது, அருளைப் பெறுவதற்காவது தான் வணங்கி நடப்பதைப்போல் இக்கற்பனை சொற்களுக்கு தூப தீப நிவேதனங்கள் ஆடல், பாடல், சங்கீதம், மேளதாள நடவடிக்கையும் அமைத்தான், இவ்விதமாக "கடவுளென்ற" பதமும் கூட கோபுரங்களும் கிரியை சரியைகளும் ஆடையாபரணங்களும் உண்டாயின.

## மத குருமார் வருகை.

அந்தக்காலங்களில் வேட்டையாடிப் பிழைக்கவும், உழுதுபயிரிட்டு வாழவும் மனமில்லாதசில சோம்பேறிகள், இந்தக் கற்பனைச் சொற்களுக்கு விக்கிரகங்களென்றும், சிலுவை (Cross) என்றும் பிறை (Crescent) என்றும் கற்பனை உருவங்களை உண்டாக்கி அவைகளுக்கு வேதங்களென்றும், புராணங்களென்றும், பைபிளென்றும், கொரான் என்றும் கற்பித நூல்களை உண்டாக்கி இன்னும் பயத்தை அதிகரிக்க நரகமென்றும், மோக்ஷமென்றும் கற்பித்து அத்துடன் நிற்காமல் மறு ஜனனமென்றும், உயிர்த்தெழுதலென்றும் கட்டுக்கதைகளைக் கட்டி அதனால் கற்பிக்கப்பட்ட பயத்தைப்போக்க விதி விலக்குகளையும் மந்திர தந்திரங்களையும், பூசைச் சடங்குகளையும் சேர்த்துப் பாமர மக்களை மூடப்பழக்கவழக்கங்களில் ஆழ்த்தி, அதனால் தங்கள் ஜீவனத்தையும் நடத்திக்கொள்ள

ஏற்பட்டனர். இவ்விதமாகத்தான் உலகில் இருக்கும் பாதிரிகளும், பார்ப்பனரும், மௌலானுக்களும், மந்திரி தந்திர குருக்களும் தோன்றினரென அறிக. (Around this single fiction of a word God, arose the whole of the world,s religion and phylosophical system with their stupendous worship, rituals and prayers) இந்த வொரு கற்பனைச்சொல்லாகிய "கடவுள்" என்ற வார்த்தையின் மேல் தான் எழுந்தன. எல்லா உலக மதங்களும், தத்துவங்களும், சரியை கிரியைகளும் பக்த்தியும்முக்த்தியுமென அறிக. (Has there been a greater illusion anywhere else than this?] இதனை விட மாபெரும் மாய்கைவேறெங்குளது?

## இந்தச் சொல்லால் உலகு அடைந்த கதி என்ன ?

மனிதன் உலகில் தோன்றிய முதல் நாளது வரை நடந்த போர்கள் இந்தச் சொல்லால் நின்றனவா? உலகில் நடந்த பெரும்பான்மைப் போர்கள் யாவும் "கடவுள்" பெயரால் புரியப்பட்டன. கொலை, களவுகள், காமம் முதலிய பஞ்சமா பாதகங்கள் குறைந்தனவா? கடவுளுக்குக்கள்ளரும், கொலையாளிகளும், தங்கள் கொலைக்கும், களவுக்கும் "கடவுள்" அருளை நாடுகின்றார்கள். இந்தச் சொல்லுக்காக இட்ட பலிகள் எத்தனை? வியர்த்தங்கள் எத்தனை? மோச நாசவேஷமெத்தனை? சில கடவுளரே, மோசம் செய்ததாகவும் அக்கிரமங்களைச் செய்ததாகவும் புராணங்கள் ஏற்பட்டுள. இத்தியாதி அகோரகாரியங்களைப் பதிவு செய்துள்ள புராணங்களெத்தனை? இவைகளெல்லாம் ஈனச் சுருதிகளென்றால் ஏன் இவைகளைக் கொளுத்திச் சாம்பலாக்கலாகாது.

# உலகத் துயரத்திற்கு யார் ஜவாப்தாரி?

உலகில் உயிர்கள் படுந்துயரத்திற்கு யார் ஜவாப்தாரி? பசுவைப் புலி பிடித்துத் தின்னவும், தேரையை பாம்பு பிடித்துத்தின்னவும், இவைகளை மனிதன் பிடித்துத் தின்னவும் யார் கட்டளை யிட்டனர்? இந்தக் கொடூரக்காட்சியை விடவா வேறு உளது? நோய், வறுமை, பஞ்சம், புயல், வெள்ளம் முதலிய இயற்கைச் சம்பவங்களால் மாந்தருக்கு எவ்வளவு இம்சை? இந்த இம்சைக்கு யார் காரணம்? பேய்கணங்கள் (Devils) இவைகளுக்குக் காரணமென்பார் சிலர். ஆனால் பேய்க்கணங்களையார் சிருஷ்டித்தது? பசுவை சிருஷ்டித்த போது புலியையும் சிருஷ்டித்தது போல் மனிதனைச் சிருஷ்டித்த போது பேயையும் சிருஷ்டித்தார் போலும்? உலகில் துன்பம் தோன்றிய காரணம் தெரியாதென்பார் சிலர். ஆனால் சுகம் தோன்றியது யாரால் என்று வினா எழுமன்றோ?

கடவுளை தயாபரன், சர்வரக்ஷகன், ஆபத்பாந்தவன், அன்பன், என்ற மாத்திரத்தில், இந்தக்கொடுமைகளை மறக்க முடியுமா? 60,000 சமணர்களைக் கழுவில் ஏற்றினது கடவுள் பெயரால் அன்றோ? கோடான கோடி பிசாசு பிடித்தவர்களென்று பெண்மக்களை அடித்துக் கொன்றது "கடவுள்" பெயரால் அன்றோ? கிறிஸ்தவரும், மகமதியரும் கோடி கோடியாக 500 வருஷ காலம் (Crusades) என்ற கொடும் போரில் மாண்டது "சாமி" பெயரால் அன்றோ? "சாமி" பெயரால் எத்தனை கோவில்கள் கட்டிடங்கள் இடிந்தன? எத்தனை நாடுகள் நகரங்கள் நாசமாயின? அவரவர்கள் "சாமி"க்காக இன்றைக்கும் நமது

நாட்டில் எத்தனை தலைகள் உருளுகின்றன? ("Religious Persecutions") என்ற சிறு புத்தகத்தை வாசியுங்கள். அதனைப்படித்து அழாத குழந்தைகள் உண்டா? ஆண் உண்டா? பெண் உண்டா? (Massacre of St. Barthalomew] என்ற கொடுமையால் "கடவுள்" பெயரால் கொல்லப் பட்ட குழந்தைகளையும், ஆண் மக்களையும், பெண் மக்களையும் சிந்திக்க, சிந்திக்க, இந்தப் பாதகநிகழ்ச்சிகளுக்காக, இக் கொடும் பாதகக் கடவுளென்ற கற்பனைச் சொல் தோன்றியது என்று கேட்க வேண்டி வருகிறது? இந்த ஒரு சொல்லால், உலகில் விளைந்த தீமைகளுக்கு கணக்கே இல்லை. இந்த ஒரு சொல்லால் மனித பூண்டே தற்கொலை புரிந்து கொள்ளும் போலும்!

வேறு எந்த நன்மையாகிலும் கடவுளால் விளைந்ததா? ஒரு "நன்மை" தான்கண்காட்சியாகப்பார்க்கின்றோம். அதாவது மக்களில் சிலரே கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டு உலக சுக போகங்களை அனுபவிக்கின்றார்கள். இன்னுஞ்சிலர் கடவுள் பெயரால் பெரும் பான்மை மக்களை மூட பக்தியில் ஆழ்ந்து கிடக்கச் செய்து அதனால் ஜீவித்து வருகின்றார்கள். இச் சிறு பான்மையோரைத் தவிர மற்ற பெரும்பான்மையோரில் யார் இன்புற்று சுகித்து வாழ்கின்றனர்?

இந்தக்குற்றச் சாட்டுக்குபக்தர்கள் என்ன சொல்லுகின்றார்கள்? கடவுள் என்ற பயம் இல்லாவிடில் கொலை, களவு முதலிய சமூகத தீமைகள் அதிகரிக்குமாம்! 1. உலகில் தான தருமம் இல்லாமற்போகுமாம்! 2. உலகில் அழகு (Beauty) கோரிக்கை(Hope) மதிப்பு (Value) நன்மை (Goodness) இல்லாமற் போகுமாம்! 3. மக்களுக்குள் அன்பே (Love) குறைவு படுமாம்! 4. நீதியும்

தெறியும் மதிப்பற்றுப் போகுமாம்! 5. இந்த வாதத்தில் எவ்வளவு உண்மை உண்டென்பதை ஆராய்வோம்.

ஒன்று. உலகில் "கடவுள்" எண்ணம் இல்லாவிடில் கொலை, களவு அதிகப்படுமாம்! இந்த சமூக குற்றங்களை (Social crimes) தற்போது யார் மிகுதியாகச்செய்து வருகின்றனர்? ஜெயிலில் (Jails) அடைபட்டுக் கிடக்கின்றவர்களில் மிகுதியும் ஆஸ்திகரா? அல்லது நாஸ்திகரா? மதங்கள் தழைத்தோங்கி இருந்த காலத்தில் கொலையும், களவும் அதிகரித்திருப்பானேன்? சமூக குற்றங்களை அந்தக் காலங்களில் மிகக் கொடுமையாகத் தண்டிக்கப் பட்டதேன்? இது நிற்க கண்ணுக்கு அகப்படாத கொலையும், களவும், மோசமும் மிகுதியாக யார் செய்கின்றனர்? கடவுளை வணங்குவோரா? அல்லது கடவுளை நிந்திப்போரா? யாதொரு தொழிலும் புரியாமல், ஏழைத் தொழிலாளரின் கூலியை வஞ்சிப்போர் யார்? போரில் கொலை செய்வோர் யார்? கொள்ளை அடிப்போர் யார்? வர்த்தகத்தில் பொய்யும் மோசமும் அதிகமாகச் செய்வோர் யார்? பெரும்பான்மை கொலையாலும், கொள்ளையாலும்,மோசத்தாலும்சேமிக்கப்பட்ட சொத்திலிருந்தன்றோ "சாமி" கோவில்களுக்கும் திருவிழாக்களுக்கும், தூப தீப நிவேதனங்களுக்கும், வேதியருக்கும், வேந்தர்களுக்கும் செலவிடப்படுகின்றன? பல கோடி பல்லாயிரம் பேர் உழைப்பை அபகரித்த (Exploited wealth) செல்வத்திலிருந்தன்றோ, சோம்பேறி மடங்களும், அன்னச் சத்திரங்களும், சாவடிகளும் கட்டப்படுகின்றன? எந்த விதத்தில் செல்வம் வந்தாலும் பார்ப்பானுக்குப்பலதானமிட்டால்எல்லாப் பாவங்களும் தொலையுமென்ற பித்தலாட்டம் ஆஸ்திகர்களாலன்றோ செய்யப்பட்டு வருகின்றது?

உண்மை எதுவெனில், சமூகப் பழக்கவழக்கங்களே, கொலைக்கும், களவுக்கும் மற்ற குற்றங்களுக்கும் காரணம். அதே சமூகக் கட்டுப்பாட்டால், கொலையும், களவும் தடைபடுகின்றனவே யொழிய கடவுளாலு மல்ல, கோவில்களாலுமல்ல, பக்தியாலுமல்ல, முக்தியா லுமல்ல. இன்றைய தினமே, சேவகரும் சிப்பந்திகளும், சட்ட திட்டங்களும் ஒரு க்ஷணப்பொழுது விலகி நிற்கட்டும்! நமது சமூகம் காட்டு மிராண்டித்தன்மைக்கும் கேவல நிலைமையில் போகுமென்பதற்குத் தடையில்லை. மனிதர் செய்யும் சட்ட திட்டங்களாலும், விதி விலக்குகளாலும், பழக்க வழக்கங்களாலும், சமூகத்தில் கொலை களவு தடை பட்டு வருகின்றனவே ஒழிய கடவுள் பயபக்தியாலுமல்ல. நரக மோட்சத்தாலுமல்ல. "கடவுள்" என்ற சொல் இந்த நிமிஷமே உலக பாஷைகளினின்றும் நீக்கப் பட்டாலும், உலகம் இன்றைக்கு இருந்த வாறே நாளைக்கும் அதற்கு அப்பாலும் இருக்கும். கடவுள் பக்தி நெறியும் கடவுள் முக்தி நெறியும் கேட்டறியாத மிருக உயிர்கள் தத்தம் இனங்களை கொலை, களவு செய்யாத காட்சியே, ஆஸ்திகர் கூறும் மூட வாதத்தை மறுக்கப் போதும்.

தன் இனத்தைக் கொன்று, களவாடும் மிருகங்களைப் பார்த்து மறியோம். கேட்டுமறியோம். ஆனால், கடவுள் பக்தர்களிடமே இச்சமூகக் குற்றங்களைப் பார்க்கின்றோம். கடவுள் ஆணையாலா, நமது ஜன சமூகம் விஷமுண்டு சாகாமல் இருக்கின்றது? அல்லது விஷமுண்டால், சமூகம் அழிந்து போகுமென்ற பயத்தாலா? வாழ்வின் பேரில் வைத்துள்ள ஆசையால், மனித கூட்டம் கொலைகளவு அதிகமாகச் செய்யாமல் வாழ்ந்து வருகின்றது. இதுவு மன்றியும், விஷமுண்ட சமூகம் நசித்து விடுவதைப்போல், கொலை

களவு, செய்யும் சமூகம் நசித்து விடுமாகையால் சமூகங்கள் நாசமடையாமலிருக்க, கொலை களவு செய்யாமலிருக்கின்றன. கடவுள் ஆணையால் அல்ல.

இரண்டாவது. நரக பயமும், மோட்ச ஆசையும் இல்லாவிடின், உலகில் மனிதர் தான தருமம் செய்யாமற் போவார்களாம். இதற்கு நாஸ்திகர் விடை என்ன வெனில் தான தருமமே உலகில் செய்யப்படாது. தான தருமம் மக்களை சோம்பேறிகளாக்கி விடுகிறது. மக்களுடைய சுயமரியாதையையும் கெடுத்து விடுகின்றது. (Charity Demoralises both the giver and the taker) தருமம் கொடுப்போனையும் வாங்கு வோனையும் இழிவு படுத்துகிறது என்றார் ஓர் ஆங்கிலப் பெரியார். "ஏற்பது இகழ்ச்சி" என்றார் நமது பெரியவரும்.

தானத்திற்குக் காரணம் வறுமை. வறுமைக்குக் காரணம் பொருளாதாரக் குறைவு. இந்தப் பொருளாதாரத் தாழ்வை நீக்காமல் ஏழைத்தொழிலாளரைக்கொள்ளை கொண்ட செல்வத்தைக் கொண்டு அந்த ஏழைத்தொழிலாளிகளுக்கே தானமிடுவதென்றால் இதனைவிட வஞ்சகம் எங்குளது? தருமம் தலைகாக்கும் என்ற அதர்மச் சொல்லும், குருமார் பிழைக்க வேண்டி கற்பிக்கப்பட்டதென அறிக.

மூன்றாவது. அழகான பொருள்களையும் நல்ல கோரிக்கைகளையும், மதிப்பும், நன்மையும் உலகில் தோன்றாதாம், கடவுள் இல்லாவிடில்! இதற்கு நாஸ்திகர் ஒரு ஆக்ஷேபணை கூறுகின்றனர். உருவமற்ற கடவுளுக்கு அழகிய உருவம் எப்படித் தோன்றும்? கடவுளால் தான் அழகைக் கண்டு ஆநந்தி

க்கின்றோம் என்றால் அகோரத்தைக் கண்டு யாரால் வெறுக்கின்றோம்? ஒரு சமூகம் எந்த அழகை மதிக்கின்றதோ அதையே மற்றோர் சமூகம் வெறுக்கின்றது. தேளுக்குத் தேள் அழகானால் நமக்கு ஏன் அது அகோரமாகத் தோன்றுகின்றது? இதற்கு நாஸ்திகர் விடை யாதெனில் அழகும் அகோரமும் (Beauty and Ugliness) அவரவர் பழக்கத்தை அனுசரித்தவை. எந்தசமூகத்தில், எந்த வஸ்து அழகென பழக்கத்தில் கருதப்படுகின்றதோ அந்த சமூகத்திற்கு அது தான் அழகு. அதனையே வேறோர் சமூகம் அகோரமென்று வழங்கினால் அது அந்த சமூகத்திற்கு அதுவே அகோரம். ஒரு பொருளை ஒரு சமூகத்திற்கு அழகாகவும் அதனையே மற்றோர் சமூகத்திற்கு அகோரமாகவும் தோன்ற "கடவுள்" செய்தார் என்றால் அது நகைப்புக்கிடமாகும்!

இது நிற்க, கடவுள் பெயரைக் கேட்டறியாத மிருகம், பட்சி, புழுப் பூச்சிகளும் அழகை அனுபவிப்பதாக யூகிக்கப்படுகிறது. உயிர் நூலாசிரியராகிய டார்வின் இதனை விரிவாக எடுத்துரைத்திருக்கின்றார். அழகும் அகோரமும் கடவுளால் ஏற்பாடு செய்யப்பட்டவைகள் அல்ல. இயற்கையாகவே மனிதருக்கும் மிருகங்களுக்கும் உண்டான கிளர்ச்சி. அழகைக் கண்டு ஆநந்திப்பதும், அகோரத்தைக் கண்டு அருவருப்படைவதும், கடவுளால் அல்ல. (Natural Selection) என்ற இயற்கை தேருதலால் உண்டானவை. இதனை (Descent of Man) என்ற அவருடைய அரிய நூலில் நிரூபித்திருப்பதைப்படித்துத் தெரிந்து கொள்ளலாம். டார்வின் முழு நாஸ்திகர் அல்ல. இந்த ஞாயங்கள் மனித கோரிக்கைக்கும் மதிப்புக்கும் பொருந்தும். கோரிக்கையும் மதிப்பும் அந்தந்த நாகரீகத்தை அடுத்தது. வேட்டைக்காரனுக்கு வேட்டை மேல் கோரிக்கையும், மதிப்பும், எவ்வ

ளவு தந்திரமாகமிருகங்களைக் கொல்லலாம் என்பது, அவனது கோரிக்கை. ஆனால் கவிஞனுக்கோ எவ்விதமாக சொற்களை அடுக்கலாமென்பது இவனுடைய கோரிக்கை. இதில் எது உயர்ந்தது? எது தாழ்ந்தது? கோரிக்கை ஒன்றல்ல பல. அவை கால தேச வர்த்தமானங்களுக்குட்பட்டவை. கடவுளால் அமைக்கப்பட்டவை அல்லவே யல்ல.

நான்காவது, கடவுள் எண்ணம் மனிதர் உள்ளத்தில் தோன்றுவிடில் அன்பு (Love) காருண்யம் (Kindness) தயை (Charitableness) மனிதருக்குத் தோன்றுதாம்! நாஸ்திகன் விடை பின் வருமாறு:— இந்த நன்னடக்கைகள், மனிதர் உள்ளத்தில் தோன்றி யிருப்பதோடு, கடவுள் என்ற வார்த்தையை அறியாத மிருகாதிகளிடத்தும் தோன்றின. ஒன்றுக் கொன்று உதவி, அன்பு, ஈகை, ஒற்றுமை புரிந்து நடப்பதை மிருகங்கள் வாழும் இயற்கை இடங்களில் பார்க்கலாம். நன்றியுள்ள நாய்கள் பல. துணைவியை விட்டுப் பிரியாத பட்சிகள் பல. மனிதனுக்குத் தான் இந்நடவடிக்கைகள் உரித்து என்று சொல்வதெல்லாம், அறியாமையாலும் (Ignorance) மனிதன் உயர்ந்தவன் என்ற ஆணவத்தாலும் (Human conceit) பிதற்றும் வார்த்தைகள், ("Mutual Aid by Prince, Kropotkin") என்ற புத்தகத்தை வாசித்து ஆஸ்திகர் தங்கள் மருளைப் போக்கிக்கொள்வார்களென நம்புகின்றோம்.

## நன்னடத்தைக்கு ஆதாரம்.

நடத்தை (Behaviour) எல்லா உயிர்களுக்கு முண்டு. அது நல் நடத்தையாக இருக்கலாம். ஆனால் நல்ல தென்பதும், கெட்டதென்பதும், அனுபவத்தில் தான் தெரிந்து

கொள்ள முடியும். பொதுவாக, எந்த நடத்தைஜீவனை வாழ வைக்கின்றதோ, அது அந்தஜீவனுக்கு நல்ல நடத்தையாகும். எந்த நடத்தைஜீவனை நாசமாக்குகின்றதோ அது துர் நடத்தையாகும். இது தான் நடத்தைகளுக் குள்ள வித்தியாசம். எந்த ஜீவராசிகளில் அன்பு, ஈகை, தயை, காருண்யம் அதிகமாக விளங்குகிறதோ, அந்த ஜீவன் ஜீவித்து வாழ்ந்தும் இந்த நடத்தைகள் இல்லாத ஜீவ ராசிகள் நாசமடைவதும், கண்காட்சி. எது போலெனில் பள் ளத்தில் நின்ற ஜலம் பள்ளத்தில் தங்குவதும், மேட்டில் பட்ட ஜலம் ஓடிப்போவதும், ஜலத்தின் நடவடிக்கையால் உண்டா கின்றது. அது போலவே சில நடத்தைகளால் அழிவுறுகின் றூர்கள். அதுவும் இயற்கை. எதற்கும் கடவுள் வேண்டாம், கடவுள் அருளும் வேண்டாம்.

கோடான கோடி வருஷங்களாகக்கோடான கோடி மிரு கஜீவன்கள் கடவுளென்ற பெயரைத் தெரியாமலே வாழ்ந்து வந்திருக்க இன்று முதல் அந்தப் பெயர்மக்களுக்குத்தெரியா மற் போனுல் என்ன? இன்றும் மனிதனுக்குத் தாழ்ந்துள்ள உயிர்கள் கடவுள் பதத்தைக் கேட்காமலே சுகதுக்கத்தோடு வாழ்ந்து வருகின்றன. மனிதனும்இந்தசொல்லைமறந்தும்உயிர் வாழ்வதற்கு என்ன தடை? கடவுளென்ற சொல் இல்லாமலே பல ஆயிரம் வருஷம் வாழ்ந்து வந்த மனிதன் நாளைக்கும் வாழலாம். அந்த சொல்லை மறந்து விட்டாலும் மகத்தான பிரளையத்தால் மக்கள் அடித்துக்கொண்டு போகப்போவதி ல்லை. உலகில் மக்களுக்குள் காணும் நன்மையும் தின்மை யும், அன்பும், ஆசையும் நன்றியும் விசுவாசமும் ஓடிப்போகப் போவதில்லை. கை, கால் முதலிய அவயவங்களுடன் வாழ் ந்து வருவதைப்போல் சாந்தத்துடன், சமாதானத்துட னும், மனிதன் வாழ்ந்து வருவான். சிற்சில காலங்களில்

புயலும், வெள்ளமும் மக்களை வருத்துவதைப்போல் சண்டையும் போரும்சிற்சில சமயங்களில் மக்களை வருத்தும். ஆனால் வெளிச்சமும் குளிர்ச்சியும் மற்ற காலங்களில் உலகில் நிலவி வருவதைப்போல், ஈகையும், தயாளமும் மக்களிடத்து நிலவியே வரும். அதற்கும் கடவுள் வேண்டாம், இதற்கும் கடவுள் வேண்டாம்.

எத்தனையோ மூடநம்பிக்கைகள் மக்களிடத்து தோன்றி மறைந்தன. உலகப்போக்கில் அநேக மூட நம்பிக்கைகள் குறைந்து வருவதைப்போல் "கடவுள்" நம்பிக்கையும் ஒரு காலத்தில் மக்களை விட்டுப்போகும். இந்த நாட்களில் எந்த நாகரீகமடைந்துள்ள மனிதன், மழை இந்திரனாலும், காற்று வருணபகவானாலும், இடியும் மின்னலும் இடி மன்னனாலும் உண்டாகின்றதாக நம்புகின்றான்? அம்மையும், நோயும், பிளேக்கும், காய்ச்சலும், மாரியாத்தாளாலும் மகாமாரியாலும் உண்டாவதாக எந்த அறிஞன் நினைக்கின்றான்? கோயில்களுக்கும் குளங்களுக்கும் முன்போல் யார் போகின்றார்கள்? சந்தியாவந்தனம் செய்யும் பிராமணனும், கோயில்களுக்குப்போகும் பக்தர்களும் குறைந்தே வருகின்றனர். டீன் இஞ்ஜே (Dean Inge) என்ற பிரபலபாதிரி, கிறிஸ்து நாட்டில் நாஸ்திகம் பரவி வருவதையும் பார்த்து, வருந்துகின்றார். ஆனால் நாஸ்திகம் பரவிவருவதால் நமது உலகம் ஒரு பெருத்த மாய்கையினின்று மீண்டு தெளிவு பெறும் என்பது நிச்சயம். அதனால் யாதொரு கெடுதியும் உலகிற்கு நேரிடாது.

நேற்று நடந்த புயல்காற்றால் நமது தமிழ்நாட்டுக்குப் பெருத்த உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் நேரிட்டது. அதற்காக யாரும் கடவுளைக் கட்டிக்கொண்டு அழவுமில்லை,

துதித்து வணங்கவுமில்லை. கஷ்டநஷ்டப்பட்டோருக்கு எவ்வி தம் உதவி செய்யலாம் என்றமுயற்சிதான் மேலிட்டுவருகிறது. புயல் உண்டானதற்கும் கடவுள் வேண்டியதில்லை. அதன் வேகத்தால் நேர்ந்த கஷ்டங்களை நிவர்த்திக்கவும் "கட வுள்" வேண்டுவதில்லை. நமது முயற்சியே வேண்டும். "தெய்வத்தால் ஆகாதெனினும் மெய்வருந்தக் கூலிதருமென் ருர்" நமது தமிழ்நாட்டுக்கவிஞர். இதனுல் நமது முயற்சி தெ ய்வத்திற்கும் மேற்பட்டதெனப் பெறப்பட்டது நமது முயற்சிக்கு தெய்வம் இருந்தாலென்ன? இல்லாவிட் டாலென்ன?

## ஆஸ்திகத்தின் அபாயம்.
## Dangers of Theism.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாஸ்திகத்தின் வொன்று தெரி விக்கின்ருன். அதாவது கடவுள், பேய், பிசாசு, மோட்ச நாக முதலிய கற்பிதங்களால் மனிதனுடைய முயற்சி குறைவ டைகின்றது. அறியாமை அதிகப்படுகின்றது. மெஞ்ஞானம் தடைபடுகின்றது. இதனுல் "கடவுள்" என்ற கற்பனைச் சொல் (IS not only a negative evil, but it is positively harmful for the race) அதாவது நன்மைக்கு நாஸ் திக பட்சமாக இருப்பதுடன் உலக மக்களுக்கே கெடுதியை விளைகின்றது. இதனை எந்த ஆஸ்திகனும் மறுப்பதற்கில்லை. The Atheist Challenge the theist to point out one Single goodness that benifitted mankind during all the religious history of the human race. நாஸ்திகன் ஆஸ்திகனை நோக்கி மதசரித்திர கால முழுமையும் ஸ்திகத் தால் உலகிற்கு ஒரு நன்மையாகிலும் நேர்ந்ததைக்காட்டுமின் என்று சவால் இடுகின்ருன், இதற்குத் திருப்திகரமான

விடை எந்த ஆஸ்திகரும் கூறினர் இல்லை. மதங்களால் மாண்ட உயிர்களையும், அழிந்த நாடுகளையுந்தான் காட்ட முடியும்! (The blood of the martyrs is the seed of the Church) அதாவது "வதைப்பட்டோர் ரத்தமே கோயில்களின் அஸ்திவாரம்" என்ற ஆஸ்திக மொழியுண்டு. இதைத்தான் கடவுளால் நேர்ந்த நன்மை என்று ஆஸ்திகர் காட்டலாம்! மதங்களால் நேர்ந்த கொடுமைகள், கொலைகள், நாசங்கள், இடி, மின்னல், புயல் பஞ்சங்களால் நேரிடவில்லையென்றால் கடவுள் பேரால் நேர்ந்த கொடுமைகளை மறப்பதெப்படி? (Whatever may be his future, we can never forget his past.) அதாவது "இனி கடவுளால் என்ன நடந்தாலும் அவர் முன்செய்தகாரியங்களை மறக்க முடியாது" என்றார் ஒரு பெரியார்!

## நாஸ்திகத்தின் நன்மை.
## (The Benifit of the Atheism)

ஆஸ்திகத்தின்தீமை இவ்வாறிருக்கநாஸ்திகத்தின்நன்மையைசற்று நோக்குவோம். இதுவிஷயமாக பிராட்லா என்பார். (Humanity's gain from unbelief] என்ற நூலில், நாஸ்திகத்தால் உலக மடைந்துவரும் நன்மைகளை விளக்கிவுள்ளது. ஈங்கு அதனைச் சுருங்க உரைப்பாம்.

1. அடிமைத்தனம் (Slavery] அதாவது மக்களை விலங்குகளைப்போல் விற்கவும், வாங்கவுமான ஸ்தாபனம் நாஸ்திகத்தால் ஒழிக்கப்பட்டது. எல்லா மதங்களும் அதனை ஆதரித்தும் பாராமுகமாய் இருந்தும் வந்தன.

2. நோய்கள் [Disease] பேய் பிசாசுகளால் [Evil-Spirit] உண்டாவதாக நினைத்துவந்த மூடநம்பிக்கை மிகுதி

யாக உலக முழுமையும் ஒழிந்தது. இந்த மூடநம்பிக்கையை மதங்கள் வளர்த்து வந்தன.

3. தெய்வமாடுதல், குறி சொல்லுதல், ஜோசியம் முதலிய பித்து வழக்கங்கள் நாஸ்திகத்தால் குறைவுற்றன.

4. பிசாசு பிடித்தவர்களென்று மந்திரக்காரர்களையும் பைத்தியக்காரர்களையும் கொன்று இம்சிக்கும் பழக்கத்தை நிறுத்தியது நாஸ்திகமே.

5. அபிப்பிராய வித்தியாசத்தால் நேரிடும் கொலைகள் குறைந்து வருவதும்நாஸ்திகத்தால்.

6. பஞ்சம், தரித்திரம், வறுமை முதலிய கஷ்டங்கள் கடவுள் கோபத்தால் உண்டாவதாக எண்ணிவந்த மூட நம்பிக்கை ஒழிந்ததும் நாஸ்திகத்தால்.

7. கொடுங்கோல் மன்னர் ஆணவத்தை அடக்கி வருவதும் நாஸ்திகமே.

8. சுதந்திரம், சமத்துவம் முதலிய தாராள நோக்கங்கள் உலகில் பரவி வருதல் நாஸ்திகத்தால் (Question Not) கேட்காதே என்ற ஆணவத்தை எதிர்த்து விசாரிக்கும் மனப்பான்மையை வளர்ப்பதும் நாஸ்திகமே.

9. அக்கிரமம், அநியாயம், அறியாமை, தயைதாட்சண்யமின்றி ஒழிக்கப்பட்டுவருவதும் நாஸ்திகத்தால்.

10. கோடானகோடி பசித்து வருந்திக் கிடக்கும் மக்களுக்கு "மூடப் பழக்கங்களிலிருந்து எழுங்கள். ஊக்கத்தையும், தைரியத்தையும் கைவிடாதீர்கள். உலகிற்கும், உங்களு

க்கும் பொருளாதாரத் தாழ்வால் வந்திருக்கின்றது கேடு, அதனைப் போக்கி உலக முழுமையும் களஞ்சியமாகும் கல்வியும், சாந்தமும், சமாதானமும், நிலவச் செய்யுங்கள்'' என்று கூவி அழைப்பதும் நாஸ்திகமே.

## நாஸ்திகர் மாளிகை.

## The Edifice of the Atheist.

173486

சென்ற நூற்றாண்டில் லாப்லெஸ் என்ற பெரியார் (Laplace) புகழ்பெற்றவோர் பிரஞ்சுவானசாஸ்திரி பிரபஞ்ச வரலாற்றைத் தனது வெண்மேக சித்தாந்தத்தால் (Nebular Hypothesis) விளங்கச் செய்தார், அக்காலையில் பிரஞ்சு தேச சக்ரவர்த்தியும் பிரக்கியாதி பெற்ற போர்வீரனுமான நெப்போலியன் (Napolean) லாப்லெஸை நோக்கி உமது வானத் திட்டத்தில் கடவுளுக்கு ஏன் இடம் கொடுக்கவில்லை என்று வினவினார். அதற்கு அவர் என்னுடைய வானமாளிகைக்குக் கடவுள் அனாவசியம் என்றாராம். இன்று விஞ்ஞான பிரபஞ்சக் கட்டடத்தில் கடவுளுக்கு வேலையொன்றுமில்லையென்று நாஸ்திகன் உறுதியாகச்சொல்ல ஆதிக்கம் பெற்றுள்ளான்.

## பிரபஞ்ச வரலாறு.

அணுக்கள் சையோகத்தால் நட்சத்திரங்களும் சூர்ய சந்திரரும் மற்றவான உலகங்களும் உண்டாகின்றன. இந்த மகத்தான காரியங்களில் ஒன்றிலாகிலும் கடவுளைக் காணோம்.

அதே அணுக்களும், அணுமபக் கூட்டங்களும் கூடி நமது உலகமும் அதிலுள்ள மலை, கடல், வனாந்திரங்களும் உண்டாயின. இந்த சமயத்தில் கடவுள் இருந்தாரில்லை.

நமது பூமி பக்குவ மடைந்த காலை சிறுகிருமிகளும் அவைகளிலிருந்து தாவரங்களும், பிராணிகளும் (Plants and Animals) உண்டாகி அவைகளிலிருந்து புல், பூண்டு விருட்சங்களும் புழு, பூச்சி, பட்சி, மிருகம், மனிதனுட்பட பரிணமித்து வந்தன. இந்தச்சமயத்திலும் கடவுளொருவர் இருந்து உயிர்கள் அடைந்த பரிணும வேலையை நடத்தியதாகத் தெரியவில்லை.

மனிதன் மிருகத்திலிருந்து பெறப்பட்டதும் நிலத்தில் நடந்து வளைந்த முதுகை நேர்நிமிர்த்திக் கொண்டு கைகால்களைக் கொண்டு சிற்சில கருவிகளைச் செய்து தனது அக்கம் பக்கம் விரோதிகளாகிய மிருகங்களைக் கொன்று ஜனத்தொகை அதிகரிக்கவும் குகைகளை விட்டு குடிசைகளில் தங்கிவாழ ஆரம்பித்தான். தனது மிருகக் கூச்சலைப் பேச்சாகமாற்றிக்கொண்டு உச்சரிக்கும் சொற்களை உபயோகப்படுத்தவும், விவேகமும் அதிகரித்து உழுது பயிர்செய்யவும் கற்றுக்கொண்டு கிராமம், நாடு, நகரங்களில் வாழ ஆரம்பித்தான். இந்த மனிதப்பதவி அடையுங்காலத்திலும் கடவுள் அவனுக்கு உதவி புரிந்ததாகவும் காணேம்.

நாடு நகரங்கள் உண்டானதும் சமூக வாழ்க்கை வேண்டி நீதி நெறிகள் சட்ட திட்டங்களைச் செய்து கொண்டான். இந்தக் காலையிலும் கடவுள் இருந்து மனிதனுக்கு உதவி புரிந்த தாகவும் சொல்ல முடியாது.

அனுல் மிருகங்களைப்போல் இடியையும், மின்னலையும், மழையையும் புயலையும் கண்டு பயந்து வந்தவன் பேசத்தெரிந்தவுடன் இந்த பிரகிருத சம்பவங்களுக்குக்கர்த்தாக்களை கற்பித்து, அவைகளுக்கு இந்திரன், மகேந்திரன், சிவன்,

விஷ்ணு, பிரமன், கடவுள் என்ற பெயரிட்டு அவைகளை வாழ்த்தி வணங்கிவந்தான். இத்தெய்வங்களுக்கு பயந்து அவைகளுக்குக்காவு கொடுத்து, பலி கொடுத்து, அந்தனை வழிபாடு செய்ய மந்திரகாரர்களும், தந்திரக்காரர்களும் ஏற்பட்டனர்கள். இவர்களையும் வணங்கி வந்தான். அறிவு வளர வளர அதாவது பேச்சு அதிகரிக்க அதிகரிக்க இந்த மந்திரக்காரர்களே குருமார்களாகவும், பாதிரிமார்களாகவும், பிராமணர்களாகவும் மௌலானுக்களாகவும் பரிணமித்தனர்.

கூடவே இந்த வேதியருக்கு அடிமைகளாலும், ஏழைகளாலும் மடங்கள், கோயில்கள், மண்டபங்கள் கட்டப்பட்டன.

"கடவுள்" என்ற கற்பிதச்சொல்லும் மனித வளர்ச்சியுடன் வளர்ந்து வந்தது. ஒரு காலத்தில் மனிதனைப்போன்றே கடவுளுக்கும் கோபதாபத்தைச் சாட்டினான். அதற்குத் தனது மோசமும், வஞ்சனையும் பொறுமையும் நன்மை தின்மையும் ஒப்படைத்தான். விசாரணை மிக மிக யுக்தி பெருகப் பெருக முன் கற்பித்த முரட்டு தெய்வங்கள் சத்து சித்து ஆனந்தமாயின. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமான அருள் பெருஞ்சோதியாகவும், அதுவும் இதுவுமல்லாத பரப்பிரம்மமாகவும் இன்னும் பல தத்துவ ஞானிகள் கட்டியுள்ள கற்பனைச் சொற்களும் பரிணமித்தன, இவ்விதமாகத்தான் மதக்கற்பனைகளும் வேதாந்த கற்பனைகளும் தோன்றின.

These are the solid achievements of science and it is upon this impregnable rock that the Atheist builds his edifice. இந்த அழிக்கக்கூடாத மெஞ்ஞான ஆராய்ச்சியால் உண்டான கற்பாங்கின்மேல்தான் நாஸ்திகன்

தனது நாஸ்திக மாளிகையைக் கட்டுகின்றான். இந்த நாஸ்தி கனுடைய மாளிகைக்கு முன் மதங்களின் கற்பனைகளும், தத் துவங்களின் கற்பனைகளும் எம்மாத்திரம்!

## ஆஸ்திக நாசம்.

## [Decay of Theism]

சென்ற 300 வருஷங்களாக ஆஸ்திகன் கட்டிவந்த கற் பனைக்கட்டிடங்கள் ஆஸ்திகனால் ஒன்றுவொன்றாகக் கைவிடப் பட்டு வருகின்றன. பிரபஞ்சத்தை சிருஷ்டி என்றான் ஆஸ் திகன். ஆனால் மெஞ்ஞானம் தனது வெண்மேக சித்தாந்தப் படி உலகம் பரிணமிக்கதென்று காட்டியது. இந்த சித்தா ந்தத்திற்கு முன் சிருஷ்டிக்க கைவிடப்பட்டது.

பூமி, கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்றான். பூமி கர்பநூலோர் (Geologis) நமது பூமியும், அதிலுள்ள கடல், மலை, வனாந்திரங்களும் ஆறு, அருவிகளும் அணுக்கள் சையோகத்தால் உண்டானவை என்று எடுத்துக்காட்டவே இந்த சிருஷ்டி கதையும் ஆஸ்திகன் கைவிட நேரிட்டது.

தனது இந்த இரண்டு கற்பனைகளையும் ஆஸ்திகன் கைவிட நேரிடவும் உயிர்கள் உலகில் சிருஷ்டி இல்லாமல் எவ்வாறு வந்ததென்றான்? ஜீவராசிகள் சிருஷ்டியாகத்தான் இருக்குமென்றான். சார்லெஸ் டார்வின் இந்த ஆஸ்திகனு டைய ஜீவராசிகளின் சிருஷ்டிகளையும் கைவிடச்செய்தார். தனது ஜீவராசி உற்பவ நூலில் (Origin of Species) எல்லா ஜீவராசிகளும் ஒன்றிலிருந்து ஒன்று பெறப்பட்ட விதத்தை நிரூபகம் செய்தார். இதனைக்கண்டு ஜீவராசி சிரு ஷ்டி கதைமேல் வைத்திருந்த வற்றையும் ஆஸ்திகன் இழக்க லானான்.

ஆனால் மனிதன் மாத்திரம் கடவுளைப்போல் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டான் என்று ஆஸ்திகன் வாதித்து வந்தான். 1874-ம் வருஷத்தில் அதே டார்வின் பெரியார் மனிதன் குரங்கிலிருந்து பரிணமித்தவன் என்று அநேக விஷயங்கள் மூலமாக எடுத்துக் காட்டினார். கடந்த 60-வது வருஷமாக செய்து வந்த ஆராய்ச்சியால் (Man is a developed Monkey) அதாவது மனிதன் விருத்தி அடைந்த குரங்கென்று நிரூபிக்கப்பட்டது. ஆஸ்திகன் இனி என் செய்வான்?

இன்னும் இரண்டு கற்பனைகளை ஆஸ்திகன் பிடித்துக்கொண்டிருக்கின்றான். அவைபாவன. ஆதியில் உயிர் முளைத்த விதம் ஒன்று, பிரஞை உண்டான விதம், மற்றொன்று இவ்விரண்டையும் விஞ்ஞானம் ஆராய்ந்து வருகிறது. தெரிந்த வரை, உயிர் என்ற சொல்லும் ஆஸ்திகர் கற்பனை என்றே முடிவு பெறுவதற்குத் தடையில்லை. உயிர் என்பது ஓர் தனிப் பொருள் அல்ல. சில வஸ்துக்களின் சேர்க்கையால் உண்டாகும் ஓர் குணமாகும். இதன் வஸ்துக்கள் இன்னவையென்று தெரிந்தும் அந்த வஸ்துக்கள் எந்த விகிதப்படி சையோகிக்கின்றதென்பது தான் தெரியவில்லை. இந்த விஷயத்திலும் ஆஸ்திகன் கொண்டுள்ள கற்பனைச் சொல்லாகிய "உயிர்" என்பதையும் கைவிடும்படி நேரிடுவது திண்ணம்.

மற்கடம் ஒரு கிளையைவிட்டு மற்றோர் கிளையை தாவிப் பிடிப்பது போல் ஆஸ்திகன் கடைசி கிளையாகிய பிரஞ்ஞையை (Consciousness) தாவிபிடித்து நிற்கின்றான். அதையும் கைவிடவேண்டி நடத்தை விஞ்ஞானி (Behaviourist) ஆஸ்திகனுக்கு எச்சரிக்கை இடுகின்றான். பிரஞ்ஞை அதாவது (Consciousness) என்பதும் ஓர் கற்பனையாகும். அதுவும் "கடவுள்"

"ஆன்மா" "உயிர்" போன்ற கற்பனைச் சொல்லே. பிரஞ்ஞை ஓர் தனிப்பொருளல்ல. பிரஞ்ஞை என்பது நாவும், உதடும், குரலும் மற்றும் சில திரேக உருப்புகளின் அசைவின் (Movement) பயனே பிரஞ்ஞை என்று கூறப்படும். உறத்துப் பேசினால் அது பேச்சு. மெதுவாக தனக்குத்தானே பேசினால் அதுதான் பிரஞ்ஞை, எண்ணம் நினைவு என்று கூறல் வேண்டுமென்கின்றான் நடத்தை விஞ்ஞானி. இதனை அறியாது பிரஞ்ஞையை ஏதோர் மறைபெருளாக்கும் என்று திகைப்பு கொண்டிருந்தீர். உண்மையாகவே மனமென்பதும், ஆன்மாவென்பதும் பிரஞ்ஞை என்பதும் கற்பனைச் சொற்கள்- வாஸ்தவத்தில் உள்ளது திரேக அவையவங்களின் சலனங்களே, கையின் சலனத்தை விளையாட்டு என்பது போலவும், காலின் சலனத்தை நடப்பது என்பது போலவும் தொண்டையின் சலனத்தை அதாவது மெதுவாக பேசுவதை விஞ்ஞானமென்று கற்பித்துள்ளோமென்று நடத்தை மெஞ்ஞானி ஆராய்ச்சியில் நிரூபிக்க ஆரம்பித்தான்.

இவ்விதமாக மெஞ்ஞானம் (Science) ஆஸ்திக கோட்டைகளை கைப்பற்றிக் கொண்டு வருகிறது. விஞ்ஞானம் அடைந்து வரும் ஒவ்வொரு வெற்றியும் நாஸ்திகத்தைப் பலப்படுத்திக்கொண்டு வருகிறது. இந்தக் காட்சியை கண்டுவரும் அறிஞர்களுக்கு உலகம் விரைவில் ஆஸ்திகத்தை விட்டொழிக்கும் என்று தோன்றாமல் இராது.

## இனி நாஸ்திகர் செய்ய வேண்டிய வேலை.

நாஸ்திகர் இது வரை அடைந்துள்ள வெற்றியோடு திருப்தி கொண்டு இருக்கலாகாது. ஆஸ்திகத்தின் வலுவு இன்னும் பூரணமாக ஒழிய வில்லை. அதற்கு மிக்க செல்

வாக்குண்டு. செல்வம், அதிகாரம், நீதி, பத்திரிகை இவை யாவும் அதன் பக்கமிருந்து வருகின்றன. இதனோடு பெரு ம்பான்மை பாமர ஜனங்களும், அறியாமையால் ஆஸ்திகர் சார்பாக நிற்கின்றார்கள். பாமர மக்கள் மூடப்பழக்கங்களி லிருந்து மீண்டும் தெளிவு அடைவதைப்பற்றி அதிகாரிகளு க்கு பயம் இருந்தே வருகின்றது. உலகம் எவ்வளவு மூடத்தன மாக இருந்து வருகின்றதோ அவ்வளவும் மதஸ்தர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அனுகூலம். அதனாலேயே மதமும், ராஜாங்கமும் பிணைபட்டு ஒத்துழைக்கின்றன. ஆஸ்திகர் அரசாங்கத்திலும், மூட மக்கள் மனத்திலும் புகுந்து கொண்டு சென்ற பல்லாண்டாக உழைத்துப் பெறப்பட்ட ஞானத்தை அழிக்க உடன் படுவார்கள். (Kingdom Clifford) என்ற பெரியார் ஆஸ்திகம், மூன்று பண்டைக்கால நாகரீகங்களை அழித்ததாகக் கூறுகின்றார். தற்கால நாகரீகத்தை ஆஸ்தி கம் அழிக்க முயன்றாலும் முயலும்!

ஆதலின் தற்கால உலகம் இருந்து வரும் நெருக்கடியை நாஸ்திகர் கவனித்தால் அவசியம். உணவுப் பொருள்கள் மனமாற அழிக்கப்பட்டு வருகின்றன. கொடுங்கோல் அரசு கள், தாண்டவம் புரிகின்றன. ஹிட்லரிஸம் (Hitlerism) என்றும் பாஸிஸம் (Facism) என்றும் பிற்போக்கான கிளர் ச்சிகள், உலகமெங்கும் பொங்கி வழிகின்றன. இவ்விரண்டு இயக்கங்களும், மதங்களை ஆதரித்து, மக்களை இன்னமும் மூட வைராக்கியத்தில் கிடந்து உழல வைக்க ஆரம்பித்த இயக்கங்கள். இந்த இரண்டு இயக்கங்களால் பகுத்தறிவு கிளர்ச்சிகளால் அடக்கப்பட்டு மூட மதங்கள், பலப்பட்டு வருகின்றன. இந்த இயக்கங்களைப் போன்றது, நமது நாட்டு காந்தீயமெனஅறிக. இந்தியாவில் ஒழிந்து வரும் ஆஸ்திகத்தை தலை நிமிர்த்தி வரும் இயக்கம், காந்தீயமே. பக்தர்களுக்கும்

மூடமக்களுக்கும் முதலாளி கூட்டாத்தார்களுக்கும் ஹுகூம் (Hukum) கொடுத்து வரும் இந்த காந்தீயமே ஒழிந்துவரும் ஜாதி வேற்றுமையை ஒழிய வொட்டாமல் குயுக்தி செய்து வருவதும் இந்த காந்தீயமே. தீண்டாமை ஒழிய வேண்டுமென்பதும், மதத்தை பலப்படுத்தும் ஓர் யூகை என அறிக. The so called Removal of untouchability is a mere device that strengthens religion among the people ஜாதி மதமற்ற கோடி மக்களுக்கு திரும்பவும், எல்லா ஜாதிக்கும் தாழ்ந்த பெயராகிய ஹரிஜனங்களென்று பெயரைக் கொடுத்து அவர்களை மத குருக்கள் விலங்கில் அகப்பட்டு மடியச்செய்வதும் இந்த காந்தீயமே.

நமது இந்தியாவில் இந்த 6-கோடி மக்கள் மற்ற எல்லா சமூகக் கூட்டத்தாரைவிட பொருளாதாரநிலைமையில் தாழ்ந்து இருப்பவர்கள். இவர்களுக்கு வேண்டியது கடவுளல்ல, மதமல்ல, மதக்கற்பனைகளல்ல, ஜாதியல்ல, சமையமல்ல, இவர்களுக்கு வேண்டியது முக்கியமாக வயிற்றுக்குப் போதுமான உணவும், உடுக்க ஆடையும், தங்க வீடும், இருளைப்போக்க வெளிச்சமும், படிக்க கல்வியும் தேக சுகத்திற்கு வைத்திய சிகிச்சையும் வேண்டும். இவைகளைக் குறித்து காந்தியாராகிலும், அவரைச் சார்ந்த கோஷ்டியாராகிலும் ஒரு சொல்லேனும் பேசுகின்றார்களாவெனப் பாருங்கள்? [Therefore the Whirlwind campaign for the removal of untouchability is the greatest hoax and a fraud played upon the 6 crores of our unfortunate countrymen in this unhappy land) அதாவது நமது துர்ப்பாக்கிய நாட்டில் வாழும் 6 கோடி துர்ப்பாக்கிய மக்களை எமாற்ற ஏற்பட்ட இந்த புயல்போல் அடித்துவரும் தீண்டாமையை ஒழிப்பதாக ஏற்பட்ட பிரசாரமென அறிக.

இந்த 6, கோடி மக்களை இந்து மதத்தில் சேர்த்துக் கொள்வதாம்! இந்த 6-கோடி மக்களும் புரோகிதர்காலிலும், கையிலும் அகப்பட்டு மிதிபட வேண்டியதாம். அவர்களுடைய சொற்ப சம்பாதனையிலிருந்து பிராமணனுக்கும், புரோகிதனுக்கும் பலதானமிட வேண்டுமாம்! ஏன்? பல தானமிடாத வீடு பாழாம்! [These are the implications of the Ghandian movement for the removal of untouchability. This is only a common place for the perpetuation of priest craft Religion and God making, among the most ignorant of our countrymen.] அதாவது தீண்டாமையைப் போக்க வேண்டுமென்ற காந்தீயத்தின் உட்கருத்து இதுவே, நமது நாட்டு மூட ஜனங்களில் கடவுள் கற்பனையும், வேதியர் தந்திரமும், மதங்களும் நீடூழிவாழ ஏற்பட்ட தீண்டாமை ஒழித்தலென்ற தந்திரமாகும் தந்திரமென அறிக.

[There is a further danger ahead. The Hindu Mahasabas, the Sanatanists, the Muslim Tablis and Tabiyats, are all going to capture the council constitution, for strengthening their religious bigotry. These are the worst religious reactionaries in this unfortunate land. Beware Comrades, not to lose this opportunity of contesting and capturing every seat in every village panchayet, in every Taluk and District Board, and in every council, local and imperial, and fearlessly expose the sham of religion, the sham of caste, the sham

of religious tyranny and oppression in any form. Above all, defeat this ghandism out of this land, and enthrone in its place, Socialism and Atheism, as the rule of life of the 350 millions of our sisters and brothers in India.) அதாவது அனேக அபாயங்கள் இன்னும் உங்கள் முன் இருக்கின்றது. வரப்போகும் அரசியல் திட்டத்தில் பிற்போக்கு வைதீகக் கூட்டங்களாகிய மகா சபையாரும், சங்கத்தார்களும், சனாதன தார்மிகளும், மகமதிய தப்லீசும் தப்லீசுக்கும் சட்டசபைகளைக் கைப்பற்றப்போகின்றனர். நமது தௌர்பாக்கிய நாட்டில் இவர்கள் பெரும் பிற்போக்குடையவர்கள், ஆதலின் தோழர்களே நீங்களும் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்களையும், தாலூக்கா, டிஸ்டிரிக்ட் போர்டுகளையும் சட்டசபைகளையும் கைப்பற்றுங்கள். அங்கிருந்து மதங்களின் கொடுமைகளையும், ஜாதி தந்திரங்களையும், மத தந்திரங்களையும் எடுத்துக்காட்டுங்கள். முக்கியமாகக் காந்தீயத்தை நமது நாட்டை விட்டு அகற்றுங்கள். அதன் இடத்தில் நமது சகோதரி சகோதர 35-கோடி மக்களுடைய வாழ்வின் திட்டமாக சமதர்மத்தையும், நாஸ்திகத்தையும் நிலை நிறுத்துங்கள்.

# சந்தேகத் தெளிவு.

## 22-ம் அத்தியாயம்.

Federated Malaya States அதாவது மலேயா நாட்டில் வாழும், நமது இயக்கத் தோழர்கள் நமது பிரசுரங்களுக்கு ஆர்டர் கொடுத்து வருகின்றார்கள். விஞ்ஞான விஷயங்களைத் தெரிந்துகொள்ள மிக்க ஆவலுடையவர்களென்றே அவர்கள் கேட்கும் கேள்விகளால் தெரிகிறது. இந்த மனப்பான்மை நமது நாட்டிற்கு நற்காலம் உண்டானதற்கு அறிகுறியாகும் (Curiosity is the mother of Invention) என்றார் நமது ஆங்கிலப் பெரியோர். ஆச்சரியம், அதாவது, தெரிந்துகொள்ளவேண்டிய மனப்பான்மை வந்தால் தான், நமது தேசம் முன்னேற்றமடையும். விஷயங்களைக் கண்டு தெரிய வேண்டுமானால் முதலில் அவாவேண்டும். புதிய விஷயங்களைக் கண்டு பிடிப்பதற்கு மூலகாரணமாயுள்ளது, இந்த வித அவாவே (Curiosity) வேண்டும். இந்த அவா மிருகாதிகளுக்கு முண்டு. ஆனால் மனிதனிடம் முக்கியமாக ஐரோப்பா, அமெரிக்கரிடம் இந்த அவா அதிகமாக விருத்தி அடைந்து வருகிறது. இந்த அவா நம்மிடம் இல்லாமையால் உலக வாழ்வின் பந்தயத்தில் (Life's Race) நமது மக்கள் பின் தங்கி நிற்கின்றனர். கடந்த ஆயிர வருஷகாலமாக நமது நாடு பலருக்கு அடிமைப்பட்டு ஒழுகி வருவதும், இதே காரணந்தான். இந்த அவா மேலிட, மேலிட நமது விலங்கும் ஒழியும். மலேயா நண்பர்களின் அவாவை மூற்

றிலும் தவிர்க்க நம்மால் முடியாதாயினும் நமக்குத் தெரிந்த வரை அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடை பகரு வோம்.

நமது மலேயா தோழர்கள் (Magic) அதாவது மந்தி ரம் என்ற மயக்கத்தைக் குறித்து சில கேள்விகள் கேட்கின் றூர்கள். மாங்கொட்டையிலிருந்து நட்டினவுடனே மாஞ் செடி முளைப்பதாகவும், கீரிப்பிள்ளைதோல், கிளிப்பிள்ளையாக மாறுவதாகவும், மணல், சவரன், பொன் முதலிய வஸ்துக் களாக மாறுவதாகவும், விலங்கிட்ட மனிதன் வெளிவந்ததா கவும், காதில் விட்ட தண்ணீர், குடத்தில் திரும்பவும் நிறைந் ததாகவும் இத்தியாதி ஆச்சரியங்கள் நிகழும் காரணங்களை தெரிவிக்குமாறு கேட்கின்றூர்கள்.

இந்த கேள்விகளுக்குப் பொதுவாக "குடி அரசில்" விடை தெரிவித்துள்ளோம். அதனையும் இந்த விடையுடன் சேர்த்துப் படிக்கலாம். நேற்று வந்த இந்து பேப்பரில் ("Hindu" 14-10-33) கொச்சியிலிருந்து ஒரு சேதி பிரசுரி க்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்விகளுக்கு அந்த சம்ப வம் ஓர்வித விடையாக எடுத்துக்கொள்ளலாம். அதாவது மந்திரக்காரன் ஒருவன் கத்தியால் குத்திக்கொ ள்கின்றேன் பாருங்கள். அதனுல் எனக்கு கஷ்ட மொன்றுமில்லை என்று தனது வயிற்றில் குற்றியதாகவும், அதனுல் அவனுக்கு படுகாய முண்டாகி தன்னை மறந்து வீழ் ந்து விட்டதாகவும், அவனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனதாகவும் (Magic that failed) மந்திரம் பலிக்காமல் போயிற்றென்ற தலையங்க மிட்ட ஓர் சேதி இந்து பேப்பரில் இருந்தது. சென்ற வருஷம் கத்தி, விஷம், ஆணி, முத லிய அபாய வஸ்துக்களை ஒரு சாது விழுங்கியதாகவும்,

அதனால் மாண்டதாகவும் ரங்கூன் சேதி ஒன்று கிடைத்தி ருக்கிறது. இது வன்றியும், பாம்பால் கடியுண்டு மாண்ட மந்திரக்காரனுடைய கதியும் கேட்டுமிருக்கின்றோம். மந்திரக் காரர்களென்று சொல்லும் தந்திரக்காரனுடைய கதி இது வானால் எதனையாவது மந்திரத்தால் நிகழ்ந்தது என்று மதி க்கவும் கூடுமோ? அவனுடைய மந்திரமே அவனையே கொன்றால் அந்த மந்திரத்தின் மகிமை என்ன? இதனால் நாம் தெரிந்து கொள்ளவேண்டியதென்ன வெனில் பார்க்கின் றவருடைய முட்டாள் தனத்தை கருவியாகக் கொண்டு இந்தத்தந்திரத்தை செய்து வந்தான். ஆனால் இன்னமும் அதிகமாக ஏமாற்றலாமென்ற நோக்கத்துடன் தனது தந்திரம் அளவுக்கு மீறிய படியால் அவன் தந்திரம் அவனையேகொன் றது. இது தான் "மந்திரங்களின்" உண்மை.

மந்திரத்தால் மாங்காய் விழுமா? என்று நமது முன்னோ ர்கள் கேட்டு வந்த கேள்வி, நமது காலத்தில் அது ஓர் பழ மொழியாய் விட்டது. நுட்ப பார்வையும், விசாரணையும் பெற்ற நமது முன்னோர்களில் சிலர் ஒட்டுமாஞ்செடி நட்டின வுடனே பூ பூத்து, காய் காய்த்து, பழம் பழுத்த தைக் கண்டு இதுவும் ஓர் தந்திரமென இந்தக் கேள்வியை நாம் உண்மை அறியும்பொருட்டு கேட்டு வந்தார்கள். அதனை அறியாது நமது இன்றைய மக்கள் கோடான கோடி இன் றைக்கும் இந்த சம்பவம் மந்திரத்தால் உண்டாவதாக எண் ணிக் கொண்டிருக்கின்றார்கள். ஆயிரம் வருஷத்திற்கு முந்தி வாழ்ந்திருந்த நமதுமுன்னோர்களுக்குஇருந்து வந்த நுண் ணிய பார்வை இன்று வாழும் நமது மக்களுக்கு இல்லையே என்பது மனவருத்தமுண்டாக்குகின்றது. இதன் உண்மை பின்வருமாறு. ஒட்டுமாஞ்செடி சிலதை பூ பூத்து, காய் காய் த்து, பழம் பழுத்த கிளைகளை கூடையில் மறைத்து வைத்துக்

கொண்டு கொட்டையை நட்டியதும், அதன் மேல் வரிசையாக வளர்ந்த பூத்த, காய்த்த, பழுத்த கிளைகளை நட்டுகின்ருர்கள். இந்தச் செய்கைகளை நாம் பார்க்காதபடிக்கு மேளத்தையும், தாளத்தையும் தட்டிக்கொண்டு நமது கவனத்தை வேறு பக்கம் சேலுத்தும் படி கூச்சலும், இறைச்சலும், சங்கீதங்களும் உபயோகிக்கின்ருர்கள். இதுதான் இந்த "மந்திரக்காரர்" செய்துவரும் உபாயம். அதாவது தந்திரமென அறிக.

தாம்பாளங்களில் மிட்டாய், பணம், பொன், வெள்ளி நாணயங்களைக் காட்டுவதெல்லாம் (Sleight of Hand) என்று வழங்கும் ஜாலவித்தையால் தோன்றும் தோற்றமாகும். போட்டிருக்கும் சொக்காய்க் கைகளிலும் [False pockets) பொய் சேபிகளிலும்இந்தமிட்டாய்களையும்ரூபாய், சவரன் களையும் மறைத்துவைத்து நாம் ஏமாந்திருக்கும் சமயத்தில் ஒரு ரூபாய் இந்தத்தாம்பாளத்தில் அல்லதுஒன்று மில்லாதபடி வைத்து விடுகின்ருர்கள். அந்தந்த தாம்பாளத்தை நீங்களே வைத்துக்கொண்டு ரூபாய்கள் அதில் விழும்படி மந்திரக்காரனை செய்யுங்கள் பார்ப்போம்!

அரையில் பூட்டப்பட்ட மனிதன்எப்படி வெளிப்படுகின்ருன் என்ருல், அவனிடம் சாவிகொத்துகள் இருக்கின்றன. கதவு சந்தில் ஊசியைப் போன்ற சாவிகளைக்கொண்டு அந்தப் பூட்டைத்திறந்து கொண்டு வெளிவருகிருன் இவைகளை யெல்லாம் கண்கட்டி வித்தை என்பார்கள். வாஸ்தவத்தில் நமது கண்களைக் கட்டா விடினும் கட்டியது போல் ஜலாக்காரர், அவர் களுடைய பேச்சால் நம்மை மதிமயங்கச் செய்கின்ருர்கள். அவர்கள் தந்திர உபாயத்தாலும், சில காட்சிகளைச் செய்து மதிமயங்கிய நம்மை ஏமாறும்படி செய்கின்ருர்கள்.

ஜாலவித்தையில் இரண்டு விதமுண்டு. ஒளிமுகமாகச் செய்யப்படும் ஜாலம், உட்புறமாகச்செய்யப்படும் ஜாலம். சாதாரண வளையங்களை(Rings) ஒன்றுக்குள் ஒன்றை மாட்டி அதனை எடுக்கச் செய்வது ஒன்று. இவ்வித ஜால வஸ்துக்கள் அநந்தம் நமது சைனு கடையில் (China Bazzar) விற்கின்றன. கஸ்ய ஏஜாலங்கள் பெட்டியில் போட்ட பெண்ணைக் குத்துவது, பூட்டிவிட்ட பெட்டியிலிருந்துவெளிப்படுத்துவதும் மற்றொன்று. தொம்பரவர், ஒரு மூலைக் கூடையில்ஒரு பெண்ணைவைத்து இந்தப் பக்கமும்அந்தப்பக்கமும் குத்தியும் அவளுக்குக்காயம் படாமல் வெளிவருகிறதைநாமெல்லோரும் பார்த்து வருகின்றோம். இது ஓர் தந்திரம். அவள் இருக்கும் பக்கத்தில், குத்துவதில்லை- அந்தப் பெண் கூடையின் மூலையில் தனது தேகத்தை ஒட்டிக்கொண்டு இருக்கிறாள். அந்த இடம் குத்துகின்றவனுக்கு நன்மை தெரியும். அந்த இடத்தைத் தவிர மற்ற மூலை முடுக்குகளில் அவன் குத்துகிறான். ஆனால் அவன் பேச்சால் எல்லா இடங்களிலும் குத்துவதாக நாம் எண்ணுகின்றோம். இது சாதாரண கழைக்கூத்து மந்திரத்தால் குத்துண்டவனுக்கு கத்தி எட்டவில்லை என்றால், மேல் மூடாமலே நமக்கு முன்பாக அவள் பெட்டியில் இருக்க குத்தட்டுமே பார்ப்போம்! உடனே கொல்ல எத்தனித்தல் என்ற குற்றத்தின் கீழ், வழியில் போகும் சேவகன் அவனைக் காவலில் வைக்க நேரிடும்!! சில வேளையில் இவ்வித காட்சிகள் விளையாட்டிலிருந்து வினையாக முடிகின்றது. தற்செயலாக (Accidentally) குத்தப்பட்டவன் மரணமடைய நேரிடுகிறது. சில தினங்களுக்கு முந்தி, சென்னையில் ஒரு சீனுக்காரன் துப்பாக்கியால் சுடப்பட்டும் அதன் குண்டுகள் அவனைப்பாதிக்காமல் போன காட்சி அனேகர் பார்த்து ஆச்சரியமடைந்தனர். இது மந்திரத்தால் நேர்ந்த சம்பவமென்றால் உலகில் நடக்

கும் சண்டையில் (War) யாரும் துப்பாக்கியால் சாகமாட்டார்களன்றோ? இந்த வித மந்திரமுடையோனுக்கு எந்த ராஜ்யமும் கோடான கோடி திரவியம் கொடுக்குமன்றோ? ஆனல் இவ்வளவு மதிப்புள்ள மந்திரம், ஏன் இரண்டு மூன்று அணுவுக்குக்காட்ட வேண்டும்? இந்த துப்பாக்கிக்காட்சி (Show) ஓர் ஜாலமே. சுடும் துப்பாக்கியில் ரகசிய சேமிகளுண்டு. (Secret pockets) அதில் ரவை குண்டுகள் தங்கி விடுகின்றன. வெறும் சத்தத்தை மாத்திரம் நாம் கேட்கின்ளோம். குண்டுகள் துப்பாக்கியிலிருந்து வெளிவருவதில்லை. இந்த மோசத்தை அறியாமல் இதுமந்திரமென்கின்றோம்!

இதுதான் இதன் ரகசியம். இத்தியாதிமாய வித்தைகளைச் செய்தவர்கள் அநேகர் அவர்களில் பிரபலமானவன் அவுடினி (Howdini) என்பான். அவன் சற்று முன்பே இறந்தான். அவனைப்பற்றி (Connel) கானல் என்பார் ஒருவர் எழுதி அவன் செய்து வந்த பிரபல தந்திரங்களையும் வெளியிட்டுள்ளார். ("States-man" 31st Sept. 1933.) இதுவுமின்றி, (Secrets of famous Illusionists by Wil Goldston) என்ற புத்தகத்தில் அருமையான தந்திரங்கள் எப்படிச் செய்யலாமென்பதையும் தெரிந்து கொள்ளலாம். (It is very much Unveiled by Maskelyn,) என்ற புத்தகத்தில் சென்னை அடையாரிலுள்ள பிரமஞான சங்கத்தில் (Theosophical Society) நடந்த விசேஷ தோற்றங்களின் தந்திரங்களையும் படித்தறியலாம். ஆதலின் மாங்காய் விழுவது மந்திரத்தால் அல்ல, தந்திரத்தாலென அறிக.

173486

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| 2. | லெனினும், மதமும் | 0 | 4 | 0 |
| 3. | பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | கைவல்யம் அல்லது கலைக்கியானம் (இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது) | 0 | 8 | 0 |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியாகாண்டம் | 0 | 8 | 0 |
| 8. | ஞானசூரியன் | 0 | 4 | 0 |
| 9. | தர்ம பரிசை அல்லது புராண ஆபாசம் | 0 | 3 | 0 |
| 10. | மேயோ கூற்று மெய்யா? பொய்யா? | 0 | 3 | 0 |
| 11. | பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை | 0 | 4 | 0 |
| 12. | ஈ.வெ.ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம் | 0 | 2 | 0 |
| 13. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | 0 |
| 14. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 15. | சுயமரியாதைப்பாடல் | 0 | 2 | 0 |
| 16. | கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்) | 0 | 2 | 0 |
| 17. | சுயமரியாதைத் தாலாட்டு | 0 | 2 | 0 |
| 18. | பர்னர்ட்ஷா உபந்யாசம் | 0 | 1 | 0 |
| 19. | சோஷியலிசம் | 0 | 2 | 0 |
| 20. | போல்ஷ்விக் முறை | 0 | 1 | 0 |
| 21. | ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம் | 0 | 0 | 6 |
| 22. | கத்தோலிக்கர் வீண் கூச்சல் | 0 | 0 | 6 |
| 23. | சமதர்ம உபந்யாசம் | 0 | 0 | 6 |
| 24. | சோதிடப்புரட்டு | 0 | 2 | 0 |
| 25. | மனுநீதி விளக்கம் | 0 | 2 | 0 |

விலாசம்:— மனேஜர்,

குடி அரசு பதிப்பகம், ஈரோடு

# பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

---

| | | | |
|---|---|---|---|
| 1. பெண் ஏன் அடிமையானாள்? (ஈ. வெ. ரா.) | 0 | 5 | 0 |
| 2. முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை | 0 | 5 | 0 |
| 3. கடவுள். | 0 | 5 | 0 |
| 4. மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன? | 0 | 3 | 0 |
| 5. பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும் (இரண்டாம் பாகம் அச்சில்) | 0 | 3 | 0 |
| 6. பிரகிருதிவாதம் (ஈ. வெ. ரா.) | 0 | 3 | 0 |
| 7. மதமும், விஞ்ஞான சாஸ்திரமும் | 0 | 3 | 0 |
| 8. பிரபஞ்ச உற்பத்தி | 0 | 3 | 0 |
| 9. நான் ஏன் கிறிஸ்தவனல்ல? | 0 | 3 | 0 |
| 10. நான் சம்சயவாதி ஆனதேன்? | 0 | 3 | 0 |
| 11. மதம் என்றால் என்ன? | 0 | 2 | 0 |
| 12. குடி அரசுக் கலம்பகம் (ஈ. வெ. ரா.) | 0 | 6 | 0 |
| 13. மெஞ்ஞான முறையும், மூடநம்பிக்கையும் (2-ம் பாகம் அச்சில் M. சிங்காரவேலு B. A.,) | 0 | 6 | 0 |
| 14. நான் நஸ்திகன் ஏன்? (பகத்சிங்) | 0 | 3 | 0 |
| 15. பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம் | 0 | 4 | 0 |
| 16. மரணத்திற்குப்பின் வாழ்க்கை உண்டா? | 0 | 4 | 0 |

கிடைக்குமிடம்:—

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் ஈரோடு